# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.








புத்தகம் 19 | திருவள்ளுவர் ஆண்டு 1996 புரட்டாதி திங்கள் 24-ம் நாள் (10—10—1965) ஞாயிற்றுக்கிழமை ஐ. ஆகிர் 14 | இதழ் 20


# தமிழ் மொழி மசோதா மந்திரிசபை பரிசீலனை

## மாவட்டசபை மசோதாவும் பாராளுமன்றத்துக்கு வருகிறது

### வேலையின்மையை நீக்க நடவடிக்கை: அமைச்சர் திருச்செல்வம் தரும் தகவல்

தமிழ் மொழிச் சட்ட விதிகள் நகல் மசோதா தயாரிக்கப்பட்டு, பிரதமர் டட்லி செனநாயகா அவர்களின் மூலம் அமைச்சர் அவைக்கு அனுப்பிவைக்கப்பட்டு, அமைச்சர்களின் பரிசிலனையில் இருப்பதாக, உள்ளூராட்சி மன்ற அமைச்சர் நமது நிருபரிடம் கூறினர். மாவட்ட சபைகளுக்கு எவ்வகையான கடமைகள் வரையறுக்கப்படவேண்டும் என்பதனையும் ஆராய்ந்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழ் மொழி சட்ட விதிகளுக்கான மசோதா மிகவிரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. இதற்கான நகல் தயாரிக்கப்பட்டு பிரதமர் டட்லி செனநாயக்காவிடம் கொடுக்கப்பட்டது. பிரதமர் இந்நகலை அமைச்சர் அவையின் பரிசிலனைக்கு விட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

மாவட்ட சபைகள் மசோதாவையும் சிக்கிரத்தில் பாராளுமன்றத்துக்குக் கொண்டுவர தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். மாவட்ட சபைகள் அமையும் வேளையில் இச்சபைகள் எவ்வாறு இயங்க வேண்டும், எத்தகைய கடமைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்பனவற்றையெல்லாம் ஒரு குழு ஆராய்ந்துவருவதாகத் தெரியவருகிறது. மொழிச் சட்ட விதிகள் மசோதாவும் மாவட்ட சபைகள் மசோதாவும் முறையே ஒன்றன்பின் ஒன்ருக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

#### வேலையற்ற பட்டதாரிகள்

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நிலவும் மிகமோசமான வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கடிக்கவும் அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதனை அமைச்சர் பிரதமரிடம் வற்புறுத்தியிருப்பதாகவும் தெரியவருகிறது. வேலையற்றிருக்கும் பட்டதாரிகளுக்கு உடனடியாக வேலை வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கத்துக்கு சிபார்சு செய்திருப்பதாகவும் அமைச்சர் கூறினர்.



## மூதவை உறுப்பினராக திரு. நடராசா தெரிவு செய்யப்படலாம்

முல்லாகத்தைச் சேர்ந்த பிரபல வழக்கறிஞரும் அண்மையில் சமாதான நீதிபதியாக நியமனம் செய்யப் பட்ட வருமான திரு. சு. நடராசா அவர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் மூதவை உறுப்பினராகத் தெரிவு செய்யப்படலாம் என்று நம்பப்படுகிறது.

திரு. நடராசாவை மூதவை உறுப்பினராகத் தெரிவு செய்வதற்கு தமிழரசுக் கட்சி வட்டாரத்தில் ஒருமித்த கருத்து நிலவுவதாக நமது நிருபர் தெரிவித்துள்ளார்.

திரு. நடராசா இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினர் என்பதும், கடந்தகால அரசாங்கங்களினுல் 1958, 1961ம் ஆண்டுகளில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்

(9-ம் பக்கம் பார்க்க)

## கைத்தறி நிலையங்கள் பதிவு செய்யப்படும்

நாடெங்கணும் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட கைத்தறி நெசவாலைகள் பதிவு செய்யப் படாமல் இருக்கின்றன. இவற்றில் பெரும்பாலானவை வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ளன. இவற்றைப் பதிவு செய்வதென அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இத்தகைய நெசவாலைகளில் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். ஆனுல் அவர்களுக்கு போதுமான வேலை வாய்ப்புகள் கிடைப்பதயில்லை. நூல் வினியோகத்தில் இருந்து வருவதாகக் கூறப்படும் சில சிக்கல்களே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. இக் கைத்தறி நிலையங்கள் பதிவு செய்யப்பட்டுவிட்டால், கைத்தொழில் இலாகா மூலம் போதுமான நூல் வழங்கப்பட வசதி ஏற்பட்டுவிடும். அப்போது தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு ஏற்பட்டு, வருவாயும் அதிகரிக்க வாய்ப்புண்டு.

உள்ளூராட்சி மன்றங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் மூலமாகவும் மேலும். 1000 கைத்தறி நிலையங்களை ஏற்படுத்த அரசாங்கம் கருதியிருப்பதாகவும் தெரிய வருகிறது. இதனுலும் தொழிலற்றிருக்கு தொழிலாளர்களுக்கு வேலைகள் கிடைக்க வழி ஏற்படும் என்றும் கூறப்படுகிறது.

பதிவு செய்யப்படாமலிருக்கும் கைத்தறி நெசவாலைகள் விரைவில் பதிவு செய்யப்பட விருப்பதால் இவ்வாலைகளின் நிர்வாகிகள் கைத்தொழில் அமைச்சுடன் தொடர்பு கொண்டு பதிவதற்கான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் " என்று உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் தெரிவித்தார்.

## தெய்வம் விடை கொடுத்தும் பூசாரி மனமிரங்கவில்லையா?

ஆட்சி மொழியில் தேர்ச்சி பெருத பழைய ஊழியர்களுக்கு மறுக்கப்பட்டிருந்த சம்பள உயர்வுப் பாக்கித் தொகையை வழங்கும் வண்ணம் மேலதிகாரிகள் உத்தரவிட்டுள்ள போதிலும், அவ்வப்பகுதிக்குப் பொறுப்பான சில அதிகாரிகள் அத்தொகையை வழங்காது காலதாமதம் செய்வதாக ஒரு செய்திகிடைத்துள்ளது.

இங்ஙனம் காலதாமதம் செய்யும் பணியை முன்னுள் அரசாங்கத்தின் ஆதரவாளர்களே மேற்கொண்டிருப்பதாகவும் அறியப்படுகிறது. பல திணைக்களங்களில் ஏற்படும் இத்தகைய தடைகளை நீக்க அரசாங்க எழுதுவினைஞர்சங்க முக்கியஸ்தர்கள் தலையிட்டு ஆவனசெய்து வருவதாகவும் நம்பப்படுகிறது.

இச்சம்பளப் பாக்கியைக் கொடுக்காது காலதாமதம் செய்யும் பணியை மேற்கொள்ளும் நேரடி உயர் அதிகாரிகளில் பலர், இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவிலுள்ள 'அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று நம்பப்படுகிறது.

## உணவுச் செய்கைக்கு காணிப் பங்கீடு

### தமிழ்ப் பகுதி நிலங்களின் விபரம்

தேயிலை, தென்னை, இரப்பர் நீங்கிய இதர வியாபாரப் பயிர்கள் அல்லது உணவுப்பயிர்ச் செய்கைக்கும், முந்திரி உட்பட பழவகை மரங்களைப் பயிரிடுவதற்குக், கால்நடை வளர்ப்பதற்கும் நீண்டகாலத் தவணையில் அரசாங்கம் நிலங்கள் வழங்க முன்வந்திருக்கிறது. இதற்கான விண்ணப்பங்களை காணி நீர்ப்பாசன அமைச்சு இத் திங்கள் 15-ம் நாள் வரை ஏற்றுக்கொள்ளும் என்று அமைச்சரக அறிக்கை ஒன்று கூறுகிறது.

கூட்டு நிலையங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், மற்றும் பெருமளவில் காணி அபிவிருத்தி செய்யக்கூடிய நிறுவனங்கள், தனிநபர்கள், தனிநபர் குழுக்கள் ஆகியவற்றிடமிருந்து காணி கோரும் விண்ணப்பங்கள் அரசாங்கத்தால் தற்சமயம் ஏற்கப்பட்டுவருகின்றன, இக்காணிகள் 25 வருட குத்தகைக்கு முதற்கண் கொடுக்கப்படும். இக்கால எல்லை முடிவில் குத்தகை மேலும் நீடிக்கப்படலாம் அல்லது அரசாங்கம் நட்டஈடு கொடுத்து காணிகளை மீண்டும் பொறுப்பேற்கும்.

இக்காணிகள் பெருமளவு அபிவிருத்தித் திட்டத்திற்கென வழங்கப்படுவதால் ஆண்டுப் பயிர்ச் செய்கைக்கு 25 ஏக்கர் காணிக்குக் குறையாமலும் மற்றும் கால்நடை நிரந்தரப் பயிர்ச் செய்கைகளுக்கு 100 ஏக்கர் காணிக்குக் குறையாமலும் வரும் விண்ணப்பங்களே பொதுவில் கவனிக்கப்படும்.

கீழ்க்கண்டவற்றிற்கு மட்டுமே விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

1. உணவுப் பயிர் செய்கைக்கு அல்லது தேயிலை, ரப்பர், தென்னை நீங்கிய இதர வியாபாரப் பயிர் செய்கைக்கு,
2. முந்திரி உட்பட பழவகை,
3. கால்நடை

விண்ணப்பங்கள் உரிய அச்சிட்ட பத்திரத்தில் செயலாளர், சிறப்புக் குத்தகைச் சபை, காணி நீர்ப்பாசன மின்சார அமைச்சு, கொழும்பு என்ற முகவரிக்கு அக்டோபர் மாதம் 15-ம்

(9-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழநாடும் கண்ணகி வழிபாடும்

**சம்மாந்துறை உ. அலியார்**

சிலம்பின் தலைவி கண்ணகிக்கு ஈழத்தவர்கள் கோயில் எடுத்து வழிபடும் வரலாற்றை இலக்கிய ஆதாரங்களுடனும் வரலாற்று நூல்களின் ஆதாரங்களுடனும் இங்கு விளக்க முற்பட்டிருக்கிறார் கட்டுரையாசிரியர். இராசாவளி, பூசாவளி போன்ற பௌத்த சிங்கள வரலாற்று நூல்களையும் ஆசிரியர் தனது வரலாற்று ஆதாரங்களுக்குத் துணையாகக் கொண்டுள்ளார். பௌத்தர்கள் கொண்டாடும் பெரகராக்களில் கண்ணகியின் சிலம்பு அன்று முக்கியத்துவம் பெற்றிருந்ததாகவும், பின்னர் படிப்படியாக அம்முறையில் மாறுதல் ஏற்பட்டதென்றும் ஆசிரியர் கூறுகிறார்.

பழங்காலந் தொட்டே பத்தினி வழிபாடு தமிழ் மக்களிடையே தலைசிறந்தவோர் வழிபாடாக நிலவி வருகின்றது. இன்று ஈழத்தின் வடபாகத்திலும் கீழ்ப்பாகத்திலும் இத்தெய்வத்துக்கெனப் பல கோயில்கள் எழுப்பப்பட்டு வழிபாடாற்றப்பட்டு வருகின்றன. கண்ணகி வழிபாடு எவ்வாறு தோன்றியது? அது இலங்கையில் எவ்வாறு வேரூன்றியது? என்பனவற்றை நாம் விரிவாயாராயுங்கால் பல வரலாற்று இலக்கிய ஆதாரங்கள் எங் கண்முன் வந்து தோன்றுநிற்கும்.

கண்ணகி பிறந்து தெய்வத்தன்மை சான்று—நின்ற தமிழ்ப் பெருநாட்டில் அவளது புனிதமான பெயர் 'சிலம்பு' என்னும் கலைக் கோயிலிலொன்றைத் தவிர வேறெங்கணும் காணவில்லை எனலாம். ஆனால் ஈழமண்டலத்திலோ தமிழ் மக்கள் மட்டுமன்றி சிங்கள மக்களும் 'பத்தினி தெய்யோ' வென அவளை வாயார வாழ்த்தி வழிபடுகின்றனர்.

### வரலாற்று உண்மைகள்

கி. பி. 2ம் நூற்றாண்டில் இலங்கையை ஆட்சிபுரிந்த கயபாகு மன்னன் சோழ நாட்டுடன் செய்த படையெடுப்பில் வெற்றி கண்டு மீண்டுவருகையில் கண்ணகியின் காற்சிலம்பொன்றைக் கொண்டு வந்தானென்றும் பின்னர் கண்ணகிக்காகப் பலவிடங்களிலும் கோயில்களைக் கட்டி வழிபட்டானென்றும் 'இராசாவளி' என்னும் சிங்கள பௌத்த வரலாற்று நூல் உணர்த்துகின்றது.

இந்நூற்கூற்றிலிருந்து பத்தினிவழிபாடு கயபாகுவின் காலத்திலிருந்தே தொடங்கி வந்திருக்கின்றதெனக் கொள்ளலாம்.

பாண்டிய அரசியின் சிலம்பைத் திருடியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுக் கொலையுண்டான் கோவலன். கணவனை அநீதியாகக் கொலை செய்தமைக்கு வஞ்சந் தீர்த்துக் கொள்வதற்காகக் கண்ணகி அரசனையும் அவன் நகரத்தையும் சபித்தனள். மதுரை தீக்கிரையானது. பாண்டியன் வீழ்ந்துபட்டான். கண்ணகியின் வெஞ்சீற்றம் அறிந்த சேரன் செங்குட்டுவன் தேவி கண்ணகி தெய்வப்பெற்றியுடையவள் என்று கூற, மன்னனும் பத்தினிக்கு வழிபாடியற்ற இசைந்தான். கண்ணகி தெய்வமாகக் கொள்ளப்பட்டாள். பின்னர் இந்து மதத்திலோர் அங்கமாகவும் சேர்க்கப்பட்டாள் இன்னும் கற்புக்குப் பெரும் தெய்வ வனிதையாகவும் மனிதரைப் பீடிக்கும் அத்தனை நோய்களுக்கும் காரணமானவள் என்றும் மக்களால் கருதப்படுகின்றாள்.

சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயிலெடுத்த விழாவில் பல நாட்டு மன்னரும் சமூகங் கொடுத்திருந்தனர். இதனைச் சிலப்பதிகார காவியம் எடுத்துரைக்கின்றது.

### சிலப்பதிகாரம் செப்புவது...

'மாதவி மகளாகிய மணிமேகலையின் துறவை தேவந்தி மூலம் அறிந்த சேரன் செங்குட்டுவன், அவள் மேற் கோபங்கொண்ட சாத்தனெனும் தெய்வத்தின் கட்டளையால் மாடலன் தன்கையிலுள்ள கமண்டல நீரை அங்கு வந்திருந்த மூன்று இளம் பெண்கள் மீதும் தெளிப்ப, உடனே கண்ணகியைக் குறித்துப் புலம்பிய அம்மூவரையும் கண்ணகி நற்றாய் கோவலன் நற்றாய் மாதரி என்னுமூவருடைய பிறப்பினராக அறிந்து, அவர்கள் அவ்வாறு பிறந்தற்குக் காரணத்தை மாடலன் மூலம் கேட்டு பத்தினிக் கடவுளுக்கு நித்திய பூசை செய்யும்படி தேவந்திக்குச் சொல்லி, தான் அக்கடவுளை மூன்று முறை வலம் வந்து வணங்கி நின்றான். அப்பொழுது ஆரிய மன்னரும், மாளவவேந்தரும், இலங்காபுர மன்னவன் கயபாகுவும் அங்குவந்து அக்கடவுளை நோக்கி, 'இச்செங்குட்டுவனைப் போல எங்களுடைய நாட்டில் நாங்கள் உனக்குச் செய்யும் பூசையில்நீ எழுந்தருளி எங்களுக்கு அருள்புரிய வேண்டும்.' என்று பிரார்த்தித்தனர். 'நீங்கள் விரும்பிய படியே வரந்தந்தோம்' என அப்பொழுது அசரீயாக ஒரு குரல்பேசிற்று.

'உலக மன்னவ னின்றோன் முன்னர்
அருஞ்சிறை நீக்கிய வாரிய மன்னரும்
பெருஞ்சிறைக் கோட்டம் புரிந்த மன்னரும்
குடகக் கொங்கரு மாளவ வேந்தரும்
கடல் சூழிலங்கைக் கயவாகு வேந்தனும்
எந்நாட்டாங்கணி மையவர் தம்மி
நன்னாட் செய்த நாளணி வேள்வியில்
வந்தீகென்றே வணங்கினர் வேண்டத்
'தந்தேன்வர'மென் றெழுந்த தொருகுரல்
ஆங்கது கேட்ட அரசனு மரசரும்
ஓங்கிருந் தானையுமுரையோ டேத்தி
விடிகண்டவர் போன் மெய்ந் நெறி விரும்பிய
மாடல மறையோன் றன்னெடுங் கூடித்
தாழ்கழன் மன்னர் தன்னடி போற்ற'

### தமிழ்-சிங்கள உறவு

என இந்நிகழ்ச்சியைச் சிலப்பதிகார வஞ்சிக் காண்டம் வர்ணித் துரைக்கின்றது.

கி. பி. 2ம் நூற்றாண்டிலே (சுமார் 112-134) அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு கயபாகு மன்னன் ஆட்சிபுரிந்தான். கயபாகுவுக்கு முன் ஆண்ட வங்கநாசிகதீசன் காலத்தில் கரிகாற் சோழனால் பன்னீராயிரம் சிங்களவர் சிறைப் பிடிக்கப்பட்டு, அவனால் இந்தியாவுக்குக் கொண்டு செல்லப் பட்டனர். இச்செய்தியை இராசாவளி பூசாவளி என்னுமிரு நூல்களும் நன்றாக வலியுறுத்துகின்றன. தீசனுக்குப் பின்வந்த கயபாகு சோழர்க்குப் பரம விரோதிகளான சேரருடன் தொடர்பு பூண்டு கைதிகளாக விருந்த சிங்களவரை மீட்டதுடன் அதே தொகையினரான பன்னீராயிரம் சோழர்களையும்சிறைப் படுத்தி மீண்டான்.

சேரருடன் கயபாகு நட்புக் கொண்டமையே இது சாத்தியப்படக் காரணமாயிருந்ததெனலாம். மேலும் இத்தொடர்பே கயபாகு சேரன் செங்குட்டுவன் பத்தினிக்குக் கோயிலெடுத்த போழ்து அவ்வைபவத்திற் சென்று கலக்கக் காரணமாயிருந்திருக்கலாம். எவ்வாறாயினும் கயபாகு திரும்பி வருகையில் கண்ணகியின் காற்சிலம்பொன்றையும் கொண்டு வந்தான். ஜம்புக் கொளாத் துறைமுகம் வழியாக வந்த மன்னவன் கந்தரோடைக்கருகிலுள்ள அங்கணைமைக் கடவையில் முதன் முதலாக பத்தினிக்கென்றோர் கோயிலைக் கட்டினான் என அறிஞர் சான்று காட்டுவர். இது முதலாகவே இலங்கையிற் கண்ணகி வழிபாடு ஆரம்பமாகியதெனலாம்.

### அன்றைய பெரகராவும் இன்றைய பெரகராவும்

பின்னர் மன்னனால் அநுராதபுரத்தில் பத்தினி வழிபாடு அறிமுகப்படுத்திவைக்கப்பட்டது. ஆடிமாதத்தில் வருடந்தோறும் 'பெரகரா' என்ற பெயரால் இவ்வழிபாடு நடந்தது. இவ்வழிபாட்டில் ஊர்வலமும் ஓர் அங்கமாக இருந்தது. ஊர்வலத்தில் கண்ணகியின் காற்சிலம்பே முக்கியத்துவம் வகித்தது. ஆனால் பின்னர் காலம் போகப் போகப் அந்த முறையில் மாறுதல் ஏற்பட்டது.

[11-ம் பக்கம் பார்க்க]

# சிரிப்பும் சிந்தனையும்

**அ. பிச்சை**

உள்ளம் களிப்பில் ஆழ்ந்திருக்கும் போது முகத்தால் வெளிப்படும் உணர்ச்சியின் பெயர்தான் சிரிப்பு. கவலையை மறைக்க, சிரிக்கப் பேசி பழக வேண்டும். சிரிப்புக்கும் வாழ்வு வளர்ச்சிக்கும் நெருங்கிய உறவு உண்டு.

சுவைகளில் சிறந்த சுவை நகைச்சுவையாகும். இதன் காரணமாகவே சிரிக்கவைக்கிறவர்களுக்கு நண்பர்கள் அதிக அளவில் கிடைக்கிறார்கள். அதிக நண்பர்கள் பெறுவதால் வாழ்க்கை வளர்ச்சிக்கு பயனுண்டாகிறது. திரைப் படங்களில் கதைக்கு ஒட்டி வந்தாலும் வராவிட்டாலும் நகைச் சுவைக்கு அதிக இடம் கொடுக்கிறார்கள். நகைச் சுவை கலக்காத திரைப் படங்கள் வெற்றி பெறுவதில்லை. அதேபோல சிரிக்கப் பேசத் தெரியாதவர்களுக்கு வாழ்க்கையில் வெற்றி கிடைப்பதில்லை.

### 3 காலும் 1 காலும்

மற்றவர்களைச் சிரிக்க வைக்க வேண்டும் என்று தொடர்பில்லாமல் பேசுவதில் பயனில்லை எல்லாரையும் கவரும் வகையில் சிரிக்க வைக்க வேண்டும். அதே போல சிரிப்புகளை இரசிக்கவும் தெரிய வேண்டும். சிலருக்கு சிரிக்கவே தெரியாதது போல, எப்பொழுதும் ஒரு மாதிரியாகவே இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு நண்பர்கள் கிடைப்பது அரிது. அப்படி நண்பர்கள் கிடைத்தாலும் அவர்களுடன் இறுதிவரை ஒன்றிப்பழகவும் தெரியாது. புன்சிரிப்புக்கு மருந்து சாப்பிட்டு உள்ள சிரிப்பையும் கெடுத்துக்கொண்ட பரிதாப நிலைதான் அவர்களுக்கு!

சிரிக்கப்பேச வேண்டும் என்பதற்காக எல்லா சமயங்களிலும் அப்படி பேச முடியாது. சிந்தனையை தூண்டும் வகையில் அது இருக்க வேண்டும். சிந்தனையை தூண்டும் வகையில் பேசுவதில் மேனாட்டு அறிஞர் பெர்னாட்சாவின் பேச்சுக்களும் எழுத்துக்களும் சிரிப்பை மூட்டின. அவருக்கு லோரைன் என்ற நடிகர் நண்பரானார். லோரைனின் ஒரு காலில் அடிபட்டதால் ஊனமானார். இதனால் மனம் வருந்தினார். அவருக்கு பெர்னாட்சா ஆறுதற் கடிதம் எழுதினார்.

'எனக்கு இரண்டு கால்கள் இருக்கின்றன. அதற்காக மூன்று கால் இல்லா

(14-ம் பக்கம் பார்க்க)

# தூதுக்கு விட்டவர் யாரோ?

—"சத்தியசீலன்"—

காதுக்குள்ளே வந்து கச்சேரி செய்கிறீர்!
கவலையிலும் எந்தனைக் கைதட்ட வைக்கிறீர்!
வாதுக்கு வந்தவர் உம்முடன் யாவரோ?
வம்புக்கு வந்துமேன் வார்த்தை வளர்க்கிறீர்!

தூதுக்கு விட்டவர் தங்களை யாவரோ?
தூக்கத்தில் வந்துமேன் தொல்லை தருகிறீர்!
ஏதுக்கப் பாதிரும் இப்படி நுள்ளுறீர்?
எழும்புவேன்! எழும்புவேன்! ஏனங்கு அகல்கிறீர்?

பாதிக்கு முன்னெனைக் தூக்கத் தெழுப்பினீர்,
பட்டென்று எழும்பினேன் ஏனோ பறக்கிறீர்?
மீதிக் கதைகளைச் சொல்லிப் பறவுமேன்
மீண்டும் படுக்கையில் நீண்டே படுத்திட

காதலிக் கல்லவோ கன்னத்திற் கிள்ளுவார்!
கண்களை மூடிடக் கன்னத்திற் கிள்ளுவீர்!
சோதிக்க வென்னிலும் இவ்வளவு தூரமா?
சொல்லும், சொல்லும் சொல்லும் ஏனோசுணக்குவீர்?

பாதித் துயிலிடைப் பாவி பிதற்றினேன்
பாழ்பட்ட கொசுவெனைப் படுக்கவும் விட்டதோ
ஏதுக்கப்பா அந்தச் சன்னல் திறந்தனை?
இரவையே பகலாக்கி எங்கது சென்றதோ?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




பனீஸ், மீருவோடை

கே: என் நண்பன் ஒரு பெண்ணைக் காதலிக்கிறுன். ஆனல் அப் பெண்ணே அவனைக் காதலிக்கவில்லை. அவள் என்னைக் காதலிக்கிருள், ஆனல் நான் அவனைக் காதலிக்கவில்லை இதற்கு என்ன செய்வது?

ப: இது ஏட்டிக்குப் போட்டியான காதல். மூன்று பேரும் கூடிப் பேசி காதலுக்குக் கைகழுவிவிட்டு வெறும் நட்புடன் மட்டும் வாழ முடிவு செய்து கொள்ளுங்கள்.

ஃ

பொ. இரத்தினம்,
கொழும்பு-12

கே: தமிழ் பேசும் மக்களின் இழந்த உரிமைகளை பெறும் வழிகளை விட்டு, நிபந்தனையற்ற ஆதரவு தேசிய அரசாங்கத்துக்கு கொடுக்கும் திரு. பொன்னம்பலமும் அவரது கட்சியும், உரிமைகளைப் பெறுவதற்காக ஆதரவு கொடுக்கும் தமிழரசுக் கட்சியை சதா கண்டிப்பதேன்?

ப: தங்களைப் போல தமிழரசுக் கட்சி நிபந்தனையற்ற ஆதரவு கொடுக்கவில்லையே என்பதுதான் காரணம்.

ஃ

எம். இரட்ணம். அக்கரபத்தனை

கே: இ. தொ. காங்கிரஸ் தலைவர் ஒரு ரூபா சம்பள உயர்வு தோட்டத் தொழிலாளிக்கு வாங்கித் தருகிறேன் என்று சொன்னூரே. ஏன் இன்னும் வாங்கித் தரவில்லை?

ப: சம்பள உயர்வுக்கு தொழில் மந்திரி வட்டாரத்தில் ஆதரவு இல்லையாம். கடந்த 2½ ஆண்டுகளாக இ. தொ. காங்கிரஸ் தலைவர் ரூ. 1-00 சம்பள உயர்வு பற்றி பல வாக்குறுதிகளை அளித்துவிட்டார். கடைசியில் இச் சம்பள உயர்வு பற்றி ஒரு கமிஷனை நியமிக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டார். அதற்கும் கைவிரிப்புத்தான் கிடைத்திருக்கிறதாம். எனவே ரூ. 1-00 சம்பள உயர்வு எட்டாக் கனியாகி விட்டது. எந்தத் தொழிலாளியாவது அதனை நம்பிக் கொண்டிருந்தால், இப்பொழுது தாராளமாக ஏமாந்து போகலாம்.

ஃ

ஈஸ்வரி இரத்தினம்,
கொழும்பு-12

கே: தமிழ் பேசும் மக்களின் இன்றைய கஷ்ட நிலைக்கு திரு. பொன்னம்பலமே முழுப் பொறுப்பு என்று நண்பர் சொல்லுகின்றூர். இது உண்மையா?

ப: உண்மைதான். அன்று அவர் சுயநலத்தை சிறிது ஒதுக்கி வைத்துவிட்டு தீர்க்க தரிசனத்துடன் நடந்திருந்தால், இன்றைய நிலை ஏற்பட்டிருக்காது என்பது உண்மையே. அவர் அப்படி பணியாற்றவில்லையே என்று இப்பொழுது கவலைப்படுவது, அந்தகன் ராஜபார்வை பார்க்க வில்லையே என்று கவலைப்படுவது போலாகும்.

ஃ

எஸ். எல்., காங்கேசன்துறை

கே: பிரபல தென் இந்திய ஆரூட மேதை இராமன் சமீபத்தில் கூறிய ஆரூடம் பற்றி உமது கருத்தென்ன?

ப: அவர் கூறிய ஆரூடம் இதுவரை 50% சரியாக இருக்கிறது. சிறிமா ஆட்சி வீழச்சியடையுமென்றூர்-வீழ்ச்சியடைந்துவிட்டது. அயூப்கான் இவ்வருட இறுதிக்குள் வீழ்ச்சியடைவார் என்று கூறியுள்ளார். பூட்டோ-அயூப்கான் தகராறு இப்பொழுது தோன்றியுள்ளது. இது அயூப்பின் வீழ்ச்சியில் முடியுமா? இன்னும் 3 மாதங்களில் ஆரூடத்தின் உண்மை தெரிந்துவிடும்.

ஃ

அ. சிவப்பிரகாசம், ஏழாலை

கே: பாராளுமன்றத்தில் மாவட்டசபை மசோதா சமர்ப்பிக்கப்பட்டால், தமிழ் காங்கிரஸ் எம். பி. கள் என்ன செய்வார்கள்?

ப: ஆதரிக்க வேண்டும். இல்லையேல் அரசாங்கக் கட்சியிலிருந்து வெளியேற வேண்டும்.

கே: திரு. இலங்கரத்தின தேர்தலில் தோல்வியடைந்த பின் என்ன செய்து கொண்டிருக்கிறூர்?

ப: ஒரு தினசரிப் பத்திரிகையில் நிர்வாக அதிபராக இருக்கிறூராம்.

> திருவாளர்
> குயுக்தியார்
> மே/பா சுதந்திரன்
> த. பெ. இல. 1183
> கொழும்பு-12.
>
> இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

எஸ். கே. சண்முகநாதன்,
வண்ணூர்பண்ணை

கே: ஒரு தினசரிப் பத்திரிகையில், 'வட்டமேசை மாநாடு விரைவில் நடைபெறும்' என்று மூதூர் முதல்வர் பேசியதாக வந்துள்ள செய்தி உண்மையானதா...அல்லது?

ப: வெறும் கயிறு திரிப்பு! நம்பாதீர்!

கே: நமது இராசமாணிக்கத்தின் கனடாப் பிரயாணத்திற்கும், திரு. பொன்னம்பலத்தின் ஐ. நா. பிரயாணத்திற்குமுள்ள வேறுபாடுகளென்ன?

ப: திரு. பொன்னம்பலம் அரசாங்கத்தின் பிரதிநிதி. அரசாங்க உத்தரவை மீறி ஒரு வார்த்தை கூட அவர் பேசமுடியாது. தமிழர் உரிமைப் பற்றி அங்கு பேசப் போவதாக இங்கு கூறியதெல்லாம் வெறும் 'டூப்'. திரு. இராசமாணிக்கம் அரசாங்கத்தின் பிரதிநிதியல்ல. சுதந்திரமாகச் சென்றுள்ளவர். இலங்கைப் பாராளுமன்றத்தின் சார்பில் சர்வதேசப் பாராளுமன்றக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

ஃ

சா. கிருஷ்ணன், இரத்தினபுரி

கே: ரஷியாவிலுள்ள இந்திய மாணவர்கள் தங்களின் தாயகத்தைக் காக்கத் தயார் என்று கூறுகிறூர்கள். இதே போன்று இலங்கையிலுள்ள தமிழ் மாணவர்கள் தங்களின் தாயகத்தைக் காக்க முன் வராததேன்?

ப: அவர்களும் தங்களின் தாயகத்தைக் காக்கத் தயாராகவே இருக்கின்றனர். அவர்களின் தாயகம் இலங்கைதானே!

ஃ

கே. ஏ. நிக்கலாஸ்,
யாழ்ப்பாணம்

கே: தமிழரசு இராசமாணிக்கம் ஒட்டாவாவில் பேசிய பேச்சை பொன்னம்பலம் காப்பியடித்து ஐ. நா. சபையில் பேசியதாக சிலர் கூறுகிறூர்கள் உண்மைதானு?

ப: நெருப்பின்றி புகை வராது.

ஃ

ஆ. க. மு. காஸிதீன்,
கொழும்பு-12

கே: இந்திய-பாகிஸ்தான் யுத்தம் சில பத்திரிகைகளுக்குக் காகிதத் தட்டுப்பாட்டையும், வேறு சில பத்திரிகைகளுக்கு புது எழுத்தில்லா நிலையையும் ஏற்படுத்திவிட்டதாக அறிவிக்கப்பட்டது. யுத்தத்தால் சுதந்திரனுக்கும் ஏதாவது ஏற்பட்டதா?

ப: சுதந்திரன், வாசகர்களின் கண்களில் மண்ணைத் தூவும் பத்திரிகையல்ல. எனவே அது பாதிக்கப்படவில்லை. இந்தோ-பாக். யுத்தம் பலருக்குப் பலவிதமாகப் பயன்பட்டது. 30 வயதுக்கு மேலாகியும் இன்னும் குழந்தைப் பருவத்திலுள்ள என்றுமே வளர்ச்சி பெருத ஒரு பத்திரிகை தேய்ந்து போன எழுத்துக்களை (ஒவ்வொரு எழுத்திலும் சரிபாதி தான் உண்டு) வைத்துக் கொண்டு பம்மாத்து செய்வதற்காக யுத்தத்தைப் பயன்படுத்தியது. ஒரு சிங்கள தினசரி (இதை எதிர்த்து ஒரு பகிஷ்கார இயக்கமும் நடைபெறுகிறதாம்) யுத்தத்தைக் காட்டி, பத்திரிகையையே நிறுத்திவிடும் நிலை ஏற்படலாமென்று அறிவித்தது. ஆனல் உண்மைக் காரணம் அதன் விற்பனை சுமார் 40,000 வீழ்ச்சியடைந்திருப்பதுதான் என்பது பின்னர் விசாரித்த போது தெரிய வந்தது. இம்மாதிரியெல்லாம் இந்த யுத்தம் நம் நாட்டுப் பத்திரிகைளுக்கு கை கொடுத்து உதவியது.

ஃ


இ. ஈஸ்வரி, கொழும்பு-12

கே: தமிழ் அரசுக் கட்சிக்கும், தமிழ் காங்கிரஸ் கட்சிக்கும் உள்ள அரசியல், சமூக, பொருளாதார ஒற்றுமைகள் என்ன?

ப: தமிழ் பேசும் இனத்தின் சுய நிர்ணய உரிமையைத் தமிழரசுக் கட்சி வற்புறுத்துகிறது. தமிழ் காங்கிரஸ் அதனை எதிர்க்கிறது. அது தமிழ் பேசும் மக்களைத் தனித் தேசிய இனமாகக் கருதுவதில்லை. இலங்கை மக்கள் அனைவரும் ஒரே தேசிய இனத்தைச் சேர்ந்தவர்களென்ற தவருன எண்ணமே தமிழ்க் காங்கிரஸைத் தவருன பாதையில் இழுத்துச் செல்கிறது. தமிழரசுக் கட்சி சமதர்ம சமுதாயத்தைத் தன்னகத்தே கொண்டதாகும். த. கா. அதற்கு நேர் மாருனது. ஒரே ஒற்றுமை இரண்டும் அரசாங்கக் கட்சியில் இருப்பதுதான்.

கே: தேசிய அரசாங்கம் தமிழர் பிரச்சினைகளை பண்டா-செல்வா ஒப்பந்த அடிப்படையில் தீர்த்தால் பொன்னம்பலம் கட்சியின் நிலை என்னவாகும்?

ப: அரசியல் அநாதைகளின் கட்சியாகிவிடும்.



## வேட்டுக்கு வேட்டு

திரிகளின் விலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

—செய்தி

வேட்டு வைப்போரின் பாடு இனிமேல் திண்டாட்டம்தான்!

## நாறுதிருக்கட்டும்

கொழும்பு நகரில் இனிமேல் மீன் மலிவாகக் கிடைக்கும்.

—செய்தி

நல்ல செய்திதான். ஆனல் நாற்றமெடுக்காமல் பார்த்துக் கொள்ளுவது அவசியம்.

## கள்ளுக் களஞ்சியம்

தமிழ்ப் பண்பாடு நாகரீகம் பற்றிய கலைக் களஞ்சியம் ஒன்றினை வெளியிட வேண்டுமென உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

—செய்தி

கொழும்பு கொட்டாஞ்சேனையில் தினசரி மாலை வேளையில் நடைபெறும் கள்ளுக் குடிக் கலை பற்றியும் ஒரு அனுபந்தம் சேர்க்கப்பட வேண்டும், என்று விடாக் கண்டரும் ஓர் ஆலோசனையை விடுத்துள்ளார்.

## பஞ்சம் ஏன்?

பதுளை நகரில் சர்க்கரைக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனல் தமிழர்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

—செய்தி

இந் நகரைச் சுற்றியுள்ள மலைகளிலே இருந்து விழும் அருவிகள் சர்க்கரை மூடைகளைக் கரைத்து விடுகின்றனவோ?

## நல்ல உபாயம்

பாடசாலை ஒன்றில் மாணவர்கள் மத்தியில் சாதி வித்தியாசப் பாகுபாடு காட்டியமைக்காக ஒரு தலைமை ஆசிரியரும், உதவி ஆசிரியரும் வேறு பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

—செய்தி

இடமாற்றத்துக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் பல ஆசிரியர்களுக்கு இனிமேல் அடித்தது யோகம். இடமாற்றம் விரும்புபவர்கள் மாணவர்களிடையே சாதிப் பாகுபாடு காட்டியே இடமாற்றம் பெற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுவிட்டதல்லவா?

## சுப முடிவு

மனைவியின் மதிப்புக்கும், மரியாதைக்கும், அன்புக்கும் பாத்திரமாகாததனல் கணவன் தற்கொலை!

—செய்தி

சுபமான முடிவைத் தேடிக் கொண்ட அவருடைய ஆத்மா சாந்தியடைய விடாக்கண்டர் பிரார்த்தனை நடாத்த முன்னறிவித்தல் கொடு... ளார்.

## தேவை

பின்வருமிடங்களில் சுதந்திரன் விற்பனை செய்ய முன் பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் தேவை.

உடன் விண்ணப்பிக்கவும்.

மீசாலை
காரைநகர்
நயினதீவு
துணுக்காய்

நிர்வாகி,
சுதந்திரன்.





பாட்டாளி முதல் பணக்காரன் வரை
எல்லோரும் புகைப்பது
கமலா பீடி
ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்
கமலா ஸ்டோர்ஸ்,
15, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
தொலைபேசி:
3597-6522

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடபகுதியிலிருந்து இராணுவத்தை வெளியேற்றவும்

## இன்றேல் தேசிய ஒற்றுமை மீண்டும் சிதைவு படும்

'மழை விட்டும் தூவானம் போகவில்லை' என்று முத்தோர் கூறுவார்கள். அதே போன்றுதான் திருவாட்டி சிறிமாவோவின் ஆட்சி போனபின்னரும், வடபகுதியில் இராணுவத்தினரின் சண்டித்தனம் நின்றதாகத் தெரியவில்லை. கடந்த வாரம் வடபகுதி மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிடக்கூடிய முறையில் சில சம்பவங்கள் நடந்தேறியுள்ளன.

ஒருவரின் உயிருக்கே உலை வைக்கின்ற அளவிற்கு பருத்தித்துறைத் தொகுதியில் ஒரு சம்பவம் நடைபெற்றுள்ளது. பிறிதொரு இடத்தில் மூன்று நான்கு பேரின் உயிரை ஒரு சேர பலிவாங்கக்கூடிய நிகழ்ச்சி யொன்று மயிரிழையில் காப்பாற்றப்பட்டுள்ளது. தாயகத்தில் இருந்து சேயகம் வந்த கலைத் தூதர்களுடனும் சண்டித்தனம் செய்ய முயற்சிகள் நடைபெற்றதாம்.

### பொறுமைக்கு எல்லை......

இத்தனை நிகழ்ச்சிகளையும் ஒன்றுசேரப் பார்க்கின்றபொழுது வடபகுதி மக்கள் கடைப்பிடிக்கும் பொறுமையைப் பாராட்டமலிருக்க முடியாது. மக்களின் இந்தப் பொறுமையை நீண்டகாலம் சோதிப்பது நிச்சயம் ஆபத்தாகவே முடியும்.

பொதுத் தேர்தல் முடிவடைந்து தேசிய அரசாங்கம் பதவியேற்றதும் வடபகுதி மக்கள் இராணுவத்தினரின் அட்டகாசங்களுக்கு ஒருமுடிவு கிடைக்குமென்று நம்பினார்கள். தேர்தலில் வெற்றி பெற்றவர்களுக்கு நடைபெற்ற வரவேற்புக் கூட்டங்களில் எல்லாம், வடபகுதி மக்கள் இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்தார்கள்.

வடபகுதி மக்களின் கோரிக்கைகளையெல்லாம் அவ்வப்பகுதிப் பிரதிநிதிகள் கவனத்துடன் கேட்டு அதற்கான நடவடிக்கையிலும் இறங்கினார்கள். மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்த பாதுகாப்பு அமைச்சரும் பிரதமருமான திரு. டட்லி சேனநாயக்கா இராணுவத்தினரை வடபகுதியில் இருந்து திருப்பியழைப்பது பற்றி ஆலோசனைகள் மேற்கொண்டார்.

### பாதுகாப்பு நடவடிக்கை

இத்தகைய ஆலோசனைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையிலும், நாமும் இராணுவத்தினரை வடபகுதியிலிருந்து அகற்ற வேண்டுமென்பதைப் பலமாக வலியுறுத்தினோம். இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் சட்ட மீறிய குடிவரவினரைத் தடுக்கும் முயற்சி பொலீசாரிடமும், பொலீசாருக்கு அனுசரணையாக கிராம சேவகர்களிடமும் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று அன்றைய நாட்களில் சுதந்திரன் கூறியது.

இத்தகைய கருத்துக்களைப் பற்றி பாதுகாப்பு அமைச்சரும் பிரதமருமான திரு. டட்லி சேனநாயக்கா தமது உயர்தர அதிகாரிகளுடனும் இராணுவத் தளகத்தர்களுடனும் ஆலோசனை நடாத்திக் கொண்டிருக்கும் நேரத்தில்; எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து பெரிய அளவில் பிரச்சாரம் ஒன்றை மேற்கொண்டார்கள்

வடபகுதியில் முகாமிட்டிருக்கும் இராணுவத்தினரை என்ன செய்வது என்ற ஆலோசனைகள் நடக்கும் பொழுதே, சமசமாச, கம்யூனிச, சுதந்திரக் கட்சிகள் அனைத்தும் தென்னிலங்கையில் பெரிய கூட்டங்களை நடாத்தினார்கள். 'வடபகுதியிலிருந்து இராணுவத்தினரை அகற்றுவதற்கு எதிர்ப்பு" என்றே அக்கூட்டங்களுக்கு பெயர் சூட்டினார்கள். இத்தகைய ஒரு கூட்டத்தில் உரை நிகழ்த்திய முன்னாள் பிரதமர் திருவாட்டி சிறிமாவோ பண்டாரநாயக்கா 'வடபகுதியிலிருந்து இராணுவம் அகற்றப்பட்டு விட்டதாகவும், அதனால் தினமும் ஆயிரக்கணக்கில் தமிழர்கள்கள்ளத் தோணிகளில் வந்து வடபகுதியில் இறங்குகிறார்கள்' என்றும் கூறினர்.

### ஏரிக்கரைப் பத்திரிகைகள்

திருவாட்டி சிறிமாவோவின் பேச்சுக்கு தோன்றுத்துணையாக அமைந்திருந்தன அக்கால கட்டத்தில் ஏரிக்கரைப் பத்திரிகைகள் வெளியிட்ட சில செய்திகள். ஏரிக்கரைப் பத்திரிகைகள் இன்றைய அரசாங்கத்தின் வழிகாட்டிகள் என்று காட்டிக் கொள்வதில் முன்நிற்கின்றன. நாட்டில் உள்ள மக்களில் பலரும் ஏரிக்கரைப் பத்திரிகைகளை இன்றைய அரசாங்கத்தின் பிரச்சார பீரங்கிகள் என்றே நம்புகிறார்கள்.

இந்த சூழ் நிலையில்தான் ஏரிக்கரைப் பத்திரிகைகள் பின்வரும் கருத்துப்படச் செய்தி வெளியிட்டன. 'தேசிய அரசாங்கத்தில் தமிழ்ப் பிர

சுதந்திரன் அரசியல் நிருபர்

திநிதிகளும் சேர்ந்திருப்பதால் தென்னிந்திய மக்கள் தேசிய அரசாங்கம் தமிழர்களின் அரசாங்கம் என்ற நம்பிக்கையில் தினம் தினம் கள்ளத்தோணிகளில் வந்து வடபகுதிக் கடற்கரைகளில் இறங்குகிறார்கள்', திருவாட்டி சிறிமாவோ ஏரிக்கரைப் பத்திரிகைகளின் இச்செய்தியை தனது பிரச்சாரத்திற்கு நிலைக்களனாக்கினார்.

ஏரிக்கரைப் பத்திரிகைகள் இச்செய்தியை என்ன நோக்கத்தில் பிரசுரித்தன என்பதை தெளிவுபடுத்தாவிட்டாலும், அப்பத்திரிகைகளும் வடபகுதியிலிருந்து இராணுவம் வெளியேற்றப்படுவதை விரும்பாது இருந்திருக்கலாம். ஏரிக்கரைப் பத்திரிகைகள் அப்படிக்கருதியே இச்செய்தியை வெளியிட்டிருந்தாலும் அதையிட்டு அதிக தூரம் யாரும் ஆச்சரியப்படத்தேவையில்லை.

### தமிழரசுத் தந்தை ஆலோசனை

இடதுசாரி வகுப்புவாதப் பத்திரிகையான 'அத்த'வும் வடபகுதியிலிருந்துஇராணுவம் வெளியேற்றப் படுவதை அல்லது அதுபற்றி ஆராய்வதை பெரிது படுத்தியது. இவற்றையெல்லாம் ஆழ்ந்து நோக்கிய பிரதமர் வடபகுதியிலிருந்து இராணுவம் அகற்றப்பட மாட்டாது என்று அறிவித்தர்.

சிறிமாவோவின் ஆட்சி காலத்தில் பதவி உயர்வு பெற்றவரும், கடந்த சத்தியாக் கிரகப் போராட்டத்தின் பின்னர் யாழ்ப்பாணப் பகுதி இராணுவ தொடர்பதிகாரியாகக் கடமையாற்றியவரும், இராணுவ பிரதம தளகர்த்தருமான திரு. உடுக்கம வடபகுதியிலிருந்து இராணுவத்தை அகற்றும் ஆலோசனை எதுவும் கிடையாது என்று அறிக்கை விடுத்தார்.

இச்சந்தர்ப்பத்தில் தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் ஒரு புதிய [illegible]

பிரதமரதும் இராணுவ அதிகாரிகளினதும் கவனத்திற்குக்கொண்டுவந்தார். வடபகுதியில் சட்ட விரோத குடிவரவினரைத் தடுக்கும் நடவடிக்கையில் ஈடுபடும் இராணுவ வீரர்களுக்கு பொலீசாருக்கு இருப்பது போன்று விசேட இலக்கங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்றும், அவ்விலக்கங்களைப் பொது மக்கள் எளிதில் காணக்கூடியதாக இராணுவத்தினர் அணிந்து கொள்ள வேண்டுமென்றும் தமிழரசுத் தந்தை கூறிய ஆலோசனையை சகலரும் ஏற்றனர். ஆனால் அவ்வாலோசனை இன்று வரை அமுல் நடத்தப்படவில்லை என்பது தெளிவாகிறது.

### நமது எச்சரிக்கை

தமிழரசுத் தந்தை அவர்களின் ஆலோசனையை ஏற்றிருந்தவர்கள், அதைக் காலங்கடத்தாது அமுல் நடாத்தியிருந்தால் இத்தகைய பெரியளவிலான அசம்பாவிதங்கள் நிச்சயமாக இடம் பெற்றிருக்க முடியாது. இராணுவ வீரர்களும் கட்டாக்காலி மாடுகளாகத் திரிய முற்பட்டிருக்க மாட்டார்கள். அவர்கள் அப்படி நடக்க முற்படுங்கால், அவர்களின் அடையாளத்தைக் குறிக்கும் இலக்கம் அவர்களைக் காட்டிக்கொடுத்து விடும் என்ற பயம் ஏற்படவே செய்யும். இவற்றையெல்லாம் ஆராய்வது பிரேத பரிசோதனை செய்வது போன்றதாக சிலர் கருதலாம். என்றாலும் இச்சம்பவங்களின் அடிப்படை உண்மைகளை பலரும் அறிந்தே இருக்க வேண்டும்.

நடைபெற்று முடிந்த சம்பவங்களைப் பற்றி நாம் எதுவும் கூற விரும்பவில்லை. இச்சம்பவங்களில் பல நீதி மன்

(9-ம் பக்கம் பார்க்க)

## அருட்சோதி இராமலிங்க வள்ளல்

(சக்தி அ. பாலையா)

இறை யருட் சோதியே
எங்கெங்கு மாதி முதல்
இயல் பான உயிர்ப்புமாகி
நிறை வாகி நடுவாகி
நிற்பதைச் சாரவும்
நெஞ்சத் துறுதி மேவி
குறை வற்ற பெருங் கருணை
கொண்டு பேரிரக் கத்தால்
கொல்லாமை தவிர்த்தும் மதங்கள்
சிறை வைக்கும் பொய்மையுள்
இவ்வுலகும் அழியாமல்
சுத்த சன் மார்க்க சங்கம்
உறை விக்க ஞான சபை
ஓம்பிய அருட் சோதி
இராமலிங்க வள்ளலே

தனிப் பெருங் கருணையின்
வடிவான வள்ளலே
தனித் தலைமைத் தவம் சார்ந்தவா
இனிப் பிறவி எடுப்பினும்
எங்கும் பொது வென்னும்
இயல்புக்குள் உருதேர்ந்தவா
மனப் பரவெளியதுவில்
மன்றென வளர் ஞான
மாசிலாக் கருவானவா
தினம் பிசகா இயற்
றிருவாகி அருள் பூக்கும்
தனிப் பரம் பொருளானவா
இனம் ஒன்றே உயிரொன்றே
இறை யொன்றே எனும் சோதி
இராமலிங்க வள்ளலே

போலிச் சடங்கு வீண்
புகழ்ச்சிகள் மனிதருள்
பொருந்தாத உயர்ச்சி தாழ்ச்சி
கேலி என் றெண்ணாது
வாழ்க்கையைப் பாழாக்கி
கீழடைந்து வாழும் மக்கள்
கூலிக்குத் துதி பாடும்
கொடுஞ் சமயக் கூற்றிலே
குற்ற மறியாது சேர்ந்து
பாலிக்கும் பொய்மையால்
பரம் பொருளை அறியாது
பாழ்பட்டுப் போதல் கண்டு
ஞாலத்து ஞான சபை
சன்மார்க்கம் வழங்கிய
இராமலிங்க வள்ளலே

(இன்று இராமலிங்க வள்ளலாரின் சன்மார்க்க சங்க நூற்றாண்டாகும், 1865—1965)


# ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, கிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இலவசமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழ்ப் பகுதிகளில் வேலை வேண்டுமா? தமிழரசுக் கட்சியின் சிபார்சை பெறுக"

**வடக்கு இரண்டு கிழக்கு மாகாணங்களிலும் அரசாங்கத் தொழிற்சாலைகளிலும், அரசாங்க கூட்டுத்தாபனங்களிலும் காலிஸ்தானங்கள் ஏற்படும்போது அவற்றில் 75 விதம் அந்தந்தப் பிரதேசத்திலுள்ள தமிழரசுக் கட்சிக்கிளைகளினால் சிபார்சு செய்யப்படும் சிப்பந்திகளைக் கொண்டுதான் நிரப்பவேண்டுமென தமிழரசுக்கட்சி அரசாங்கத்துக்கு அறிவித்திருக்கிறது.' என்று 'ஜனசத்திய' (3-10-65) ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.**

## சிங்களப் பத்திரிகை பறக்கவிடும் காற்றாடி

'ஜனசத்திய' மேலும் எழுதுவதாவது:—

'தோட்டங்களில் ஏற்படும் காலிஸ்தானங்கள் 80% இந்தியத் தோட்டத் தொழிலாளரின் பிள்ளைகளுக்கே வழங்கவேண்டும் என்றும் தமிழரசுக் கட்சி அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளது.

சிங்களவர்கள் பெரும்பான்மையோராக இருக்கும் பகுதிகளுக்கும், அரசாங்க நிறுவனங்களுக்கும் புதிதாகச் சிப்பந்திகளை எடுக்கும்போது குறைந்த பட்சம் நூற்றுக்குப் பத்துப்பேரையாவது தங்கள் கட்சி அனுதாபிகளையே கொண்டு நியமிக்கவேண்டுமென்றும் தமிழரசுக் கட்சி அறிவித்துள்ளது.

இந்தத் திட்டங்கள் அமுல் நடைபெறும்போது காங்கேசந்துறை சிமந்தித் தொழிற்சாலை, கல்ஓயா சீனி, ஓடு, தச்சுவேலை, மதுபான தொழிற்சாலைகள், வாழைச்சேனை கடுதாசி உற்பத்தித் தொழிற்சாலை முதலிய அரசாங்க நிறுவனங்களில் புதிதாக சிப்பந்திகளை நியமிக்கும்போது தமிழரசு வாதிகளுக்கு விசேட சலுகை வழங்கப்படும்.

யு. என். பி.— தமிழரசுக் கூட்டரசாங்கத்தின் மந்திரிகளும், எம். பிகளும் இப்பொழுது தயார்செய்து கொண்டிருக்கும் பட்டியல்களுக்கிணங்க, அந்த பட்டியலிலுள்ளவர்களுக்கு வேலை கொடுக்க முயற்சி செய்யப்படுவதால் தமிழரசுக் கட்சியும் இந்த முடிவைச்செய்துள்ளது.

## சிங்கள இதழ்களில்...

## மாட்டு இரத்த அபிஷேகம்

அனுராதபுரம் மாட்டு இரத்தத்தால் நனைகிறது என்ற தலைப்பில் 'எத்த' (5-10-65) கீழ்க்காணும் செய்தியைப் பிரசுரித்துள்ளது:—

'இதர நாட்களில் பாலபிஷேகம் பெறும் அனுராதபுரத்திலுள்ள சிறீ மகா போதிவிருட்சத்தின் வேர் எழுகட்சி கூட்டரசாங்கம் ஏற்பட்ட பிறகு எருமைகளின் இரத்தத்தால் அபிஷேகம் செய்ய ஆரம்பித்திருப்பதைக் கேட்டு அந்தப் பிரதேச மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

சாந்தமூர்த்தி புத்தபகவானுக்கு நிழல் அளித்த ஜய சிறீ மகா போதிவிருட்சத்துக்குத் தெரியக் கூடியதாகவே கள்ளத்தனமாகக் கொண்டு வரப்படும் மாடுகளை அறுக்கும் அளவுக்கு யு. என். பி. முதலாளிகள் கொடியவர்களாகியுள்ளனர். புனித பூமியான அனுராதபுரத்தில் புனிதபோதி விருட்சத்துக்கும் தெற்கு டாகோபாவுக்கும் அண்மையில் எருமைகளை அறுத்துக் கொண்டிருந்த ஆறு பேர்களைப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

வெட்டப்பட்ட மூன்று மாடுகளின் இறைச்சி, தலை, கொம்பு, குடல் உட்பட இறைச்சியும் ஒரு லொறியில் பொலீஸ் நிலையத்துக்குக் கொண்டு வந்தபொழுது இச்செய்தி பரவி அண்டையிலுள்ள கிராமங்களிலிருந்தும் மக்கள் வந்து கூடிவிட்டனர்.

அனுராதபுரம் புனிதநகர் புனரமைப்புக் குழுவில் உறுப்பினர்களாயிருந்த பக்தியுள்ள பௌத்தர்களை இந்த அரசாங்கம் நீக்கிவிட்டு, அவர்களுக்குப் பதிலாக யு. என். பி. கைக் கூலிகளை நியமித்துள்ளது. அனுராதபுரியின் புனிதத் தன்மையைப் பாதுகாப்பதற்காக இரவு பகலாகப்பாடுபட்ட நேர்மைமிக்க பௌத்த அதிகாரியான அனுராதபுரம் அரசாங்க அதிபர் திரு. ஹேமசிறி பிரேமவர்தனவை, அந்தப் பிரதேசத்திலுள்ள யு. என். பி. சுரண்டும் கூட்டத்தின் வற்புறுத்தலின் மீது அண்மையில் கொழும்புக்கு மாற்றி விட்டனர்.

## புத்தகம் அச்சிடுதல் கைமாறுகிறதாம்

பாடசாலைப்புத்தகங்களை அரசாங்கத்தால் அச்சிடும் பொறுப்பை கல்வி மந்திரியிடமிருந்து அகற்றி தனது நிர்வாகத்தின் கீழ் எடுப்பதற்கு ராஜ்யமந்திரி முடிவுசெய்துள்ளார் என்று ஜனசத்திய (3-10-65) ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

'முன்னுள் அரசாங்கத்தின் திட்டப்படி பாடசாலைப் புத்தகங்களை அரசாங்கமே அச்சிடவேண்டுமென்று செய்யப்பட்டமுடிவுக்கு எதிராக முதலாளித்துவ புத்தகக் கம்பெனிகள் நடத்தியகிளர்ச்சி வெற்றிபெறும் நிலை உருவாகியுள்ளது.

பாடசாலைப் புத்தகங்களை அரசாங்கமே அச்சிடுமென கல்வி மந்திரி பல பொதுக் கூட்டங்களில் கூறியதையொட்டி பீதியடைந்த ஒரு பணக்காரப் புத்தக வெளியீடு நிறுவனம் தனது பத்திரிகைகள் மூலம் மந்திரியைத் தாக்கத் தொடங்கியதுடன், அரசாங்கத்தில் பொறுப்பானவர்களின் உதவியையும் நாடியது.

கடந்த பொதுத் தேர்தலின் போது யு. என். பியிடம் ஆட்சிப்பொறுப்பைப் பெற்றுக்கொடுப்பதற்காகப் பெருந்தொகையான பணம் செலவிட்ட இந்த நிறுவனம் பாதிக்கப்படுவதை ஏழு கட்சி கூட்டரசாங்கத்தில் பலர் விரும்பவில்லை, ஆகவே புத்தகம் அச்சிடுவது பற்றி முடிவுசெய்யும் பொறுப்பை ராஜ்ய மந்திரி தனது கையில் எடுத்துள்ளார்.' என்று ஜனசத்திய மேலும் எழுதுகிறது.

## இ. போ. சாவில் வேலை நிறுத்தம் வருமாம்

'கடந்த பொதுத் தேர்தலுக்குப் பின்னர் எதுவித விசாரணையுமின்றி இ. போ. சாவில் நியமனம் வழங்கப்பட்டுள்ள சிப்பந்திகளை உடனடியாக வேலை நீக்கம் செய்யாவிட்டால், ஒரு பெரியவேலை நிறுத்தம் நடத்த இ. போ. ச. ஊழியர்கள் தயாராயிருக்கின்றனர்.

அண்மையில் இ. போ. ச. வில் வேலை கொடுக்கப் பட்டவர்களின் தொகை சுமார் ஆயிரமாகும். அவர்கள் மந்திரிகள், அரசாங்க எம். பிகள் ஆகியோரின் சிபார்சின் மீது எடுக்கப்பட்டவர்களாவர். அவர்களை நீக்கும் வரைவேலை நிறுத்தம் செய்வதென இ. போ. ச. தொழிற் சங்கங்கள் முடிவு செய்திருப்பதாக அறியப்படுகிறது.

—ஜனதின (5-10-65)

## திருமலை தமிழர் கோட்டை

"இது எங்களின் அரசாங்கம், உங்களுக்குத் தேவையானபடியெல்லாம் செய்ய நாங்கள் அனுமதிக்க முடியாது.' என்று கூறி திருமலை கோணேசர் கோவில் பகுதியில் ஒரு கள்ளத் தோணி இருப்பதாகத்தகவல்அறிந்து அவரைக் கைதுசெய்வதற்காக அங்கு சென்ற இராணுவ அதிகாரி மீது கோவில் அர்ச்சகர் எரிந்து விழுந்ததாக ஒரு செய்தி அந்தப் பிரதேசத்தில் பரவியது.

கோணேஸ்வரர் கோவிற் பகுதி கள்ளத்தோணிகளுக்கு அபயமளிக்கும் பூமியாக மட்டுமின்றி தமிழர் கோட்டையாகவும் மாறியுள்ளதாம்.

கோவில் கோட்டைக்குள் இருக்கும் இராணுவகாரியாலயங்களையும் அங்கிருந்து அப்புறப்படுத்துவதற்காகத் தமிழரசுவாதிகள் உட்பட தமிழர் கோஷ்டியொன்று பெரும் முயற்சி செய்வதாக அறியவருகிறது.

—[illegible] (3-10-65)

## இறங்குக வயலில்

'இன்று இலங்கையில் வேலையில்லாதோர் தொகை ஆறு இலட்சத்தையும் கடந்து விட்டது. இவர்கள் எல்லோருக்கும் வேலை தேடிக் கொடுக்க அரசாங்கத்தால்முடியாது எனவே வேலையில்லாத அனைவரும் வயலில்இறங்க வேண்டும்' என்று உள்துறை அமைச்சர் டாக்டர் தகநாயக்கா காலியில் ஒருபரிசளிப்பு விழாவில் கூறினார்.'

—எத்த(5-10-65)

## முதலில் வடக்கை கவனிக்கவும்

'முதலில் வடக்கேயுள்ள வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்கவும்' என்ற தலைப்பின் கீழ் 'எத்த' (2.10.65) கீழ்க்காணும் செய்தியைப் பிரசுரித்துள்ளது:—

'அடுத்த ஜனவரியில் நடைபெறவிருக்கும் தமிழரசுக் கட்சி மகாநாட்டுக்கு முன்பு வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழர்களின் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கும்படி தமிழரசுக்கட்சி பிரதமமந்திரியைக் கேட்டுக்கொண்டுள்ளது.

இதற்காக இப்பொழுதே தமிழரசுக் கட்சி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் படித்து வேலையில்லாதிருக்கும் வாலிபர்களின் பட்டியலொன்று தயார் செய்திருக்கிறது.

இவ்வாறுபெருவாரியாகத் தமிழர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கும் போது, அதனைச் சிங்களவர்களுக்குத் தெரியாமல் செய்வதற்காக ஒரு நுட்பமான முறையில் நியமனங்கள்செய்யும் முறையையும் தமிழரசுக் கட்சி சமர்ப்பித்துள்ளது.

தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள அரசாங்கத் தொழிற்சாலைகளிலும், கூட்டுத்தாபனங்களிலும் செய்யும் நியமனங்கள் 75% தமிழர்களுக்கும், சிங்களப்பகுதிகளிற்செய்யும் நியமனங்கள் 75% சிங்களவர்களுக்கும் வழங்கும் ஒரு திட்டத்தை அமுல் நடத்தினால், தமிழ்ப் பிரதேசங்களில்செய்யப்படும் நியமனங்கள் பற்றி சிங்களவர்கள் மத்தியில் ஓர் உணர்ச்சி ஏற்பட முடியாது என்பது தமிழரசுக் கட்சியின் கருத்தாகும்.

தமிழரசுக் கட்சியின் இக் கோரிக்கை சம்பந்தமாக யு. என். பியில் திரு. டட்லி சேனநாயக்காவின் ஆதரவாளர்கள் கோஷ்டி எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இது சிங்களவர்களின் உரிமையைக் காட்டிக்கொடுப்பதாதலின், அக்கோரிக்கையை நிராகரிக்குமாறு அக்கோஷ்டி பிரதமரிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

## எம். ஜி. ஆர் வருகை

'வகுப்புவாதத் தலைவர் இலங்கைக்கு வருகிறார்' என்று மகுடமிட்டு 'எத்த' (2-10-65) கீழ்க்காணும் செய்தியைப் பிரசுரித்துள்ளது!—

'தென்னிந்தியா, இலங்கை, மலாயா ஆகிய நாடுகளை ஒன்று சேர்த்து ஒரு தமிழ் இராச்சியம் நிறுவுவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு தென்னிந்தியாவைத் தலைமைக்காரியாலயமாக வைத்து இயங்கும் திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் தீவிர (தமிழ்) வகுப்புவாத ஸ்தாபனத்தின் பிரமுகர்களில் ஒருவரும், பிரபல தமிழ் சினிமா நடிகருமான திரு. எம். ஜி. இராமச்சந்திரன் நடிகை சரோஜாதேவியுடன் இம் மாதம் 23ந் திகதி இலங்கைக்கு வரவிருக்கிறார்.

இவர்கள் இங்கு வருவது 'தவஸ' பத்திரிகையின் அழைப்பின் மீது தோட்டப் பகுதி அழகு ராணியைத் தெரிவு செய்வதற்கே என்று கூறப்படுகிறது.

தேசிய இயக்கம் பற்றியும் தேசிய ஒற்றுமை பற்றியும் வாய்ச்சவடால் அடிக்கும் தவஸ பத்திரிகைக்காரர்கள் தோட்டப் பகுதி அழகு ராணியைத் தெரிவு செய்வதற்கு தென்னிந்தியாவின் தீவிர தமிழ் வகுப்புவாதி ஒருவரை அழைத்தது இந் நாட்டுத் தமிழர் தலைவர்களால் அதனைச் சரிவர செய்ய முடியாது என்ற காரணத்தாற்தானு என்று இங்குள்ள தமிழர்கள் கேட்கின்றனர்.'

## அரசியல் ஆருடம்

'வான சாஸ்திரிகளும், அரசியல் ஆருடம் கூறுகிறவர்களும் ஏழு கட்சி கூட்டரசாங்கம் டிசம்பரில் அல்லது மார்ச்சில் நொறுங்கிவிடும் என்று உறுதியாகக் கூறுகின்றனர்.

திரு. டட்லிசேனநாயகா தமிழரசுக் கட்சியைக் கைவிட்டு, அரசாங்கத்தின் அதிகாரங்களை ஒரு முகப்படுத்தி கடுமையான ஒரு நிர்வாகத்தை ஏற்படுத்தி சர்வாதிகாரத்தை ஏற்படுத்த முயற்சி செய்யலாம். அப்படிச் செய்தால் மக்களின் எதிர்ப்பின் காரணமாக மேற்கண்ட ஆருடம் உண்மையாவதற்கு இடமுண்டு; எப்படியானாலும் சரி, எதிர்காலம் அம்மையார் அவர்களின் கையிற்தான் என்பது திரளும் மக்கள் ஆதரவிலிருந்து தெரிகிறது.'

—சிங்களே (2-10-65)

அரசாங்க எம். பிகள் தயாரித்துள்ள பட்டியல்களின்படி இப்பொழுது அரசாங்கத்திலும், கூட்டுத்தாபனங்களிலும் வேலைகள் வழங்கப்படுகின்றன. இந்த முறையின்படி இ.போ. சாவில் மட்டும் 400 பேருக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணல் வீடு

## நீதிக் கதை

சேகர், குமார்-என்னும் இரண்டு சிறுவர்கள் வீட்டு முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்தனர். இருவரும் வெவ்வேறு இடங்களில் அமர்ந்து ஆளுக்கொரு மணல் வீடு கட்டிக்கொண்டிருந்தனர். சேகர் அடிக்கடி குமாரின் வீட்டைப் பார்ப்பதும் மறுபடி முகத்தைச் சுளிப்பதுமாக இருந்தான். தான் கட்டும் வீட்டைவிட குமாரின் வீடு அழகாக இருக்கிறதே என்பதால் போலும்.

ஆனால் குமாரோ வேலையில் கண்ணுங் கருத்துமாய் நின்று, வீட்டைக் கட்டி முடித்தான். சற்று அப்பால தள்ளிச் சென்று இரண்டு கைகளையும் பின்னால் கட்டிக்கொண்டு தன் வீட்டின் எழிலை இரசித்தான்.

'டேய் குமார் என் வீட்டையும் உன்னுடையது போல் கட்டித்தருவியா? சேகர்தான் இப்படி வினவினான்.

'மாட்டேன் போ.' அலட்சியத்துடன் குமார் பதிலளித்தான்.

'அப்படியானால் உன் வீட்டையும் உடைத்து விடுவேன் தெரியுமா?'

'அம்மாகிட்டே சொல்லி அடிவாங்கித்தருவேன்.'

'சொல்லேன். சொன்னால் யார்டா உன் அம்மாவுக்குப் பயப்படுவான்? இதோ பார் உன் வீட்டை என்ன செய்கிறேன்.' அந்த அழகிய மணல் வீட்டில் ஓங்கி ஓர் உதை விட்டான் சேகர். வீடு சரிந்து விழுந்தது. மறுகணம் குமார் வீரிட்டலறினான்.

'அம்மா, சேகர் என் வீட்டை இடித்துவிட்டான்.' 'ஐயோ!... அம்மா... ஆ...

இந்தச் சத்தத்தைக் கேட்டு இரண்டு வீடுகளிலிருந்தும் குழந்தைகளின் தாய்மார்கள் ஓடி வந்தனர். வந்தவர்கள் அவரவர் குழந்தைகளைத் தூக்கிக்கொண்டனர்.

'பாரம்மா சேகர் என் வீட்டையும் இடித்து என்னையும் அடித்துவிட்டான்.' என்று உண்மையையும் பொய்யையும் கலந்து கூறினான் குமார்.

பிறகு கேட்கவா வேண்டும்? விசாரணையில் ஆரம்பித்து அது விவாதமாக முற்றி முடிவில் தாய்மார்களின் சண்டையாக முடிந்தது, குழந்தைகள் மூட்டி வைத்த சிறு பிணக்கு.

'நீ இனி அவனுடன் சேர்ந்தாயோ தொலைந்தாய்.' என்று குமாரைத் தர தர வென்று இழுத்துச் சென்றாள் அவன் தாய்.

'நீ மட்டும் என்ன? அந்பக்கம் காலை எடுத்து வைத்தாலும் முறித்து விடுவேன். தெரியுமா?' என்று எச்சரித்தவாறே சேகரை அழைத்துச் சென்றாள் சேகரின் தாய்.

**இதன் பிறகு சண்டை ஓய்ந்தது. இரண்டு பெண்களும் தத்தம் வேலைகளைக் கவனிக்கலாயினர். தமது வேலை மும்முரத்திலே சற்று முன்பு நடந்த சண்டையையும் மறந்து தம் குழந்தைகளையும் மறந்துவிட்டனர்.**

அப்போது மறுபடியும் 'அம்மா! அம்மா' என்னும் குழந்தைகளின் அழைப்புக் குரல் இரு தாய்மார்களின் காதுகளிலும் ஏககாலத்தில் ஒலித்தன. 'இதென்னடா தொல்லை? மறுபடி ஆரம்பித்துவிட்டார்களா? அவனை என்ன செய்கிறேன் பார்?' என்று மனதில் கருவிக்கொண்டு இருவரும் தத்தம் வீட்டு முன் வாசலை நோக்கி ஓடி வந்தனர்.

அங்கே அவர்கள் கண்ட காட்சி, இருவரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்துவிட்டது. ஏனெனில் அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக, இரு குழந்தைகளும் தாம் சேர்ந்து கட்டிய மணல் வீட்டின் அழகை இரசித்த வண்ணம் அவரவர் தாயின் வரவை எதிர்பார்த்தபடி நின்றனர்.

—"இளமதி".

# விருந்தோம்பல்

### இல்லாளின் இனிய பண்பு

**செல்வி நோ. இராசம்மா**

குடும்ப நலனை விரும்பாமல், நற்குண நற்செயல்களை மேற்கொள்ளாமல் உள்ள மனைவியைப் பெற்றவனுக்கு ஏறுபோல் பீடுநடை கிடைக்கமுடியாது. அதே போன்று ஆடவர்க்குரிய அருங்குணங்கள் அமையப்பெறுதவனை வாழ்க்கைத் துணைவனாகப் பெற்ற மகளுக்கும் பிடிபோன்ற பீடு நடையில்லை என்பது உண்மையே. ஒரு குடும்பத்தலைவியின் இல்லம் மங்களகரமாக விளங்குமென்றால் நிச்சயம் அவ்வில்லத்தரசி பிறரையும் ஆதரித்துப் பகுத்துண்டு வாழ்பவளாக இருக்கவேண்டும். அதற்கேற்றவாறு குடும்பத்தலைவனும் வந்தமையவேண்டும்.

நற்பண்புள்ள மங்கை நல்லாளையும், நற்பண்புள்ள வீர புருஷனையும் சேர்த்து வைக்கும் பெற்றோர்கள் உலகத்தில் தெய்வமாகப் போற்றப் படுகிறார்கள்—போற்றப்படுவார்கள். ஒருவன் இல்லத்தில் தருக்கி மகிழ்ந்து வாழ வேண்டுமானால் அவனது வாழ்க்கைத் துணைவி கற்பிற் சிறந்த காரிகையாய் பிளங்க வேண்டும் - நற்குணவதியாய் இருக்க வேண்டும். மிகமுக்கியமாக விருந்தோம்புதலை விரும்புபவளாக இருக்க வேண்டும்.

பண்டைய நம் தமிழ்ப் பெருங்குடி மக்கள் விருந்தோம்புதலை ஒரு கலையாக வளர்ந்து வந்தனர். ஒரு வேளையேனும் விருந்திற்கு ஆள்வரத் தவறினால் உணவு அருந்த மனம் வராது துன்புறுவர். அவர்களின் இல்லறம் சுற்றம் தழுவி, விருந்தோம்பினால்தான் நல்லறமாக விளங்கும். அப்படியில்லாமல் பிறரை வெறுத்து, ஈயாமல் வாழும் வாழ்க்கை நற்பண்புள்ள, கற்புள்ள மங்கையின் மனையறத்திற்கு ஒவ்வாது என்பது பண்டைய நன்மக்களின் ஒப்புயர்வான கருத்தாகும்.

இக்கால நம் இல்லத்தரசிகளோ ஒரு வாரத்திற்கொருதரமாவது விருந்தோம்பற் கலையில் நாட்டம் செலுத்துவர் என்று கூற முடியாது. பிச்சைக் காரர்கள் வந்து 'அம்மா' என்று அழைத்தவுடன் நாயை ஏவிவிட்டு கதவை பூட்டும் தயாள குண இல்லத்தரசிகளும் நம் நாட்டில் இல்லாமல் இல்லை.

பண்டையத் தமிழ் மக்கள் பண்புடன் வளர்த்த விருந்தோம்புதற் கலையை நாம் போற்றிப் பாதுகாப்பது வழிவழி வந்த நமது பண்பை எடுத்துக் காட்டுவதாக அமையும். 'மனையறம்' என்பது இதுவே. உதாரணமாக நற்குணக் குன்றும் கற்பின் செல்வி கண்ணகி அன்புக் கணவன் கோவலனோடு மனையறம் நடத்தாது பிரிவென்னும் துயரால் வருந்தி,

'அறவோர்க் களித்தலும்
அந்தணர் ஓம்பலும்
துற வோர்க் கெதிர்தலும்
தொல்லோர் சிறப்பின்
விருந் தெதிர் கோடலும்
இழந்த என்னை......'

என்று கூறுவதிலிருந்து அவளது இல்லற மனப்பான்மை நன்கு தெரிகின்றது.

இத்தகைய பெண்ணரசிகளை மனைவியராகப் பெற்றுள்ள ஆடவர்கள்—பெறப்போகும் ஆடவர்கள் பெருந்தவம் செய்துள்ள பெருமக்களாவர். இவைமட்டுமல்ல, தெய்வப்புலவன் திருக்குறளிலும் விருந்தோம்புதலின் மான்மியம் காணக்கிடக்கிறது. ஆகவே ஒவ்வொரு இல்லத்தரசியும் நம் தமிழ்ப் பண்பை, நமது அருங்கலையை வளர்த்து வரவேண்டும்.




# நீங்களும்....
# ........ நானும்

சகோதரிகளே!

29-9-65 இதழில் 'ஆசிரியை மாணவி அன்'பைப் பற்றி நாம் கொடுத்திருந்த பதில் பல சகோதரிகளின் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தியிருக்கிறது. ஆசிரியைகள் சிலரும நமக்கு சில உண்மைகளை எழுதியிருக்கின்றனர்.

இப்பத்திரிகையின் பத்திகளிலே எழுத முடியாத பல காரணங்களும் இருக்கின்றன. அவற்றின் நன்மை தீமைகளையிட்டு நானும் நன்கு அறிவேன். ஆனால் இங்கே அவற்றை விபரிக்க முடியாது. ஆகவே தான் எனது பதிலையும் ஓரளவு மழுப்பிவிட்டேன்.

செல்வி ரா...வி... என்னும் சகோதரி ஒருவர் 26-ம் தேதியே எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அக் கடிதத்தையும் அப்படியே பிரசுரிப்பது இயலாது. ஆகவே இப் பத்திகளில் பிரசுரிக்க ஏற்றதாக அவரின் கட்டுரை ஒன்றினை எதிர்பார்க்கிறேன். தனது அனுபவங்களையும் அவர் அக் கட்டுரையில் ஓரளவு விபரித்து எழுதினால் எல்லா சகோதரிகளுக்கும் நன்கு பயன்படும். அவர் எழுதுவார் விரைவில் என எதிர்பார்க்கிறேன்.

'கவர்ச்சி' எனும் மகுடத்துடன் இரு பெண்கள் மத்தியில் ஏற்படும் அன்பையிட்டு விரைவில் ஆராய்ச்சிக் கட்

(14-ம் பக்கம் பார்க்க)

# புன்னகையாலே புரியவைக்கலாம்

## செல்வி அக்காவிடம் சில கேள்விகள்

கேள்வி 1.

என்னை அடைய இருவாலிபர்கள் போட்டிபோடுகின்றனர். அவர்களைப்பற்றி என்னிடம் அடிக்கடி கூறும் மூன்றாவது வாலிபரையே நான் மனமார விரும்புகிறேன். எனது எண்ணத்தை அவரிடம் வெளிப்படுத்த மார்க்கம் ஒன்று கூற முடியுமா அக்கா?

செல்வி...........
திருக்கோணமலை.

நீங்கள் விரும்புபவர்ஏனைய இரு வாலிபர்களைப் பற்றி உங்களிடம் இனிமேல் ஏதாவது கூறினால், சற்றுக்கோபத்துடன், 'அவர்களின் பேச்சை இனிமேல் என்னிடம் எடுக்காதீர்கள். உங்களுக்கு ஏதாவது பேசவேண்டுமானால் என்னிடம் பேசுங்கள். வேறோர் ஆணின் பேச்சைக் கேட்க நான் தயாரில்லை.' என்று துடுக்காகக் கூறி விடுங்கள். அவர் துணுக்குற்று உங்களை மீண்டும் பார்க்கும்போது புன்முறுவல் ஒன்றை மட்டும் வீசுங்கள். காரியம் கைகூடிவிடும். உங்கள் கருத்தை அவர் நொடிப் பொழுதில் புரிந்து விடுவார்.

கேள்வி 2.

### பையன் திருந்த...?

எனது மூத்த மகனுக்கு வயது 18த்தாகிறது. அவனுக்குப்பின்னர் மூன்று பெண்குழந்தைகளும் ஒரு பையனும் உள்ளனர். மூத்தவனைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஒழுங்காகப் பள்ளிக்கூடம் செல்லாமல்கூட்டாளிமாரோடு சேர்ந்து கேவலமாக நடக்கிறான். நானோ கைம்பெண். அவனைத் தண்டிக்கவும் மனம் இடம் தருவதில்லை. அவனைத் திருத்த நீங்கள்தான் ஒரு வழி கூற வேண்டும்.

—'ஏழைத் தாய்'
வெள்ளவத்தை.

ஆண் பிள்ளைகளுக்கு 11 வயது முதல் 20 வயதுவரை தக்க கண்காணிப்பு அவசியம். இக்காலத்தில் கட்டுப்படுத்தி வளர்க்க முடியாதுபோய் விட்டால், பின்னர் கட்டுப்பாட்டுக்குள் அவனைக் கொணர்வது முடியாதகாரியம்.

உங்கள் குடும்பத்திலுள்ள முதிய உறவினர் எவராவது ஒருவருக்கு உங்கள் மகன் ஓரளவு பயப்படலாம். அவருடைய துணையை நாடி அவர் மூலம் சில கட்டுப்பாடுகளை விதிக்க வையுங்கள். முடியுமானால் அவருடைய கண்காணிப்பிலேயே அவனைச்சில வருடங்கள் விட்டு விடுங்கள்.


உங்கள் மகன் விரும்பக்கூடிய ஒரு முதியவரின் மூலம், அவன் உங்கள் குடும்பப்பொறுப்பை உணரக்கூடிய புத்திமதிகளைப்பெற வசதி ஏற்படுத்திக்கொடுங்கள்.

கேள்வி 3.

### மறுமணம்

எனது கணவர் இறந்து ஐந்து ஆண்டுகளாகி

(9-ம் பக்கம் பார்க்க)



'சிரித்திரன்' என்ற பெயரில் ஒரு நகைச்சுவை சித்திர மாத ஏட்டிலிருந்து எடுக்கப்பட்ட படம் இது. இதனை வரைந்தவர் பிரபல நகைச்சுவை ஓவியர் சிவாஜி அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் ஒன்றியத்தின் புதிய திட்டம்

# தனிமனித சுதந்திரத்திற்கு வித்திடலாம்

சோவியத் ஒன்றியத்தின் பொருளாதார அமைப்பில் குறிப்பிடக்கூடிய மாற்றம் ஏற்படப்போகிறது. முதலாளித்துவ அமைப்பில் உள்ள நாடுகளில் இருப்பது போன்று தொழிற்துறைகளில் போட்டி, இலாபம் எல்லாம் இடம்பெறப் போகின்றன. கடந்த சில ஆண்டுகளாக சோவியத்தில் ஏற்பட்ட உற்பத்திக் குறையை அடுத்தே இந்நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிகிறது.

சோவியத் தொழிற் சாலைகளுக்கு அதிக மேற்கத்திய நோக்கு அளிக்கும் இப்பெரும் சீர்திருத்தத்தை சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய குழு அங்கீகரித்துள்ளது. இப்புதிய திட்டத்தை சோவியத் முதலமைச்சர் திரு. கோசியின் அவர்களே 174 உறுப்பினர்களைக் கொண்ட கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய குழுவில் சமர்ப்பித்தார் என்று ஒரு செய்தி கூறுகிறது.

இப்புதிய திட்டம் அமுலாக்கப்படும் பொழுது உருசியாவில் உள்ள தொழிற்சாலைகள் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக்கொண்டு இயங்க ஆரம்பிக்கும். இத்திட்டம் அமுலுக்கு வரும் பொழுது சோவியத் ஒன்றியத்தில் விலைகள், இலாபவிகிதங்கள் முக்கிய அம்சங்களாக இருக்கும்.

## முதற் திருத்தம்

இப்புதிய திட்டம், கடந்த 47 ஆண்டுகளுக்கு முன்னர் போல்சுவிக் புரட்சி நடந்த நாளிலிருந்து சோவியத் ஒன்றியத்தில் கடைப்பிடிக்கப் பட்டுவரும் பொருளாதார அடிப்படைக் கொள்கைகளையும் திட்டங்களையும் மாற்றியமைக்கப் போகின்றது.

சோவியத் ஒன்றியத்தில் ஏற்படவிருக்கும் இப்பெரும் மாற்றத்திற்குத் தொழிலாளர்களின் ஊக்கக் குறைவே காரணம் என்று உலகப் பொருளாதார விமர்சகர்கள் காரணம் கூறுகிறார்கள். தொழிலாளர்களின் ஊக்கக் குறைவினால் சமீப ஆண்டுகளாக தொழிற் துறை உற்பத்தி தொழிலாளர் உற்பத்தித்திறன் குறைந்தாகக் கருத நியாயம் இருக்கிறது. 'சோவியத்தின் பொருளாதார அமைப்பே அடியோடு மாற்றப்படுகிறது' என்று முதலமைச்சர் திரு. கோசியின் கூறியதிலும் பொருள் நிறைந்த கருத்து இருப்பதாகத் தோன்றுகிறது.

## கம்யூனிசத்தில் புரட்சி

ஆனால், சோவியத் ஒன்றியத்தில் ஏற்படும் இப்பொருளாதார அடிப்படை மாற்றம் கம்யூனிச மண்டலத்தில் பெரும்புரட்சியை ஏற்படுத்தப் போகிறது என்பது என்னவோ நிச்சயமாகிவிட்டது. கம்யூனிஸ்ட் சீனாவிற்கும் சோவியத் ஒன்றியத்திற்கும் இடையில் இன்று ஏற்பட்டுள்ள விரிவு, அல்லது சித்தாந்தப் பிளவு மேலும் பலம் பொருந்திய பிரிவாக அமைவதுடன், இரு நாடுகளும் இப்பொருளாதாரத்திட்ட மாற்றத்தினால் என்றுமே, எந்த அடிப்படையிலும் ஓரணியில் நிற்க முடியாது என்பதும் தெளிவாகிறது.

கடந்த சில ஆண்டுகளாக சீனா சோவியத் ஒன்றியத்தை படுபிற்போக்கு வாதி என்றும், ஏகாதிபத்திய வாதிகளுடன் சேர்ந்து கொண்டு விட்டது என்றும் கூறுவது; சீனாவின் அரசியற்கண்ணோட்டத்தில் சரியான கணிப்பாகவேதோன்றுகிறது. ஆனால், சீனா ஏந்திர சக்தியிலும் பார்க்க, மனித சக்திக்கே முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இதுவரை உருசியா மனித சக்தியிலும் பார்க்க ஏந்திர சக்திக்கே முக்கியத்துவம் கொடுத்து வந்திருக்கிறது.

## அடித்தளம்

இப்பொழுது உருசியா பின்பற்றப்போகும் புதிய திட்டம் மனித சக்தியில் அல்லது மனித சக்தியின் நம்பிக்கையில் தங்கியுள்ளது என்பதையும் மறுக்க முடியாது. இப்புதிய திட்டம் மனித சக்திக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக இருந்தாலும், முதலாளித்துவ அடிப்படையிலான மாறுதல் என்று கூறி, இத்திட்டத்தை படுவேகமாகத் தாக்க சீனா பின் நிற்க மாட்டாது

உருசியாவின் பொருளாதார அடிப்படையில், குறிப்பிடக் கூடியதான மாற்றம் புதிய திட்டம் வெளியான பின்னர் ஏற்பட்டதாயினும், கடந்த சிலஆண்டுகளாகவே இதற்கான அடித்தளம் உருவாக்கப் பட்டு வந்தது என்பதை அரசியல் நோக்கர்கள் மறுக்க மாட்டார்கள். இந்த அடித்தள அமைப்பு ஏற்பட்டதை உணர்ந்த பின்னரே சீனா உருசியாவை பகிரங்கமாகத் தாக்க முற்பட்டது என்றும், இதுவே சித்தாந்த வேறுபாடுகளின் அடிப்படைக் காரணம் என்றும் சிலர் வாதிட முற்படலாம்.

## சித்தாந்தப் பிளவு என்பது உண்மையா?

சீனாவிற்கும் உருசியாவிற்கும் உள்ள விரிவுகளின் அடிப்படையான காரணம் இப்பொருளாதார அமைப்பு மாற்றம் தான் என்று யாராவது கணித்தால் அது தவறான கணிப்பு என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இருநாடுகளுக்கு மிடையில் உள்ள விரிவுக்கு, சித்தாந்தப் பிளவிற்கு முக்கிய காரணம் நாட்டுப்பற்று. அந்த நாட்டுப்பற்றின் காரணமாக, யார் கம்யூனிச மண்டலத்திற்குத் தலைமை தாங்குவது என்ற போட்டி. அப்போட்டியில் 'மக்கள் தொகையில் கூடியவர்கள் நாங்கள், எனவே நாம்தான் தலைமை தாங்க வேண்டு'மென்றது சீனா. 'பொருளியல் துறையிலும், தொழில் வளர்ச்சியிலும் முதலாளித்துவ நாடுகளுடன் போட்டி போடும் ஆற்றல் எமக்கே உண்டு, நாம் தான் கம்யூனிச குடும்பத்தின் மூத்தவர்கள் எனவே நாமே கம்யூனிச மண்டலத்திற்குத் தலைமை தாங்குவேன்' என்றது உருசியா.

இது தான் சீனா—உருசியா விரிவின், சித்தாந்தப் பிளவின் அடிப்படையான உண்மைக் காரணம். இந்த விரிவு வலுப் பெறுவதற்கு உருசியா கடைப் பிடித்த 'உடனிருந்து வாழும், முதலாளித்துவ நாடுகளுடனான சமாதான கொள்கைகளும்' ஏனைய பொருளாதார அடிப்படை மாற்றங்களும் காரணமாக அமைந்தன. இன்று உருசியாவில் ஏற்படும் புதிய நோக்கத் திட்டம் பிளவுபட்டிருக்கும் கம்யூனிச மண்டலத்தைத் தெளிவான முறையில் அடையாளம் காட்டும் மாற்றமாக அமையப் போகிறது. 'சீர்குலைவாளர்கள், திரிபுவாதிகள்' என்ற கூச்சலை இரு பகுதியினரும் ஓங்கி ஒலிக்கப் போகிறார்கள்.

**பூங்குன்றன்**

## ஏகபோகம் தளர்ந்தது

உருசியாவில் இப் புதிய நோக்கத் திட்டம் உருவாகுவதற்கான காரண காரியங்களைப் நோக்குவது அவசியமாகிறது. இப் புதிய திட்டத்தினால் சோவியத் ஒன்றியத்தில் ஏற்படப் போகும் மாற்றங்களையும் நோக்க வேண்டும்.

தேக்கமுற்று இருக்கும் சோவியத் ஒன்றியத்தின் பொருளாதார அமைப்பு, முயற்சிக்குத் தகுந்த பயனைப் பெற்று புதிய சீரமைப்பைப் பெறப் போகிறது. இப்புதிய நோக்குத் திட்டம் பூரணமாகச் செயற்படும் பொழுது மக்களின் தேவைகளும் எண்ணங்களும் முக்கியத்துவம் பெறப் போகின்றன.

அண்மைக் காலத்தில் உருசியாவில் ஏற்பட்ட அனுபவத்தை யொட்டியே இப் புதிய திட்டம் உருவாக்கப் பட்டுள்ளது என்பதை மறைக்க முடியாது. பொருளாதாரத்தில் ஆட்சிபீடம் ஏகபோக ஆதிக்கம் செலுத்தி திட்ட வரிசைக் கிரமங்களையும், முன்னுரிமைகளையும், இலக்குகளையும், விலைகளையும் சர்க்காரே நிர்ணயிக்கும் கொள்கை ஓரளவு தோற்று விட்டது என்பதை சோவியத் ஒன்றியம் பரவலாக ஏற்றுள்ளது என்பதை இம்மாற்றம் தெளிவுபடுத்துகிறது.

இப்புதிய நோக்குத் திட்டத்தின் மூலம் மேற்கூறிய பணிகளை அவ்வவ் விடங்களில் உள்ள நாட்டு நிலையை உணர்ந்த வல்லவர்களின் பொறுப்பாக்க வேண்டுமென்றகொள்கை வலுப் பெறுகிறது. இத்திட்டத்தை ஏற்கனவே திரு. குருஷ்சேவ் வலியுறுத்தி இசைவு பெற்றார் என்பதும் கவனிக்கத்தக்கதாகும். திரு. குருஷ்சேவ் பதவியிலிருந்து விலகுவதற்கு முன்னரே பொருள் உற்பத்தி பெருகுவதற்கான ஊக்க உற்சாகங்கள் தொழிலாளருக்கும், தொழில்களை நிர்வாகிப்போருக்கும் அளிக்கப்பட வேண்டும் என்ற கிளர்ச்சி சோவியத் ஒன்றியத்தில் பரவலாக வலுப்பெற்றது.

தொழிலில் போட்டா போட்டி இருக்க வேண்டும். உற்பத்தியென்பது இலாபத்தை அடிப்படையாகக் கொண்டே அமைய வேண்டும். ஒரே தொழிலில் பல்வேறு நிறுவனங்களுக்கிடையில் போட்டியும், உழைப்புத் திறனுக்கேற்ப தொழிலாளருக்கு சிறப்புப் படியும், மிகுதி இலாபத்தை தானே பயன்படுத்திக் கொள்வதற்கான வசதிகள் எல்லாம் புதிய திட்டத்தில் இடம் பெறுகின்றன. ஊதியத்தின் அளவை உற்பத்தியின் அளவுடன் தொடர்பு படுத்த வேண்டும் என்றும், இல்லாவிடின் பொருளாதார வளர்ச்சி சாத்தியப்படாது என்பதையும் சோவியத் ஆட்சி பீடம் ஏற்றுக் கொண்டு விட்டது. இது கம்யூனிச அமைப்புக்கான செயல் முறைத் திருத்தம் என்றும் கூறலாம்.

## காலங் கடந்த திட்டமா?

ஆனால், சோவியத் ஒன்றியத்தின் காலங் கடந்த திட்டம் பூரண வெற்றியைக் கொடுக்குமா? உலக நாடுகளின் வளர்ச்சியும் போக்கும் இப் புதிய திட்டத்தின் வெற்றிக்குச் சாதகமாக உள்ளதா என்ற கேள்வியும் கூடவே எழுகிறது.

அண்மையில் நமது நாட்டுக் கைத்தொழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன கூறிய சில கருத்துக்களையும் இச் சந்தர்ப்பத்து ஆராய்வது பயனுடைத்தாகும் தொழில் துறையில் போட்டி யேற்பட்டுத் தேவைக்கு மேல் உற்பத்தி பெருகுவதும் நாட்டின் பொருளாதாரத்தை தேக்கமுறவும், பின் தங்கவும் செய்யும்.

கடந்த சில ஆண்டுகளில், நமது நாட்டில் கைத்தொழில் வளர்ச்சியில் ஒரு வேகம் ஏற்பட்டது என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆனால் இந்த வளர்ச்சியும் வேகமும் சரியான முறையில் அமைந்துள்ளதா, வகுக்கப்பட்டதா என்று கேட்கத் தோன்றுகிறது.

இந்நாட்டிலுள்ள இனிப்பு வகைத் (சொக்லேட்) தொழிற்சாலைகள் வருடமொன்றுக்கு 30,000 அந்தருக்கு மேற்பட்ட சொக்லேட்டுகளை உற்பத்தி செய்கின்றன. ஆனால் இந்நாட்டு மக்களுக்கு ஆண்டொன்றுக்கு 5,600 அந்தரிலிருந்து 6000 அந்தர் வரையிலான சொக்லேட்டுக்களே தேவைப்படுகிறதாம். அப்படியானால் மிகுதியை என்ன செய்வது. மிகுதியாக உள்ளவற்றை ஏற்றுமதி செய்ய வேண்டும். அதற்கும் எதிர்பார்க்கும் வசதியிருப்பதாகத் தெரியவில்லை. இந்நிலை நீடித்தால் சொக்லேட் உற்பத்தியை எல்லோருமே கைவிட்டு விடுவார்கள்.

இதே போன்றுதான் இலங்கையில் உள்ள சவர அலகுத் தொழில், கம்பி ஆணித் தொழில் போன்றனவும் அமைந்துள்ளன.

சவர அலகு உற்பத்தியில் மூன்று தொழிற்சாலைகள் ஈடுபட்டிருக்கின்றன. இம் மூன்று தொழிற்சாலைகளிலும் வருடமொன்றுக்கு நான்கு கோடி டசின் சவர அலகுகளை உற்பத்தி செய்ய முடியும். ஆனால் நாட்டுக்கு அரை கோடி டசின் சவர அலகுகளே வருடமொன்றுக்குத் தேவைப்படுகின்றன. அப்படியானால் எஞ்சிய மூன்றரைக் கோடி சவர அலகுகளையும் கடலில் வீசுவதா?

## அமெரிக்காவில்...

பொருளாதார உற்பத்தியில் கட்டுப்பாடற்ற போட்டா போட்டியேற்படுவதினால் இத்தகைய தீமைகளும் ஏற்படுவதற்கு இடமேற்படுகின்றன. இவற்றை நோக்கும் பொழுது பொருளாதார ஏகபோக ஆதிக்கம் சரியான வழியில் அரசாங்கத்தால் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்றும் எண்ணத் தோன்றுகிறது.

சோவியத் உருசியா போன்ற முன்னேறியுள்ள நாடுகளுக்கு கட்டுப்பாடற்ற போட்டி தீங்கு விளைவிக்காது என்று பொருளாதார விற்பனர்கள் கூறக் கூடும். அப்படியானால் அமெரிக்க நாட்டில் உள்ள முதலாளித்துவ விவசாயிகளும் தங்கள் உற்பத்தியை செலவாக்க முடியவில்லையென்றும் அதனால் கஷ்டப்படுவதாகவும் கூறுகிறார்களே. இரண்டு ஆண்டுகளாக விளைவிக்கப்பட்ட கோதுமைகள் விற்பனையாகாது தேங்கியிருப்பதாக அமெரிக்க விவசாயிகள் கூறி வருத்தப்படுவதும், அதனால் தொடர்ந்து முழு நிலத்திலும் கோதுமையை விளைவிக்க அவர்கள் விரும்பவில்லையென்று அறிவிக்கப்பட்டதும் ஏன், என்று கேட்கத் தோன்றுகிறது.

## புதிய சகாப்தம்

உலக நாடுகள் அனைத்தும், அவை பொருளாதாரத்தில் பின்தங்கியனவாக இருந்த போதிலும், சுய தேவைகளை தாமே உற்பத்தி

(14-ம் பக்கம் பார்க்க)

**சோவியத் பிரதமர் திரு. கோசியின் ஒரு புதிய நோக்குப் பொருளாதாரத் திட்டத்தை அறிவித்துள்ளார். இந்தத் திட்டத்தை 174 உறுப்பினர்களைக் கொண்ட சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய குழுவும் அங்கீகரித்து விட்டது. இப் புதிய திட்டம் அமுல் நடாத்தப்படும்பொழுது உருசியாவில் குறிப்பிடக்கூடிய மாற்றங்கள் ஏற்படப் போகின்றன என்பது ஏதோ உண்மையாகி விட்டது. இதுவரை கம்யூனிச நாடுகளில் இல்லையென்று கூறப்பட்டு வந்த தனிமனித சுதந்திரம், புதிய திட்டத்தின் மூலம் சோவியத் மக்களுக்குக் கிடைக்கப் போகிறது. ஆனால் கம்யூனிஸ்ட் சீனா இப்புதிய திட்டத்தை படுபிற்போக்குவாத முதலாளித்துவ மாற்றம் என்று கூறி பியர்த்தெறியப் போகிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1965 ஒக்டோபர் மாதம் 10-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் - 3411 த. பெ. 1183

# ஏகோபித்த கோரிக்கை

வட இலங்கையில் இராணுவத்தினரின் அட்டகாசம் மீண்டும் தலை தூக்கியுள்ளது. இராணுவ அட்டூழியங்களுக்கெதிராக மக்களும் செயல்படத்தொடங்கியுள்ளனர் என்பதைச் சென்ற வாரத்தில் வல்வெட்டித்துறையில் கண்டோம். எனவே வட பகுதியிலிருந்து இராணுவத்தை அப்புறப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை புத்துயிர் பெற்றுள்ளது.

தமிழ் பகுதிகளைத் தவிர இலங்கையில் வேறு எந்தப் பகுதியிலும் இம்மாதிரி இராணுவம் நிறுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கள்ளக் குடியேற்றத்தைத் தடுப்பதற்கென காரணம் காட்டியே முதலில் இராணுவத்தினர் வட பகுதிக்கு அனுப்பப்பட்டனர். பின்னர் படிப்படியாக இராணுவத்தினரின் எண்ணிக்கையைப் பெருக்கி, அங்கு ஒரு இராணுவப் படையையே நிரந்தரமாகவே நிறுத்தி வைத்தனர் முன்னாள் ஆட்சியாளர். தேசிய அரசாங்கம் மென்மேலும் இராணுவத்தினரை அங்கு அனுப்பி படையைப் பெருக்கியதின் மூலம் முன்னாள் அரசாங்கத்திற்குத் தான் சளைத்ததல்ல என்பதைக் காட்டிக் கொண்டது. மேலும் 250 இராணுவ வீரர்களைத் தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பப் போவதாகவும் கடந்த வாரம் ஒரு செய்தி வெளியாயிற்று.

கள்ளக் குடியேற்றத்தைத் தடுப்பதற்கென அனுப்பப்பட்ட இராணுவம், பின்னர் வேறு காரணங்களுக்காகவும் முன்னாள் அரசாங்கத்தால் பயன்படுத்தப்பட்டதென்பது நாடறிந்த இரகசியம். தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டங்களை நசுக்கும் முயற்சிக்காகவே இராணுவத்தினர் அன்று பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டனர். தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டங்களுக்கெதிராக இராணுவத்தினர் பயன் படுத்தப்படும் போது அவர்களுக்கு தமிழர்—எதிர்ப்பு உணர்ச்சியும் தமிழ் பேசும் மக்கள் மீது வெறுப்பும் ஏற்படுவது இயற்கையே. இந்த எதிர்ப்பு உணர்ச்சியும் வெறுப்பும் தமிழ் பேசும் மக்களைத் துச்சமாக—அடிமைகளாக எண்ணும் மனப்பான்மையை அவர்களுக்கு ஏற்படுத்துகிறது. எனவே அவர்கள் தமிழ் பேசும் மக்களை அடக்கி ஒடுக்கி இராணுவ சர்வாதிகாரம் நடத்த முன்வருகின்றனர். இதன் விளைவாகவே தமிழ்ப் பிரதேசத்தில் இராணுவத்தினர் மிருகத்தனமான அட்டூழியங்களைப் புரிந்தனர். திடீரென வீடுகளில் புகுந்து மக்களைத் தாக்குதல், கொள்ளையிடுதல், பெண்களை இம்சித்தல் முதலிய கொடிய செயல்களைச் செய்யவும் அவர்கள் அப்பொழுது பின் வாங்கவில்லை,

சுருங்கக் கூறின், கைப்பற்றப்பட்ட பிரதேசத்தில் இராணுவ சர்வாதிகாரம் நடத்துவதைப்போன்று தமிழ்ப் பகுதிகளில் இராணுவத்தினர் அட்டகாசம் புரிந்தனர். ஆகவே வட பகுதியிலிருந்து இராணுவத்தை வாபஸ் வாங்குமாறு கிளர்ச்சி பொங்கியது. மக்களிடை கொந்தளிப்பும் ஏற்பட்டது. பாராளுமன்றத்திலும் தமிழரசுப் பிரதிநிதிகள் இராணுவத்தினரின் அட்டூழியங்களை பன்முறை எடுத்துக் கூறி அவர்களை அங்கிருந்து அகற்றுமாறு முன்னாள் அரசாங்கத்தை வற்புறுத்தினர்.

ஆனால் முன்னாள் அரசாங்கமோ இராணுவத்தை வாபஸ் வாங்குவதற்குப் பதிலாக அதனை மென்மேலும் வலுப்படுத்தியது. இச் செயல் இராணுவ அட்டூழியங்களை அந்த அரசாங்கம் எதிர்க்கவில்லை என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது.

தமிழ் பேசும் மக்களின் அரசியற் போராட்டங்களை ஒடுக்குவதற்கு முன்னாள் அரசாங்கம் இராணுவத்தையே நம்பியிருந்தது. எனவே இராணுவ அட்டூழியங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்ற எண்ணமோ, இராணுவத்தை வாபஸ் வாங்க வேண்டுமென்ற எண்ணமோ, அவர்களுக்கு ஏற்படவில்லை. தமிழ் பேசும் மக்களின் உள்ளக் கொதிப்பை அவர்கள் அலட்சியம் செய்துவந்தனர்.

ஆதலின், தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் நிலைமை மாறுமென்று மக்கள் எதிர்பார்த்தனர். இராணுவ அட்டகாசங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுமென்று நம்பினர். இராணுவம் வாபஸ் வாங்கப்பட்டு, வடபகுதி மக்கள் நிம்மதியாக வாழ வாய்ப்புக் கிடைக்குமென்று கருதினர்.

ஆயினும் நிலைமையில் மாற்றம் ஏற்படவில்லை. அரசாங்கம் எதிர்க்கட்சித் தலைவியின் துவேசப் பிரசாரத்துக்கு விட்டுக் கொடுத்து, வடபகுதியில் இராணுவத்தினரைப் பலப்படுத்துவதில் இறங்கியது. இது சிங்களவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக எடுத்த நடவடிக்கையாக இருக்கலாம். ஆனால் அந்நடவடிக்கையின் பயங்கர விளைவு தமிழ் பேசும் மக்களையே பாதிக்கிறது.

வட பகுதியிலிருந்து இராணுவம் அகற்றப்படா விட்டாலும், இனி மேல் அவர்கள் அட்டூழியங்கள் புரிய இடமளிக்கப்படமாட்டாது என்று அரசாங்கத் தரப்பில் கூறப்பட்டது. இது வெறும் ஆறுதல் மொழியே தவிர இராணுவத்தினர் தங்களின் எதேச்சாதிகார தர்பாரைக் கைவிட்டதாகத் தெரியவில்லை. சென்றவாரம் நிகழ்ந்த சம்பவங்களே இதற்குச்சான்று.

ஆகவே இராணுவத்தை இனிமேலும் வடபகுதியில் நிறுத்திவைப்பதற்கு எவ்வித நியாயமும் கிடையாது.

இதனைத் தேசியஅரசாங்கத்துக்கு நாம் தெளிவாகக்கூறுகின்றோம்.

தமிழ் பேசும் மக்களிடையே கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. அவர்கள் உணர்ச்சியை உணர்ந்து இனியும் காலதாமதம் செய்யாமல் அங்கிருந்து இராணுவத்தை வாபஸ் வாங்க வேண்டும்.

இது தேசிய அரசாங்கத்துக்கு நாம் விடுக்கும் எச்சரிக்கை!

தமிழ்ப் பிரதேசங்களில் இராணுவத்தினர் புரியும் அட்டூழியங்களுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

இது தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த கோரிக்கை!

# சீனாவின் நட்பு ஆபத்தானது

—o—

## சுகர்னோவின் கதி இலங்கைக்கும் நேரலாம்

கொம்யூனிஸ்ட் சீனா உதயமானதும், அமைதியாகவும் சமாதானமாகவும் வாழ்ந்த தென்கிழக்கு ஆசிய நாடுகளில் கொந்தளிப்பும் கொடிய யுத்தமும் ஏற்படத் தலைப்பட்டு விட்டது. நேசக்கரம் நீட்டுவது போல் சீனா நாசம் விளைவிக்க முயல்கிறது. இந்தோனேஷியாவில் ஏற்பட்டுள்ள இடர்பாடுகளுக்கும் சீனாவே காரணமாம். இத்தகைய ஆதிக்க வெறி பிடித்த சீனாவுடன் இலங்கை கப்பற் போக்குவரத்து ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டுள்ளது ஆபத்தாகாதா?

வியட்நாமில் புயல் வீசுகிறது. இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் எரிமலை வெடிக்கிறது. இதோ இந்தோனேஷியாவில் பூகம்பம் உருவெடுத்துள்ளது.

தென்கிழக்கு ஆசிய நாடுகள் அனைத்திலும் ஏதாவது அபாயகரமான நிகழ்ச்சிகள் அவ்வப் போது தலையெடுத்து ஆட்டிப் படைக்க ஆரம்பித்துவிட்டன. அமைதி குறைந்து விட்டது. சமாதனத்தைக்கு சமாதிகட்டும் வேலையினை இந்நாடுகள் யாவும் ஒன்று சேர்ந்து தொடங்கியிருக்கின்றன.

நாடு பிடிக்கும் நப்பாசையால் உந்தப்பட்ட மேலை நாடுகளிலே தான் அடிக்கடி கொந்தளிப்புகள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. ஆயுத உற்பத்திப் பெருக்கமும் அரசியல் ஆதிக்க வெறியும் அங்கெல்லாம் நிறைந்திருந்தமையினால் அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டுக்கொண்டே வந்தன. எந்த நாடுபெரியது? எந்தநாடு பலமற்றது? என்ற போட்டியில் மேலை நாடுகள் ஈடுபட்டு தத்தம் கைவரிசைகளைக் காட்டுவதில் சிரத்தை கொண்டு வந்தன.

இப்பொழுது அது பழங்கதையாகி விட்டது. அந்நாடுகள் ஓரளவு அமைதியாக முன்னேறுகின்றன. அங்கே ஆயுதங்கள் மட்டும் வளரவில்லை, பொருளாதாரத்துறையும் ஆராய்ச்சிப் பெருக்கமும் பல்கிப் பெருக ஆரம்பித்துவிட்டன. ஆனால் கிழக்கு நாடுகள்-முன்னேற்றப் பாதையில் கிடக்கும் முட்களைக்களைந் தெறிய வேண்டிய சிறிய நாடுகள்-ஒன்றோடு ஒன்று சமரிட்டு, உள்நாட்டு யுத்தங்களிலே பொழுதையும் பொருளையும் ஆற்றலையும் ஆண்மையையும் செலவு செய்து வருகின்றன.

### சீனாவின் வலை

தென் கிழக்கு ஆசிய நாடுகளிலே அடிக்கடி கொந்தளிப்பு ஏற்படக் காரணம் என்னவென்பதை ஆராய்வோமானால் ஒரு பெரும் உண்மை நமக்குப் புலனாகிவிடும். இற்றைக்குப் பதினறு ஆண்டுகளுக்கு முன்னர் சீனாவிலே ஏற்பட்ட புரட்சியே

இன்று ஆசியாவில் உருவாகிவரும் ஆபத்துக்களுக்கெல்லாம் ஆதி காரணம் என்பதை சர்வதேச அரசியல் வாதிகள் அனைவரும் ஒப்புக்கொள்ளவே செய்வர்.

பஞ்சத்தாலும் பட்டினியாலும் வாடித்துயருற்ற அறுபது கோடி மக்களும் தங்கள் பஞ்சத்தையும் துயரத்தையும் போக்கடிக்க வல்ல ஆட்சி முறையை ஏற்படுத்திக் கொண்டமையை நாம்கண்டிக்க முனையவில்லை.

### அரசியல் அவதானி

சீனநாட்டு மக்கள் விரும்பிய பொதுவுடமை அவர்களுக்கு அருந்துணைபுரிந்திருக்கலாம். அதற்காக நாம் கடுகளவேனும் கண்டனக்கணை தொடுக்கவில்லை. ஆனால் அண்டை அயல் நாடுகளை வளைத்துப்பிடித்துக்கொள்ள சீனா செய்யும் நரித்தந்திரங்களையே நாம் கண்டிக்க நேரிடுகிறது.

### நயவஞ்சகம்

தங்கள் நாட்டிலே தக்கதோர் ஆட்சியை அமைத்துக் கொண்டு விட்டமைக்காக சீனக் கொம்யூனிஸ்டுகளைப் பாராட்டுகிறோம். ஆனால் அயலிலுள்ளவர்களுக்கு நேசக்காரத்தை நீட்டி நயவஞ்சகம் புரிவதையும், பாசத்தைக் காட்டி பாதகச் செயல்கள் புரிவதையுமே நாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்கிறோம்.

அண்டை நாடுகளுடன் அன்புபூண்டு அண்டியிருக்க விருப்பம் கொள்ளுவது போல் ஆரம்பகாலத்தில் வேடமிட்ட சீனாவின் அந்தரங்கநோக்கத்தை அறிய அதிக நாட்கள் கடந்துவிடவில்லை.

சீனா தலையெடுக்கத் தலைப்பட்டதும், சர்வதேசத்திலுமே தன்னை மிஞ்சிய திரன் இல்லை என்று சவால் விடத் தலைப்பட்டது. கொம்யூனிஸக் கொள்கையை சீனாவுக்குக் கற்றுக்கொடுத்த ருஷியாவுடனேயே மோதி, குருவுக்கு மிஞ்சிய சீடனாக முனைந்தது. உலகத்து நாடுகளுக்கே சமாதான தீபத்தை ஏற்றித்தரத் தலைப்பட்ட இந்தியாவையே வலுச் சண்டைக்கிழுத்து வம்புக்குள் மாட்டியது.

அண்டை நாடுகளான இந்தியாவின் மீது பாகிஸ்தானை ஏவிவிட்டு வேடிக்கை பார்க்கத் தலைப்பட்டு விட்டது.

இன்று இந்தோனேஷியாவிலே ஏற்பட்டுள்ள அமைதியற்ற கொந்தளிப்பான நிலமைக்கும் சீனாவே காரணம் என்று கூறப்படுகிறது.

### முன்னேற்றப் பாதையில் முள்

பலநூறு வருடங்களாக டச்சுக்காரர்களின் ஆதிக்கத்தில் அகப்பட்டுத் திண்டாடித் திணறிய இந்தோனேஷியா, கடந்த இரண்டாவது யுத்தத்தின் பின் அந்நிய ஆதிக்கத்திற்குச் சாவுமணி அடித்தது. ஜப்பானியர் அகன்ற பின்னர் ஏகாதிபத்தியவாதிகள் தன் மண்ணைக் கூறு பாட விடாமற் செய்து வெற்றிகண்டது. சுகர்னோவின் தலைமையில் நாடு சுபீட்சப் பாதையில் முன்னேற முயன்றது. ஆனால் முன்னேற்றப் பாதையில் முள்ளைத் தூவும் பணியில் சீனா முனைந்திருப்பதாகச் செய்திகள் கிடைத்துள்ளன.

சீனாவுடன் நெருங்கிய நட்புறவு கொண்டிருந்தவர் சுகர்னோ. சீனாவும் இந்தோனேஷியாவும் நட்புக்கரம் கோர்த்து ராஜநடை போட்டு வந்தன. அடுத்துக் கெடுக்கும் அற்பர்களைப்போன்று சீனா நடந்து விட்டது. சுகர்னோவுக்கு எதிராக சூழ்ச்சிசெய்வோருக்கு சீனா ஆயுதங்களை அனுப்பியிருக்கிறதாம். பகையாளி குடியை உறவாடிக்கெடுப்பதாகக் கூறுவார்கள். இங்கே முற்றிலும் மாறாக நடந்துவிட்டது. உற்ற நண்பனை உறவாடியே கொல்லும் கொடுமை நடைபெற்றிருக்கிறது.

சீனாவுக்கும் இந்தோனேஷியாவுக்கும் ஏற்பட்ட ஒட்டுத்தான் ஏனைய ஆசிய நாடுகளுடன் இந்தோனேஷியா உறவு கொள்ளவொட்டாமல் தடுத்தது. பாண்டுங்கில் உருவான பஞ்சசீலத்தைச் சீனா தகர்த்ததை அன்று கண்டிக்க முனைந்த இந்தோனேஷியா இன்று சீனாவிடம் தஞ்சம் புகுவதற்கு ஏற்ற காரணம் என்ன என்பதனை எவரும் கண்டுகொள்ள முடியாது போய்விட்டது. சீனா வெடிக்கவிருக்கும் இரண்டாவது அணுகுண்டு இந்தோனேஷியாவினுடையதே என்று கூறும் அளவுக்கு நிலமை இருந்தது.

இதிலிருந்து சீனாவுடன் எந்த நாடும் கொள்ளும் நட்பானது, நெருப்பைக் காதலிக்கும் விட்டிற் பூச்சியின் விருப்பிற்கு ஒத்ததாகவேயிருக்கும். கொம்யூனிஸ்டு நாடுகளுடன் உறவு கொள்வது எப்போதும் அதிபயங்கரமானது என்பதனையே இக்கூற்று மெய்ப்பிக்கிறது.

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுது வினைஞர் சங்கத்தைப் பிளவுபடுத்த ‘அலி’ சங்கம் முயற்சி

## திரைமறைவு நாடகம் அம்பலம்

இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவிலுள்ள அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம் மொழி வழித் தொழிற் சங்கங்களில் ஒன்றுன எழுதுவினைஞர் சங்கத்தைப் பிளவுபடுத்திப் பலவீனப் படுத்தும் முயற்சியில் இறங்கியிருப்பதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. கடந்த வாரம் இச்சங்கத்தினரின் மண்டபத்தில் நடைபெற்ற புதிய சேவையாளரான ஒரு சிலரின் கூட்டமொன்று இச்செய்தியை உண்மைப்படுத்தும் முறையில் அமைந்துள்ளது என்று அரசாங்க ஊழியர்கள் வட்டாரத்தில் பேசப்படுகிறது.

புதிதாகச் சேவையில் சேர்ந்த ஒரு சில தமிழ் தபாலதிபர்களினதும், ஒரு சில இரவு தொலை பேசி தமிழ் ஊழியர்களதும்கூட்டமொன்று கடந்த வாரம் கொழும்பிலுள்ள அரசாங்க லிகிதர் சேவைச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது வாசகர்கள் அறிந்ததே. இக்கூட்டத்தில் சிங்கள மொழியைப் பயில தாங்கள் தயாரென்றும், மொழிவழி பிரிந்து தொழிற் சங்கம் அமைப்பது இன்று உருவாகும் தேசிய ஒற்றுமையைச் சீர்குலைக்குமென்றும், தாங்கள் தேசிய அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் என்றும் கருத்துக்கள் தெரிவிக்சப்பட்டதாம். இது, அ. லி. சேவைச் சங்கம் தமிழ் ஊழியர்களின் பலமான தொழிற் சங்கமான எழுதுவினைஞர் சங்கத்தைப் பிரிக்கும் நோக்கத்துடன் எடுத்துள்ள புதிய திரைமறைவு நடவடிக்கை என்று அரசாங்க ஊழியர்கள்பேசிக் கொள்கிறுர்கள்.

அ. லி. சே. சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களும், குறிப்பாக இக் கூட்டத்தை நடாத்துவதில் முன்னணியில் நின்றவர்கள் கடந்த காலங்களில் தேசிய அரசாங்கத்தின் ஆதரவாளர்களாக இருந்தவர்கள் என்றும், இவர்கள் இடதுசாரிக் கட்சிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் என்றும் நமது நிருபர் தெரிவிக்கின்றுர்.

இக்கூட்டம், எழுதுவினைஞர் சங்கத்தை முறியடிக்க தமிழ் இடதுசாரிகளாலும், அ. லி. சே. சங்கத்தினராலும் எடுக்கப்பட்ட திரைமறைவிலான முதல் முயற்சி என்பது உண்மையாகி விட்டது. இக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் இருவர் கடந்த காலங்களில் பொன்னம்பலம் கட்சியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்களாம்.

## உணவுச் செய்கைக்கு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திகதிக்குப் பிந்தாமல் அனுப்பிவைக்கப்பட வேண்டும். இதற்கான விண்ணப் பப் படிவங்களை அரசாங்க அதிபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். இக்காணிகள் பெறுவோருக்கு உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ள சில வருமானவரி விலக்குகள் கொடுக்கப்படும்.

தமிழ்ப்பகுதிகளில் கீழ்க் கண்ட இடங்களில் காணி வழங்கப்படும்:

1. திருமலை மாவட்டம்:

(அ) கொரப்பொத்தானை - திருகோணமலை வீதிக்கு வடக்கும் தெற்குமுள்ள சுமார் 3000 ஏக்கர்.

2. மன்னர்-வவுனியா மாவட்டம்:

(அ) பலம்பிட்டி, இரணை இலுப்பைக்குளம், பூவரசன் குளம், பறையன் குளம் ஆகியவற்றிடையுள்ள சுமார் 5000 ஏக்கர்.

(ஆ) செட்டிகுளம், சுபகச்சி, பறையன்குளம், மல்வத்தைஆறு ஆகியவற்றுக்கிடையுள்ள சுமார் 5000 ஏக்கர்.

(இ) சூரியன் ஆறு, நெடுங்கேணி, நாயாறு, தண்ணி ஊற்று ஆகியவற்றிடையேயுள்ள சுமார் 7 தொடக்கம் 10 ஆயிரம் ஏக்கர் வரையுள்ள காணி.

(ஈ) மருதோடை கிராமத்திற்கு கிழக்கிலுள்ள சுமார் 2500 ஏக்கர்.

3. மன்னர் மாவட்டம்:

(அ) கொக்குப் படையான் குளம் சுமார் 6500 ஏக்கர்.

(ஆ) மறிச்சுக்கட்டி சுமார் 5000 ஏக்கர்.

4. யாழ்ப்பாணம்-மன்னர் மாவட்டம்

(அ) பூநகரி - துணுக்காய், பல்லவராயன் காட்டிற்கு வடக்கிலும் பூனகரி வீதிக்கு மேற்கிலும்

(ஆ) வெள்ளாங்குளத்திற்கு வடக்கிலும் பூனகரி வீதிக்குக் கிழக்கிலும் உள்ள 5000 ஏக்கர்.

5. அம்பாறை மாவட்டம்:

(அ) பாணமைப்பற்று சுமார் 5000 ஏக்கர்.

(ஆ) லகுகலை குளத்திற்குக் கீழ் கெறலுயாவிற்கு தெற்கில் உள்ள சுமார் 5000 ஏக்கர்.

இதுபற்றிய மேல்விபரத்திற்கு செப்டம்பர் 24-ம் திகதிய அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

"இக்காணிகளைப் பெறுவதற்கு தமிழ் பேசும் மக்கள் முன்வர வேண்டும் என்றும், மற்றுர் அபகரிக்க விட்டால் புதிய வழியில் ஆபத்துக்கள் உருவாகலாம்" என்றும் ஒரு உயர்தர நிர்வாக அதிகாரி நமது நிருபரிடம் கூறியுள்ளார்.

## ஓ தலைவ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் கட்சியின் துணைச்செயலாளராகக் கடமையாற்றியதுடன், 1961ம்ஆண்டு நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில் நடைபெற்ற சமஷ்டித் தமிழரசுக் தபால்சேவை அமைப்பில் பிரதம தபால் அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டிருந்தார்.

## படம் தவிடுபொடி

சிங்களத்தேர்ச்சிபெருத காரணத்தால் நிறுத்தப்பட்டிருந்த சம்பள உயர்வை மீண்டும் நேற்றுபெற்றுக்கொண்ட கொழும்புத் துறைமுகக் கமிஷன் நிதிப் பகுதியில் கடமையாற்றும் தமிழ் ஊழியர்கள் விட்டுக்குச் செல்லும் போது அலுவலகத்தில் சுவரில் தொங்கிக்கொண்டிருந்த முன்னுள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் படத்தை எடுத்து தரையில் எறிந்து நொறுக்கிவிட்டுச் சென்றனர். இந்தக் கீழ்த்தரமான செயலால் துறைமுகக் கமிஷன் சிங்களத் தொழிலாளர்கள் பெரிதும் கவலை அடைந்துள்ளனர்.

—ஜனதின (2-10-65)

## வடபகுதியிலிருந்து

(4ம்-பக்கத் தொடர்ச்சி)

றத்தின் கவனத்தில் ள்ளன. ஆனுல் ஒன்றை மட்டும் வலியுறுத்த விரும்புகிறேம். எதிர்க் கட்சிகளின் பிரச்சாரத்துக்குக் கட்டுப்பட்டு வடபகுதி மக்களின் கோரிக்கையைப் புறக்கணிப்பது மிக ஆபத்தானதாகும்.

வடபகுதியில் இராணுவத்தினர் நடாத்தும் சண்டித்தனங்களை உடன் நிறுத்தி, அவர்களை வெளியேற்ற விட்டால் மறுமலர்ச்சி பெறும் தேசிய ஒற்றுமை மீண்டும் சிதைந்து விடும் என்பதை மட்டும் எச்சரிக்கையாக கூறிவைக்க விரும்புகிறேம்.

## புன்னகையாலே...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டன. கடந்தகால தாம்பத்திய உறவை நினைத்து என் மனம் நிம்மதியில்லாது இருக்கின்றது எனக்கு வயது வந்த பிள்ளைகள் இருப்பதால் மனமுள்ள மறுதாரம் செய்ய என் உறவினரும் ஊராரும் ஏதும் வீண்கதை கட்டுவார்களோ எனப் பயமாக இருக்கிறது. என் மன நிம்மதிக்கு ஏதாகிலும் ஆறுதல் கூறுவீர்களா?

திருமதி........துரை
திருகோணமலை.

மறுமணம் செய்து கொள்ளுவதன் மூலம் நீங்கள் இழந்த இன்பத்தை ஏரளவு பெறலாம் என்று கருதுவதனுல், ஊருக்கும் உலகத்துக்கும் பயந்துப னில்லை. வசதி கிடைத்தால் துணிந்து மணம் முடியுங்கள். ஆசைகளை ஏராவு அடக்கத்தான் வேண்டும். ஆனுல் அடக்கு முறையும் அளவுடனிருக்க வேண்டும். அடக்க முடியாவிட்டால் உங்கள் கருத்துப்படியே நடந்து கொள்ளுங்கள். உங்கள் எண்ணங்களுக்குதகடிவான ிட்டால் சில சமயங்களில் விபரீத முடிவும் ஏற்படலாம்.

### சில கேள்விகள்

செல்வி அக்கா,
சுதந்திரன்
[illegible]
கொழும்பு.

## சீனாவின் நட்பு....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

### ஒப்பந்தம் ஒழியட்டும்

கடந்த கூட்டரசாங்கம் சீனவுடன் கடும் உறவு பூண்டு இருந்தது. சீன விரித்த மாயக்கம்பளத்தில் மயங்கி, அயல் நாடான இந்தியாவையே விரோதித்துக் கொள்ள இலங்கை தயங்கவில்லை. சீன அனுப்பிவைத்த சில பொருட்களில் மனதைப் பறிகொடுத்து இந்த நாட்டின் சுதந்திரத்துக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய சில திட்டங்களை கடந்த கால அரசு தீட்டியிருக்கிறது.

இப்பயங்கரத் திட்டங்களில் ஒன்று தான் சீனவுடன் இலங்கை செய்து கொண்டிருக்கும் கப்பற் போக்குவரத்து ஒப்பந்தமாகும். இவ்வொப்பந்தத்தை உடனடியாக மாற்றி விடவேண்டும் என்று அரசாங்கப் பாராளுமன்றக்குழுவின் பின்நிரை உறுப்பினர்கள் அரசாங்கத்தை வற்புறுத்த ஆரம்பித்திருப்பதாக அறிகிறேம் இவ்வொப்பந்தம் கடந்த ஆட்சியின் காலத்தில் கைச்சாத்தானபோது உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் பாரதூரமாகக் கண்டித்தார். இவ்வொப்பந்தத்தினுல் எதிர் காலத்தில் இலங்கைக்கு நேரப்போகும் பேராபத்துக்களையிட்டும் சாங்கோ பாங்கமாக எடுத்துரைத்தார்.

சீனவுடன் சேர்ந்துதாளம் போட்டுவந்த சகர்ணேவின் உயிருக்கே உலைவைக்க சீனக் கொம்யூனிஸ்டுகள் தயங்கவில்லை. கடந்த கால ஆட்சி முடிவடையாதிருந்தால் இந்நாட்டுக்கும் இதே கதிதான் ஏற்பட்டிருக்கலாம், என்று அரசியல் அவதானிகள் அபிப்பிராயம் தெரிவித்தனர். எந்த நேரத்திலும் இந்நாட்டுக்கு அபாயத்தை ஏற்படுத்தக்கூடிய இவ்வொப்பந்தத்தை நிராகரிக்க உடனடியாக வழிதேட அரசாங்கம் முயலுமாக.

சென்றபொதுத்தேர்தலின் போது இந்த ஒப்பந்தத்தை முக்கிய பிரச்சனையாக மக்கள் முன் சமர்ப்பித்தது ஐக்கிய தேசியக் கட்சி. ஆகவே தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் அந்த ஒப்பந்தத்தை இரத்துச்செய்ய அரசாங்கம் சீனவுக்கு அறிவிப்பு கொடுத்திருக்க வேண்டும். தேசிய ஆட்சி ஏற்பட்டு இது வரை அவ்வாறு செய்யாதிருப்பதால் இந்த ஒப்பந்தம் தீமை விளைவிப்பதல்ல என்ற எண்ணம் மக்களுக்கு ஏற்பட இடமுண்டு. இந்த ஒப்பந்தத்தால் இலங்கையின் சுதந்திரத்துக்கு ஆபத்து என்று தேர்தல் காலத்தில் தெளிவாக மக்களிடம் கூறப்பட்டதால் அதனை இரத்துச்செய்ய ஏன் தயங்க வேண்டும்? தேசிய ஆட்சி ஏற்பட்டு ஆறு மாதங்களாகியும் அதுபற்றி ஏன் மௌனம் சாதிக்க வேண்டும்? ஒப்பந்தத்தை அடியோடு இரத்துச்செய்ய அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். ஒப்பந்தம் திருத்தப்படக்கூடாது. இரத்துச் செய்யப்படவேண்டும்!

என்ற கருத்துப்பட முன்னுள் பிரதமர் வாய் கூசாமற் கூறியிருக்கிறுர். அவருடைய அட்சிக் காலத்தில் சில அரசியல் சூதாடிகள் தங்கள் சுயநல வேட்டைக்காக விதைத்த வகுப்புவாத விதையை மீண்டும் நாட்டில் விதைத்துப் பயிரிட முன்னுள் பிரதமர் தொடங்கியிருக்கிறுர் போலும்.

இலங்கை நாட்டில் தமிழர்கள் பண்டு தொட்டு வாழ்ந்து வருகின்றனர் என்பதை மறுக்கவோ மறைக்கவோ முயலுபவர்கள் சரித்திரச் சான்றுகளுக்கும் இதிகாச நூல்களுக்கும் திரை போட முயலுபவர்களாகும்.

சரித்திரத்தையே மாற்றியும் திருத்தியும் எழுதி தமிழர்களின் வரலாற்றையே மறைத்துவிட சிலர் முனைந்தனர் என்பதையும் இந்த நாடு மறக்கப்போவதில்லை. இந்நாட்டிலே உண்மை வரலாற்றை அடியோடு மறைத்துவிட்டாலும், இந்த நாட்டின் வரலாற்றைக் கற்றுணர்ந்தவர்கள் அகில உலகத்திலும் உள்ளனர். ஆகவே வீணுக வகுப்புவாதக் கூச்சலிட்டு விஷவித்தை விதைக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேம்.

## தமிழன் அடிமையா?

இந்த நாட்டில் வாழும் தமிழர்கள் அனைவரும் இந்நாடடைச் சுரண்டி வாழ வந்த அடிமைகள்

## ஆசிரியர் வணசிங்காவுக்கு வரவேற்பு

ரஞ்சின அழைப்பின் பேரில் அங்கு சென்று திரும்பிய கிழக்கு இலங்கை தமிழாசிரிய சங்க செயலாளரான திரு. டி. எஸ். கே. வணசிங்க ஆசிரியர் அவர்களுக்கு மட்டக்களப்பில் உள்ள மொழிவழித் தொழிற் சங்கங்கள் ஒரு வரவேற்பினை நடத்தவிருக்கின்றன. 9-10-65 மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இவ்வைபவத்துக்கு திரு. வ. பாலசிங்கம் தலைமை தாங்குகிறுர். உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் அவர்களும் கலந்துகொள்கிறுர்.


## தேவை

வாணிக, வர்த்தகத்துறையில் பயிற்சி பெற விரும்பும் வயது 18-25 சிரேஷ்ட ஆங்கில அறிவுடையோர் தேவை. 10 சத முத்திரையும் கொண்ட கடித உறையுடன் விண்ணப்பிக்கவும்.

Ceylon Commercial House
P. O. Box 1079,
Colombo.

## ஜீ. சீ. ஈ. (சா. த.)

பரீட்சையில் தேற
உதவி புரியும்.
பட்டதாரி ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட வினுவிடை பயிற்சிக் கோவைகள்.

| | |
|---|---|
| தமிழ் பாஷை | 5-00 |
| எண் கணிதம் | 5-00 |
| குடியியல் | 5-00 |
| உடனலவியல் | 5-00 |
| சரித்திரம் | 5-00 |
| இஸ்லாம் | 5-00 |
| பொது அறிவும் விவேகமும் | 5-00 |

101 கட்டுரைகள் ரூ. 7-50

சர்வகலாசாலை போதனு கழகம்
(U T I)
540, மருதானை வீதி,
த. பெ. 1079,
கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழிவிரக்கம்

## தையிட்டி அ. இராசதுரை

**நாளாந்தம் குடும்பத்தில் நிகழும் சிறு சம்பவங்களை, சுவையாக எழுதுவதில் தையிட்டி அ. இராசதுரை வல்லவர். சம்பவங்களை ஏற்ப அடுக்கி, 'வைத்துக் கொண்டு இல்லை' என்று சொன்ன ஒரு குற்றத்திற்காக கழிவிரக்கப்படும் சேதுப்பிள்ளையையும், பெருந்தன்மையோடு நடந்து கொண்ட ரேவதி மச்சாளையும் இக் கதையில் நன்கு அறிமுகப்படுத்துகிறார். மண் வாசனை சிரிக்கிறது!**

ரேவதி கேட்டு வந்த ஒரு அவசரத் தேவையான பொருளை வீட்டிற்குள் வைத்துக் கொண்டு அதை இல்லை என்று சொல்லிவிட்டேனே யென்ற பொல்லாத மனவருத்தத்தில் அதை நினைத்து நினைத்து சேதுப்பிள்ளை தனக்குள் பிரளய காலமாக மாறிக் கொண்டிருந்தாள்.

'சேது மச்சாள்...உங்கவிட்டைத்தான் ஒரு அவசரமான மருந்துச்சாமான் வேண்ட வெண்டு வந்தனான்...'

'என்னெட்டை என்ன மருந்துச் சாமான் கிடக்குது உனக்குத் தாறதுக்கு...'?

'விடியக் காலத்தாலை அவரும் நானுமாக பரியாரியார் வீட்டை போனனாங்கள்...மூண்டு நேரமும் நெய்யிலை குழைச்சு சாப்பிடுற மருந்துபரியாரியார் எனக்குத் தந்தவர்...இப்ப இந்த சீசாவிலை முட்ட கொஞ்ச நெய் தாருங்கோ...காசு தரலாம்...'

'சத்தியமாய் ரேவதி... நான் சொல்றன்...நீ நம்பினாலும் நம்பு...என்னெட்டை இப்ப தொட்டுப் பூசுறதுக்கும் ஒரு சொட்டு நெய்யுமில்லை'...

'..................'

'என்ன ரேவதி ஏங்கிப் போய் நிக்கிறாய்...என்னெட்டை இப்ப கிடந்தா உனக்குத் தராதபடிக்கில்லை.... வேணுமெண்டா போத்திலை எடுத்தாந்து காட்டறன் பார்...'

'இல்லையெண்டா பேந்தேன் மச்சாள் போத்திலைக் காட்டுவான்...அவ்வளவிலை உங்களை நம்பாதவளே நான்... உங்களிட்டை இல்லாத இந்தச் சாமான் இனி இஞ்சை வேறு ஆரிட்டை இருக்கப் போகுது...இருந்தாலும் இல்லையெண்ணுமை எனக்கார் தரப்போகினம்...'

'இங்கை அங்கையெண்டு வீணாய் உலையாமை அலையாமை கடைச்சாவிலை விட்டு விசாரிவி...'

'கடைச்சாவிலை வாங்கிற நெய் கலப்புநெய் மச்சாள்...அதுக்கை எருமை நெய்யும் கலந்திருப்பினம். அந்த அநியாயத்தை வாங்கிப் பாவிக்கிற நேரம் பரியாரி தந்த மருந்தை தின்னமை விட்டாலும் அருமந்தாப் போலை...நான் வாறன் மச்சாள்...வேறை எங்கையாலும் சந்திச்சாப் பாப்பம்.'

மத்தியானம் தானும் ரேவதியும் இப்படியெல்லாம் கதைத்துக் கொண்டதை சேதுப்பிள்ளை ஏங்கி இடிவிழுந்தவளாக மன வேதனையின் உச்சியில் நின்று நினைத்துப் பார்க்கின்றாள். ஒரு மருந்துத் தேவைக்காக....அதுவும் காசுக்கு நெய் கேட்டு வந்தவளுக்கு நான் 'இல்லை' என்று சொல்லிப் போட்டேனே......அதுவும் சத்தியம்பண்ணி...... ரேவதி பாவம்...ஒரு போத்தில் நெய்யை அப்பிடியே வீட்டுக்குள்ளை வைச்சுக் கொண்டு அந்தரிச்சுக் கேட்டு வந்தவளுக்கு இல்லை என்று சொல்லிப் போட்டேனே...அவள் எந்தெந்தத் தேசமெல்லாம் நாயாக பேயாக ஒரு கொஞ்ச நெய்க்காக அலைஞ்சு உலையப் போறாள்......சேதுப்பிள்ளை சோர்ந்து குறுவியபடி தனது இதயத்திற்குள் நின்று இப்படியெல்லாம் நினைத்து நினைத்து மன வருத்தப்படுகின்றாள்.

'நீ வைச்சுக் கொண்டு ஒரு மருந்துச் சாமானை இல்லையெண்டது எவ்வளவு பெரிய பாவம்... கடவுளாலை உனக்குப் பழி வரப் போகுது...உனக்கும் இப்படியொரு அந்தரம் வாறமட்டைக்கி மற்றவையளும் 'இல்லை' எண்டுதான் சொல்லுவினம்'....இப்படி மனச்சாட்சியின் உருவில் யாரோ தனது நெஞ்சிற்குள் இருந்து தன்னைக் குற்றம் சாட்டிக் கதைப்பது போன்ற மனப் பிரமை. ரேவதி ஊர் முழுவதும் நெய்யிற்காக அலைந்து விட்டு அந்த மனவருத்தத்தில் காசு கொடுத்து வாங்கிய மருந்தையும் அப்படியே சரையோடு சுழற்றி வீசி விடுகின்றாள்... சேதுப்பிள்ளை இப்படி மனக் கற்பனை செய்து பார்த்தபடி தன்னைத் தானே நொந்து கொள்கிறாள். எத்தனையோ நாள் ரேவதி வீட்டிற்குத் தான் எத்தனையே அவசரமான சமான்கள் மாறப்போனதையும் தனக்கே போதும் போதாதாக இருந்தாலும் அதை யெல்லாம் ரேவதி ஆம்மென்று அடுத்த கதை கூடக் கதைக்காமல் நல்ல மனத் தாராளத்தோடு தனக்குத் தருவதையும் சேதுப்பிள்ளை நினைத்துப் பார்க்கின்றாள்.

'சத்தியமாய் ரேவதி... நான் சொல்றன்...நீ நம்பினாலும் நம்பு...என்னெட்டை இப்ப தொட்டுப் பூசுறதுக்கும் ஒரு சொட்டு நெய்யுமில்லை'... தான்சொன்னதை சேதுப்பிள்ளை தன் நினைவிலிழுத்துப்பார்க்கிறாள். என்னிலும் பார்க்க ரேவதி எவ்வளவு...எவ்வளவு உயர்ந்தவள்... சேதுப்பிள்ளை ரேவதியை தனது நினைவுக்கப்பால் உயர உயர உயர்த்திக் கொண்டு போனாள். தன்னை தனது நினைவிலிருந்து கீழே... கீழே...பாதாளத்தை நோக்கி உருட்டிக் கொண்டு போனாள். மலையும் மடுவும் அவள் நினைவு வானில் பிரகாசமாக மின்னி மறைகின்றன.

'சேது மச்சாள்...எனக்கிப்ப கனநாளாய் வீட்டு விலக்கு வரேலை...உடம்பிலை பொல்லாதவருத்தம்...இதை நெடுக வைச்சுக் கொண்டிருந்து ஒண்டும் செய்யமுடியாது ...நான் இங்கிலீஸ் வைத்தியத்துக்குத்தான் போகலாமெண்டிருக்கிறேன்... எல்லாரும் இதுக்கு தமிழ் வைத்தியம் தான் நல்லதெண்டு சொல்லுகினம்'...

'ஏன்ரியப்பா இந்த வருத்தத்தைமூடிமறைச்சு வைச்சுக் கொண்டிருக்கிறாய்...இதுக்கு தமிழ் வைத்தியத்தான்சரி...நீ அதைத்தான் செய்வி'...இப்படி தானும் அவளும் ஒருநாள் அவளுடைய வருத்தத்தைப் பற்றிக் கதையோடு கதையாகக் கதைத்துக் கொண்டதை சேதுப்பிள்ளை நினைத்துப்பார்க்கின்றாள்.

ரேவதிக்கு அந்த நோய் நல்லாக முத்திவெடித்து குமுறிக் கொந்தளித்து ரேவதி மரணப்படுக்கையில் கிடக்கின்றாள்...வீட்டிற்குள் நெய்யை வைத்துக்கொண்டு இல்லை என்று சொல்லி விட்டதால் ரேவதி பரியாரியார் கொடுத்த மருந்தையும் தின்னமல் விட்டுவிட்டதால் அவள் நோய் கூடி விடுவதுபோல் சேதுப்பிள்ளை ஒருவிதபொல்லாத மனத்திடுக்காட்டத்தோடு நினைத்ததும் அவளுக்கு இப்படியெல்லாம் மனப்பிரமை குமுறி வெடிக்கின்றது.

'சேது...மச்சாள்...நீங்கள் சரியான ஆள்...நான் என்ரை மருந்துத் தேவைக்கி நெய்வாங்க வெண்டு நம்பிவர நீங்கள் நெய்யை வீட்டுக்கை வைச்சுக்கொண்டு எனக்கில்லையெண்டு போட்டியள்...நீங்கள் செய்யிற வேலை சரியில்லை'...ரேவதி தனது கன்னத்தைஅறிந்து இப்படி தன்னோடு மனம் சரியில்லாமல் கதைப்பது போல் சேதுப்பிள்ளைக்கு மனநினைப்பு குமுறி எழும்கிறது.

நான்வைச்சுக்கொண்டு, இல்லையெண்டது ரேவதிக்கு சாடைமாடையாய் தெரியுமோ... தெரியுமோ ...என்று ரேவதியின் இதயத்திற்குள் நின்று அவளோடு வாதொட்டி விருதொட்டிக் கொண்டிருந்த சந்தேகப்பேய், தான் பிடித்த முயலுக்குமூன்றே மூன்று கால்தான் என்பது போல சேதுப்பிள்ளையை தனது பாதையில் முக்கால் வாசித்தூரத்திற்கு இழுத்துப் போய்விடுகிறது.

'ரேவதி உன்னெட்டைத்தான் ஒரு அவசரமான மருந்துச்சாமானுக்கு வந்தனான்'.

'என்னெட்டை என்ன மருந்துச்சாமான் மச்சாள் கிடக்குது... உங்களுக்கு தாறதுக்கு'.

'விடியக்காலத்தாலை அவரும் நானுமாக பரியாரியார் வீட்டை போனனாங்கள். மூண்டு நேரமும் தேன்விட்டு மருந்து குடிக்கச் சொல்லி பரியாரியார் எனக்கு மருந்து தந்தவர். இப்ப இந்த சீசாவிலை முட்ட கொஞ்சத் தேன் தா...காசுதரலாம்.'

'சத்தியமாய் மச்சாள்... நான் சொல்றன்...நீங்கள் நம்புங்கோ......என்னெட்டை இப்ப தொட்டுப் பூசுறதுக்கும் ஒரு சொட்டுத்தேனுமில்லை.'

இப்படியெல்லாம் தானும் அவளிடம் கேட்டுப்போவது போலவும் தான் வைத்துக் கொண்டு 'இல்லை' என்ற ஆத்திரத்தில் வீட்டிற்குள்போத்தில் நிறைய தேனிருந்தும் பதிலுக்குப் பதில் அவளும் தனக்கில்லை என்று உண்மையாகவே சொல்லிவிடுவது போல் சேதுப்பிள்ளை மனக்கற்பனை செய்து பார்க்கின்றாள். உவள் சேதி...ஆர் என்ன சாமானுக்குப் போனாலும் வைச்சுக் கொண்டு இல்லையென்கிறவள்.

'உவளுக்கு சீவன் போகுதெண்டு வந்து கேட்டாலும்...ஆர் தன்னும் ஒரு சுண்ணாம்புக் கட்டியும் குடுக்கக்குடாது'...ஊரில் உள்ள தனது சொந்தக்காரப் பெண்களெல்லோரும் கூடியிருந்து இப்படித் தனதுகூடாத குணத்தைப் பற்றிக் கதைப்பது போலவும் ஒரு ஆபத்து அந்தரமென்று ஊரிற்குள் ஒருத்தரிடம் போய் ஒரு மருந்துச் சாமான்மாறிக்கொள்ளவே தான் எவ்வளவோ கூச்சப்பட்டு ஒரு சாமானும் மாறிக்கொள்ள வெளிக்கிட்டுக் கொள்ள முடியாமல் மனச்சங்கடப்படுவது போலவும் நினைத்துப் பார்த்த சேதுப்பிள்ளை பெரிய கொலைக் குற்றத்தைச் செய்து விட்டவளாக தனது இதயத்திற்குள் கிடந்து கழுத்து வெட்டிய கோழியாக துடிதுடிக்கின்றாள்.

'நான் பொல்லாத கொடியவள்...பாவி... நான் இல்லையெண்டு சொன்ன பழிக்காக என் வாய் நாறிப் புழுத்து அழுகிப்போகவேணும்... அடுத்த பிறப்பிலை நான் ஒரு நாள் ஒரு பிச்சைக்காரியாகப் பறந்து வீட்டுக்கு வீடு பிச்சையெடுக்கப்போகவேணும்...அப்போதைக்கி எல்லாரும் எனக்கு இல்லை...இல்லையெண்டு சொல்லி என்னை ஓட ஓட அடிச்சுக் கலைக்கவேணும்'...தான் விட்ட பிழையை நினைத்து ஒரு மன ஆத்திக்காக சேதுப்பிள்ளை இப்படியெல்லாம் கொஞ்சமும் ஈவிரக்கமின்றி பயங்கரமான முறையில் தனக்குத் தானே தண்டனை கொடுத்துக் கொண்டிருந்தாள். சேதுப்பிள்ளையின் நினைவில் தனது இந்த ஐம்பது வருட வாழ்விலும், பார்த்த ஒரே ஒரு படமான ஔவையார் படம் வந்து விழுகின்றது. அதில் வந்த இரப்போர்க்கு இல்லையென்னாத பாரிவள்ளலின் தோற்றத்தை அவள் நினைத்துப்பார்க்கின்றாள். ஆதரவற்றுக் கிடந்த முல்லைக்கொடி படர்வதற்கு தனது தேரையே இல்லையென்று சொல்லாமல் பாரிவள்ளல் கொடுத்த காட்சி அவள் நினைவில் மின்னி மறைகின்றது.

சேதுப்பிள்ளை தனது நினைவில் இருகரம் கூப்பி பாரிவள்ளலை வணங்கிக் கொள்கிறாள். தான்விட்ட பிழையை ரேவதிக்குச் சொல்லிக்காட்டி அதற்காகத் தன்னைக் கோபிக்க வேண்டாம்...குறை விளங்கவேண்டாமென்று அவளிடம் நல்லாக மனக் கவலைதீரும் வரைக்கும் குழறி அழுது மன்னிப்புக் கேட்டுகொண்டு அந்த ஒரு போத்தல் நெய்யையும் அப்படியே தனது மன ஆத்திக்காக அவளிடம் தூக்கிக் கொடுத்து விடவேண்டுமென்று சேதுப்பிள்ளை ஒரு கணம் நினைத்துப்பார்க்கின்றாள்.

'இல்லையெண்ட வாயாலை இருக்குதெண்டு சொல்லி இனிக்குடுக்கப் போனா...ரேவதி என்னைப் பற்றிஎன்ன நினைப்பாள்'... அதே அடிக்குள் மனதிற்குள் இப்படித் தடம்புரண்டுவிட்ட சேதுப்பிள்ளை சொற்பநேரமாக இரு மனதில் நின்று கொழும்புப்பட்டினத்திற்கு முதல் முதலாக தனியாகப் போனவன் தெற்கு வடக்கொன்றும் தெரியாமல் சிதம்பரசக்கரத்தை பேய் பார்த்தது மாதிரியான நிலையில் நின்று தத்தளிப்பது போல் தத்தளித்துக் கொண்டிருந்தாள். திடிரென்று வாசல் பக்கம் திரும்பிய சேதுப்பிள்ளையின் கண்களில் மாவலி கங்கை காட்சியளிக்கின்றது.

'என்ன ரேவதி நெய் கிடைச்சுதா'...?

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாண்டு காலத்தில் இ. தொ. க. வின் வளர்ச்சி

## ஆறு மாவட்டங்களில்

### தனிப் பெரும் இயக்கமாகத் திகழ்கிறது

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அட்டன் நகரில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கைத் தொழிலாளர் கழகம் இதுவரையில் பல குறிப்பிடக் கூடிய சாதனைகளை மலைநாட்டில் சாதித்திருப்பதாக நமது நிருபர் இங்கு குறிப்பிட்டுள்ளார். குறுகிய இக்காலத்தில் ஆறு மாவட்டங்களில் கழகம் தனிப்பெரும் இயக்கமாக விளங்குகிறது என்றும், மலையக மக்கள் கழகத்திற்குக் கொடுக்கும் ஆதரவுக்கேற்ப கழகம் முன்னேறிச் செல்ல முடியாது கஷ்டப்படுவதாகவும் அதற்கான காரணங்களையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

'ஆர்த்தி சிறிதென்றாலும் கீர்த்தி' பெரிதென்று கூறும் முதுமொழியொன்று தமிழ் வழங்கும் பகுதிகளில் உண்டு. இதைக் 'கடுகு சிறிதென்றாலும் காரம் பெரிது' என்றும் கூறுவார்கள். இது போன்றுதான் இலங்கைத் தீவின் மலை முகடுகளில் சிறுகை நீட்டி தவழ்ந்து நடை பயிலும் ஒரு இயக்கம் பெரும் பெரும் காரியங்களைச் சாதித்து வருகின்றது.

அறுபத்திரண்டாம் ஆண்டு டிசம்பர் திங்கள் இருபத்திரண்டாம்நாள் உருக்கொடுக்கப்பட்ட இலங்கைத் தொழிலாளர் கழகம், தனது மூன்று ஆண்டு காலத்துள் சாதித்த சாதனைகள் பல. அட்டன் நகரிலுள்ள ஒரு படமாளிகையில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வியக்கம் இன்று அட்டன், மஸ்கெலியா, தலவாக்கொல்லை, பசுமலை, ருகலை, பன்விலை ஆகிய மாவட்டங்களுக்குப் பரந்து விரிந்து நின்று அப்பகுதிகளில் தனிப்பெரும் இயக்கமாக விளங்கிக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

#### ஆறு மாவட்டங்கள்

ஆறு மாவட்டங்களில் கழகம் தன் நிலையை நன்கு உறுதிப்படுத்திக் கொண்ட போதிலும், மலையகத்தில் கழகம் கைப்பற்ற வேண்டிய இடங்களில் பத்தில் ஒரு பகுதியைத்தானும் இன்னும் கைப்பற்றி விடவில்லை.

மலையகமெங்கணும் மக்கள் கழகத்தின் வருகையை இரு கரம் நீட்டி வரவேற்க வழிமேல் விழிவைத்துக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், கழகம் மக்கள் எதிர்பார்க்கின்ற வேகத்தில் முன்னேறிச் செல்ல முடியாது இருந்தது. கழகம் முன்னேறிச் செல்ல முடியவில்லையென்றதும், கழகத்தின் நிர்வாக யந்திரத்தில் ஏதோ கோளாறு இருப்பதாக யாரும் தப்புக் கணக்குப் போட்டு விடவேண்டாம்.

#### நமது மலையக நிருபர்

மக்கள் கொடுக்கின்ற ஆதரவுக்கு ஏற்ப கழகம் முன்னேறிச் செல்ல முடியாமைக்கு இரு காரணங்கள் உண்டு. ஒன்று பொருளாதார முடை. மற்றது கழகம் ஒவ்வொரு அடியும் முன்னேறும் பொழுது மும்முனைப் போராட்டத்தை எதிர்நோக்கி, அவற்றை முறியடித்தே செல்ல வேண்டியிருக்கிறது.

#### பொருளாதார பலம் வேண்டும்

பொருளாதார முடை எதற்காக கழகத்திற்கு இருக்க வேண்டுமென்று தொழிற் சங்கத் துறையில் அனுபவமில்லாதவர்களும், மலையகவாழ்க்கை முறையை நன்கு புரியாதவர்களும் கேட்கலாம். தொழிற் சங்கம் ஒன்றை நடாத்துவது என்பது, யானையைக் கட்டித் தீனிபோடுவது போன்று சில சந்தர்ப்பங்களில் இருக்கலாம். மேலும் கழகம் உண்மையான மக்கள் இயக்கம். கழகத்தில் உள்ளவர்கள் இலட்சாதிபதிகள் அல்லர். கழகத்தின் நிர்வாக பீடத்தைக் கௌரவமான முறையில் அலங்கரிப்பவர்கள் மக்களின் சாதாரண பிரதிநிதிகள். ஏனையவர்கள் அன்றாடம் உழைத்து வாழும் ஏழைத் தொழிலாளப் பெருமக்கள்.

இந்த நிலையில் கழகத்தை நடாத்துவது என்பது சாதாரண விடயம் அல்ல. ஒவ்வொரு புதுக் காரியாலயத்தையும் திறக்கும்பொழுது அதற்கு ஏற்படக் கூடிய செலவீனங்கள், அதை நிர்வாகிப்பதற்குஏற்படக்கூடிய செலவீனங்கள். அப்பகுதியில் கழகம் கால் ஊன்றியவுடன் ஒரு வேலை நிறுத்தத்தை நடாத்தவேண்டியேற்பட்டால், அதற்கு ஏற்படக் கூடிய செலவீனங்கள். இத்தனையையும்நன்குஆராய்ந்த பின்னரே கழகம் புதிய இடத்தில் கால ஊன்ற முடிகிறது.

கழகம் புதிய இடத்தில் கால் ஊன்றும்போதெல்லாம் அங்கு பிரச்சினைகள் மலைபோற் குவிந்தே கிடக்கின்றன. முன்னர் அப்பகுதிகளில் இருந்த தொழிற் சங்கங்கள் சந்தா வசூலிப்பதை மட்டும் ஒழுங்காகச் செய்து கொண்டு, மக்களின் பிரச்சினைகளை ஒழுங்காகக் கவனிக்காமல் இருந்து வந்தன, வருகின்றன. கழகம் புதிதாக ஓர் இடத்தில் கால் ஊன்றியதும் மக்கள் தங்களின் குறைபாடுகளை எடுத்துக் கூறுகிறார்கள். அவற்றை நிவிர்த்திப்பதற்காக கழகம் நடவடிக்கையில் இறங்க வேண்டியிருக்கிறது.

எனவே தான் கழகம் முன்னேறிச் செல்லும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நன்கு ஆராய்ந்து, போதிய பலத்தைப் பெற்ற பின்னரே புதிய இடங்களை ஆக்கிரமிக்க முயற்சிக்கிறது. இதற்கு எல்லாம் போதிய பொருளாதாரப் பலம் வேண்டும்.

#### மும்முனைப் போராட்டம்

அடுத்து கழகம் எதிர்நோக்க வேண்டிய மும்முனைப் போராட்டம், முற்காலத்தில் எதிரியின் நாட்டை பிறிதொரு நாட்டுப் படைகள் சென்று முறியடித்து ஆக்கிரமிப்பது போன்ற [illegible] போன்ற இரு காங்கிரஸ் படையையும், சிறு குட்டிப் பீரங்கிகள் போன்ற காளான் தொழிற் சங்கங்களான இடதுசாரி, வலதுசாரித் தொழிற் சங்கங்களையும் சேர்த்து முறியடித்த பின்னரே, கழகம் ஒரு புதிய இடத்தில் கால்ஊன்றுகிறது. கழகம் கால் ஊன்றிய இடங்களில் எத்தனை பெரிய தொழிற் சங்கங்களானாலும், அவையனைத்தும் கதிரவனைக் கண்ட பனித்துளிகளாகவே மாறுகின்றன. இந்த உண்மையை இதுவரை கால் ஊன்றிய இடங்களிற்பல பறையறைந்துள்ளன.

(14ம் பக்கம் பார்க்க)

# மலையக மக்களுக்கு துணி விநியோகம்

## அமிர்தலிங்கம் முயற்சியால் தடை நீங்கியது

மலைநாட்டுத் தமிழ் மக்களுக்கு உணவுப் பங்கிட்டும் புத்தகத்தின் மூலம் வழங்கப்படும் துணிகளை விநியோகிப்பதில் இருந்த சில கஷ்டங்களைப் பற்றி வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களிடம் எடுத்துக் கூறியதைத் தொடர்ந்து அவர் சம்பந்தப்பட்டவர்களுடன் கதைத்து வேண்டிய ஒழுங்குகளைச் செய்துள்ளாராம்.

கடந்த வாரம் அட்டன் நகர் சென்றிருந்த வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களிடம் இலங்கைத் தொழிலாளர் கழகத்தைச் சேர்ந்தவர்கள் உணவுப் பங்கீட்டுப் புத்தகத்தின் மூலம் வழங்கப்படும் துணிவகைகள் கிடைப்பதில் உள்ள கஷ்டங்களை எடுத்து விளக்கினார்களாம்.

இ. தொ. கழகத்தைச் சேர்ந்தவர்கள் செய்து கொண்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் கண்டி அரசாங்க அதிபருடனும், நுவரெலியா அரசாங்க அதிபருடனும் தொலை பேசியில் தொடர்பு கொண்டு மலைநாட்டுத் தமிழர்களுக்கு உள்ள குறையை எடுத்து விளக்கினாராம்.

திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து இரு அரசாங்க அதிபர்களும் துணிவிநியோகத்தில் உள்ள கஷ்டத்தை நிவிர்த்தி செய்து நாலாம் இலக்க உணவுப் பங்கீட்டுப் புத்தகத்திற்கே துணி விநியோகம் செய்யும் வண்ணம் உத்தரவிட்டுள்ளார்கள் என்று அறியப்படுகிறது.

# கழிவிரக்கம்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

'நெய் ஓரிடமும் சந்திக்கேலை மச்சாள்...என்னுடைய தலையில் விதி உங்களிட்டை நெய் இருந்திருந்தா...நானேன் இப்பிடியெல்லாம் தினுக்கு அலையிற நாய் மாதிரி அலைய வேணும்'...?

...............?

'இப்பவே இரண்டு நேர மருந்தை தப்பவிட்டாச்சுது'......

...............?

கடவுளும் ஒரு பொல்லதவர் மச்சாள்... உங்களைப் போலை ஆரும் நாலு பேருக்கு மனமாய் குடுக்கக் கூடிய ஆக்களிட்டைத் தான் இல்லாமையையும் விட்டிருக்கிறார்'......

பொல்லாத மனச்சலிப்பின் உச்சியில் நின்றபடி ரேவதி இப்படிச் சொன்னதைக் கேட்டதும் சேதுப்பிள்ளையின் இதயத்திற்குள் ரேவதி நெய்யூற்றி நெருப்பை வளர்த்து விட்டது போல் சேதுப்பிள்ளையின் மனவேதனை இரட்டிப்பாகியது. தான்விட்டபிழைக்காகதன்னை ரேவதி பெரிய நெய்ப்பந்தம் கொளுத்தி நல்லாகச் சுடுவதுபோல் சேதுப்பிள்ளைக்கு பயங்கர மன உணர்வு தட்டுகிறது. ரேவதியை தன்னோடு நன்றாக இறுகக் கட்டியணைத்துக்கொண்டு கடல் கடலாய் எவ்வளவோ எல்லாம் சொல்லிச் சொல்லி நாலுகட்டைக்குக்கேட்கக் கூடியதாத பெரிய சத்தத்தில் குழறி அழுதுவிட வேண்டும் போல் சேதுப்பிள்ளைக்கு தாங்கமுடியாத மனச்சலிப்புச் சலிப்பாய் குமுறி எழுந்து கொண்டிருந்தது.

ரேவதி தன்னிடம் மீண்டும் இன்னொரு முறை நெய் தரும்படி கேட்க வேண்டும் போலவும்; அவள் கேட்குது கேட்க முந்தி தான் நெய்க்குக் காசு கடைசிவரைக்கும் வேண்டாமென்று கட்டாயப்படுத்திச் சொல்லி விட்டு தான் வைத்திருக்கும் ஒரு போத்தல் நெய்யையும் அப்படியே அவளிடம் சும்மா தூக்கிக் கொடுத்து விட வேண்டும் போலவும் சேதுப்பிள்ளைக்கு பொல்லாத மன அவதி அவதியாயிருந்தது.

எப்படியும் பொழுது சாய்வதற்கிடையில் ரேவதிக்கு அவள் கேட்ட அளவிலும் பார்க்க கூடிய அளவு நெய் கொண்டு போய்க் கொடுத்து விட வேண்டுமென்றும் நெய்யை அவளிடம் கொடுக்கும் போது இது தன்னுடைய நெய்யென்று அவளுக்குச் சொல்லாதபடிக்கி வேறு எங்கையோ தனது கணவனுக்குப் பழக்கமான வீட்டில் தனது கணவனை விட்டு வாங்குவித்த நெய் யென்று அவளுக்குச் சொல்லி விட வேண்டுமென்றும் சேதுப்பிள்ளை உறுதியாகவும் இறுதியாகவும் தீர்மானித்து முடிப்பதற்கும்...

'ஒராளுக்கு ஒரு மருந்துத் தேவைக்கி கொஞ்ச நெய் வேண்டியாய்க்கிடக்குது...... உங்கை நெய்யிருக்க வேணுமெண்டு நினைக்கிறன்'......... என்று கேட்டபடி அவள் கணவன் வீட்டிற்குள் வரவும் சரியாகவிருந்தது. சேதுப்பிள்ளை இதயத்திற்குள் பெரும் மலாரடிப்பட்டவளாக ரேவதிக்குப் பக்கத்திலிருந்து கொண்டு ஓமென்றும் சொல்லமுடியாமல் இல்லை என்றும் சொல்ல முடியாமல் கொட்டில் அகப்பட்ட எலியாக தறதறவென்று முழிசத் தொடங்கினாள். சேதுப்பிள்ளை ஓமென்று சொல்வதற்காக வாயை உன்னினாள். தன்னிடம் நெய்கேட்ட ரேவதி முன்னாலிருக்க நெய் இருக்குதென்று சொல்லிவிட்டு எப்படிச் சமாளிக்க முடியுமென்று யோசித்துப் பார்த்த சேதுப்பிள்ளை யாரோ தன் நெஞ்சிற்குள்ளிருந்து தன்னைச் சொல்ல வேண்டாமென்று மறிப்பதுபோன்ற மன உணர்வில்.

'நெய் கொஞ்சமுமில்லை......' என்று தான் சொன்ன பொய்யை மறைக்க இன்னொருபொய்யைக் கணவனுக்கு முன்னால் சொல்லிவிட்டு தான் செய்த ஒரு பிழைக்காகத் தான் கடவுள் தன்னை இவ்வளவில் சங்கடப்படவைத்துத் தண்டிக்கிறாரென்று நல்லாக உணர்ந்து கொண்ட சேதுப்பிள்ளை, தனது கணவன் அடுப்படிக்குள் போவதை சொல்ல முடியாத மன இடிப்புத் துடிப்போடு பார்த்தபடியே இருக்கின்றாள்.

'இதென்னப்பா நீ செய்யிறவேலை...... இதென்ன சாமானிது'......? சேதுப்பிள்ளையின் கணவன் அடுப்புப் புகட்டின் மேல் கிடந்த நெய்ப்போத்தலை குசினிக்குள் ஏதோ அலுவலாகப் போனவிடத்தில் எடுத்து வந்து களவெடுத்தவனைக் கையும் மெய்யுமாகப் பிடித்து விட்டவனின் நிலையில் சேதுப்பிள்ளையின் முகத்தில்அடித்தாற்போல் காட்டி விடுகின்றான்.

'என்ன சேது மச்சாள்... உந்த ஒரு போத்தில் நெய்யும் இப்ப என்னெண்டு உங்களுக்கு வந்தது'......

'உன்னையுமொரு நல்ல மனிசியெண்டு நம்பித் தான் நானும் உன்னெட்டை ஒரு மருந்துச்சாமான் வாங்கவேண்டு வந்தன்... இப்பிடியான உன்னோடை இனிமேலும் எனக்கென்ன கொண்டாட்டம்' ......... இப்படியெல்லாம் ரேவதி தன்னோடு நடந்து கொள்வதுபோல் சேதுப்பிள்ளைக்கு மனப்பிரமைகள் குமுறி வெடித்து விசுரூபமெடுத்து பயங்கரமாக எழும்புகின்றன. தனது கள்ளம் ரேவதிக்கு முன்னால் உடைந்து விட்டதினால் சேதுப்பிள்ளை ரேவதியின் முகத்தில் முழிக்கக் கூச்சப்பட்டு கோடிப்பக்கமாக எழுந்தோடி விடுகின்றாள்.

'இதெல்லாம் இந்த உலகத்திலை வழக்கந்தானே சேது மச்சாள்'..... ரேவதி இப்படி அன்போடு ஆதரவோடும் சேதுப்பிள்ளையைத் தேற்றியபடி..பொலபொலவென்று கொட்டித் தீர்த்த கண்ணிரை சேதுப்பிள்ளை பரிவுடன் தனது கைகளினால் அழுத்தித் துடைத்து விடுகின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணாவின் ஆணை

அங்கம்
ஏழு

## கிடைத்ததும்

'நாடோடி மன்னன்' திரைப்படத்தை உருவாக்க புரட்சி நடிகர் மொத்தம் முப்பது இலட்ச ரூபாய்களைச் செலவிட்டார். இத்தனை பணத்தைச் செலவிட்டதைப் பற்றி எவரும் வருந்த இடமில்லை. ஆனால் இப்படப்பிடிப்பு காலத்தில் புரட்சி நடிகர் அனுபவித்த பொல்லாத வேதனைகளை அறிந்த எவரும் அனுதாபப் படாமலிருக்க முடியாது.

சாதாரண நாடக உலகத்தில் புகுந்த எம். ஜி. ஆர். எண்ணற்ற துயரச் சுமைகளைத் தாங்க நேரிட்டது. சினிமா உலகத்தில் புகுந்ததும் மெதுவாக முன்னேறத் தொடங்கினார். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளரும் குழந்தையைப் போல் புரட்சி நடிகரின் புகழ் வளரத் தொடங்கியது.

தங்க நிற மேனியை உடைய அவருடைய குணமும் தங்கம்தான். அன்பும் பண்பும் ஒருங்கே அமைந்த சீராளன். தயாள குணமும், ஏழைகளுக்கு இரங்கும் தன்மையும் கொண்ட இவரிடம் இவருடைய எதிரிகள் தானும் குறை கண்டுபிடிப்பது கடினம்.

### நரகத்தின் நடுவே

கலை உலகமோ எண்ணற்ற கபட நாடகங்களைத் தன்னகத்தே மறைத்து வைத்துக் கொண்டு அகப்பட்டவர்களைச் சுருட்டி, உருட்டி விளையாடி வந்தது. பண்புள்ளவர்களின் பார்வைக்கு கலை உலகம்-குறிப்பாக சினிமா உலகம்—சீர்கெட்ட பெரு நரகக் குழியாகவே காட்சியளித்தது. பணமும் சந்தர்ப்ப சூழ் நிலைகளும், இவ்வுலகத்தில் நுழைவோரின் பண்பையும் மானத்தையும் அபகரித்து, படுபாதாளத்தில் தள்ளி விட்டு எள்ளி நகையாடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தன.

இத்தகைய இருள் மண்டிக் கிடந்த கலை உலகத்திலே புரட்சி நடிகரும் ஒருவராகப் புகுந்தார். ஆனால் எத்தகைய தீய சக்திகளும் அவரை அணுக முடியவில்லை. நீருடன் கலந்த பாலைப் பருகும் அன்னப் பறவை நீரை விலக்கிவிட்டு, பாலை மட்டும் உண்ணுமாம். இதே போன்றுதான் புரட்சி நடிகரும் கலை உலகத்துக் கயமைகள் எதையுமே கைக் கொள்



ளாது, கலையின் புனிதத்தைப் போற்றிக் காக்கத் தலைப்பட்டார்.

தான் மட்டும் தூய்மையாக வாழ விரும்பாமல் தன்னைச் சார்ந்த கலைஞர்களையும் தூய்மையான பாதையில் இட்டுச் செல்ல புரட்சி நடிகர் தயங்கவில்லை. புனிதமான கலையின் பேரால் நடைபெற்று வரும் புறம்போக்குகளுக்கு முற்றிலும் மாறுபட்டவராக வாழ்ந்த புரட்சி நடிகரைப் பார்த்து பொறுமை என்னும் பெரு நெருப்பு பொங்கி எழுந்து பொசுக்க எண்ணியது. சேற்றிலே முளைத்த செந்தாமரை இலையில் தண்ணீர் ஒட்டுவதில்லை. அதேபோல் சேறும் சகதியுமாகக் கிடந்த கலை உலகத்தில் வாழ்ந்த புரட்சி நடிகர் கேவலக் கேளிக்கைகளில் பங்கு கொள்ளாமல் வாழ எண்ணியமையினால் வீண் பொல்லாப்புகளைத் தேடிக் கொள்ள நேர்ந்தது.

பல இலட்ச ரூபாய்களைக் கொட்டி படம் தயாரிக்க முற்பட்ட புரட்சி நடிகரின் அந்திய காலம் அண்மிவிட்ட

தென பொறுமைக்காரர்கள் ஆருடம் கணிக்கத் தலைப்பட்டனர். 'நாடோடி மன்னன்' படத்தை விலை கொடுத்து வாங்கி தங்கள் மாவட்டங்களில் திரையிட முன் வந்த விநியோகஸ்தர்களை அண்டி, 'படம் தோல்விக்கு மேல் தோல்வி அடையப் போகிறது. 'நாடோடி மன்னனை' நம்பி இறங்கினால் நட்டத்துக்குமேல் நட்டப்பட்டு, விநியோக முதலாளிகளே நாடோட வேண்டித்தான் வரும்', என்று எச்சரிக்கை செய்யவும் சில விஷமிகள் தயாராகினர்.

மன்னன் வெளியாகு முன்னரே வெளியிட்டு வெற்றி முழக்கமிட ஆரம்பித்தன.

### கத்தரிக்கு வேலையில்லை

பொறுமையால் விளைந்த இத்தகைய பொல்லாப்புகளனைத்தையும் பொறுமையுடன் மேற்கொண்டு தன் பணியைத் தொடர்ந்தார் புரட்சி நடிகர்.

மொத்தம் 28988 அடிகள் தேறிவிட்டன. படம் பரிபூரணமாக முடிவடைந்தது.

முற்பட்டார். பொதுமக்கள் பார்வையிடு முன்னா பொது மக்களின் உள்ளங்களைப் பிரதிபலிக்கும் ஒருவரின் தீர்ப்பைக்கேட்டறிய அவாக் கொண்டார். அன்புக்குரிய அண்ணன், அருமைத் தலைவன், தேர்ச் பெற்ற வழி காட்டி என்று தலைக்குப் பட்ட அந்தக் குள்ள உருவத்தை நாடி ஓடினார். மக்கள் தீர்ப்பளிக்கு முன்னர் மக்கள் தலைவன் தீர்ப்பளிக்கட்டும், என்று எண்ணிய புரட்சி நடிகர், ஓடோடிச் சென்று அறிஞர் அண்ணாவை அழைத்தார்:

''அண்ணா படத்தை முடித்து விட்டேன். வந்து பாருங்கள்.

# நாடோடி மன்னன்
## புறப்படத் தயாரானான்

'திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு திரையிலே பிரசாரம் நடக்கப் போகிறது. தீட்டி வையுங்கள் கத்தரிக் கோலை' என்று தணிக்கைக் குழுவினருக்கு அனுமதேய—நாமதேயக் கடிதங்களும் பறந்தன.

தமிழ்ப் படங்களுக்குள்ளேயே புதுமை தரத்தக்கதான பல கட்டங்களை எம். ஜி. ஆர். இப்படத்தில் புகுத்தியிருந்தார். சில சில்லறைகளை அள்ளி வீசி, சிலதுகளின் மூலம் இக் கட்டங்களின் விபரத்தை அறிந்து, பல பிரபல படத்தயாரிப்பு நிறுவனங்களே, தங்கள் தயாரிப்புகளில் புகுத்தி, நாடோடி

தமிழக சினிமாப் படங்கள் எதற்குமே இல்லாத முறையில், இப்படம் மூன்று பகுதிகளாகத் தணிக்கை செய்யப்பட்டது. தணிக்கை சபைத் தலைவர் திரு. சாஸ்திரி, தவறுகள் ஏதும் நேர்ந்துவிடக்கூடாதே என்பதற்காக இப்படத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் நன்குகப் பரிசிலனை செய்தார்.

படம் எடுக்கப்பட்டிருந்த பாணி அவருடைய கத்தரிக் கோலுக்கு அறவே வேலை கொடுக்க முடியாமற் செய்து விட்டது. சாதாரண படங்கள் எத்தனையோ இடங்களில் தணிக்கை சபையின் கத்தரிக்கோலுக்கு வழி விட்டிருக்கின்றன. ஆனால் நாடோடி மன்னனில ஒரு அங்குலமாவது வெட்ட முடியவில்லை.

மொத்தம் 28 ஆயிரம் அடிகளையும் திரையிடுவது முடியாத காரியமாகக் கருதப்பட்டமையினால் புரட்சி நடிகரும் அவருடைய தயாரிப்புக் குழுவினரும் தங்கள் விருப்பப்படி கத்தரிக் கோலை வைத்து படத்தை மொத்தம் 20,748 அடிகளுக்குள் முடித்தனர்.

### அண்ணாவுக்கு அன்பழைப்பு

படம் வெற்றிகரமாக முடிவடைந்துவிட்டாலும் மக்களின் பெருமதிப்பைப் பெறும் என்ற நம்பிக்கை புரட்சி நடிகருக்கு துளிகூட இருக்கவில்லை. காரணம், கலை உலகத்தில் அவரின்மேல் அப்போதிருந்த பொறுமையால் நிலவிய பொல்லாப்புகளே. சூழ்நிலைகளால் மனம் நொந்து, சலியாத உழைப்பால் உடல் சோர்வடைந்திருந்த புரட்சிநடிகர், தனது படம் வெற்றி பெறுமா, மாட்டாதா என்பதனை ஒரு பரிசோதனையின்மூலம் அறிய

தீர்ப்புக் கூறுங்கள். உங்கள் தீர்ப்பே உயர்ந்த தீர்ப்பாகும்,'' என்று கூறி அண்ணாவை அழைத்தார். அண்ணாவும் தி. மு. க. விலுள்ள அண்ணாவின் அருமைத் தம்பியர் பலரும் ஒருநாள் விஜயாத் தோட்டத்திலுள்ள படமாளிகையில் படத்தை முழுவதும் பார்த்தனர்.

எழுதுவது:
**'ஈழத்தரசன்**




### அண்ணாவின் ஆணை

படம்முடிந்தது.அண்ணாவின கண்களை எம்.ஜி.ஆர். ஆர்வத்துடன் நோக்கினார். அருள் சுரக்கும் அக்கண்கள் ஆனந்தக்கண்ணீரை உகுத்தன. ஆர்வத்தோடு தன் அருமைத் தம்பியை அணைத்து அன்பு முத்தமீந்தார். 'தம்பி உன் படம் திராவிடத் தாயின் மடியிலே தவழும் ஒரு கலை பொக்கிஷம். தயங்காமல் திரைக்கு அனுப்பிவை' என்று ஆணையிட்டார். அருமைத் தோழர்கள் அனைவரும் ஏகோபித்த குரலில் அண்ணாவின் குரலை ஆமோதித்தனர். அண்ணாவின் கட்டளையைச்சிரமேற்தாங்கி, தன்பணி தொடரப் புறப்பட்டார் புரட்சி நடிகர்.

மூன்று தடவைகளுக்கு மேல் நாடோடி மன்னன் திரையிடப்படுவதாக தேதி அறிவிக்கப்பட்டும், வெளிவரவில்லை. இறுதியில் 1958-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 22-ம் தேதி தமிழகத்தின் பல பாகங்களிலும் 'நாடோடி மன்னன்' தனது பவனியை ஆரம்பித்தான்.

சென்னை நகரமெங்கும் அப்போது நாடோடி மன்னனைப் பற்றியே பேச்செழுந்தது. பெண்களும் ஆண்களும் சிறுவர்களும் வயோதிபர்களும், எல்லோரும்

(13-ம் பக்கம் பார்க்க)

அட்லாய் ஸ்டீபன்சன் — வாழ்க்கைச் சித்திரம் 6 — வெறஸ்



(16) ஐக்கிய நாடுகள் சபையின் அமெரிக்கப் பிரதிநிதியாக ஜனாதிபதி கென்னடியால் அட்லாய் ஸ்டீபன்சன் நியமிக்கப்பட்டார். ஜனாதிபதி ஜோன்சனின் காலத்திலும் அதே பதவியில் தொடர்ந்தார். இதனால் தனது தாயகத்துக்கு மீண்டும் சேவை செய்ய இம் மேதைக்கு சந்தர்ப்பம் கிடைத்தது.



(17) ஐ. நா. பிரதிநிதியானதும், தனது திறமையையும் சாதுரியத்தையும் காண்பிக்கத் தலைப்பட்டார் ஸ்டீபன்சன். சர்வ தேசங்களினதும் சகல சிக்கல்களையும் தெரிந்து கொண்டிருந்தமையினால், சகல ராசதந்திரிகளுடனும் தொடர்புகொள்ளலானார். லத்தின் அமெரிக்காவில் பிரயாணம் செய்து அந்நாட்டின் பிரச்சினைகளை அறியலானார்.



(18) உலகனைத்துமுள்ள நாடுகள் ஸ்டீபன்சனைப் போற்றினர். ஐ. நா. காரியதரிசி யூதாண்ட் அமெரிக்க ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்த செய்தியில், ''அமெரிக்கப் பிரதிநிதியாக இருந்த காலத்தில் தமது விசேடத் தன்மைகளினால் அவருடைய சகாக்களின் மதிப்பையும் மரியாதையையும் அன்பையும் பெற்றுத் திகழ்ந்தார்'' என்று குறிப்பிட்டார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலப் படத்தில் புரட்சி நடிகர்

புரட்சி நடிகர் தமிழகத்தில் தயாராகவிருக்கும் ஒரு ஆங்கிலப் படத்தில் கதாநாயகனாக நடிக்கப்போகிறார். எம். ஜி. ஆர். பிக்சர்ஸ் தயாரித்து வரும் 'அடிமைப் பெண்' படமே அங்கிலத்திலும் தயாரிக்கப் படவிருப்பதாக எம்.ஜி.ஆர். புரொடக்ஷன்ஸ் நிர்வாகக்குழுத் தலைவரும், புரட்சி நடிகரின் காரியதரிசியுமான திரு. எஸ். கே. டி. சாமி நமது நிருபரிடம் கொழும்பில் வைத்துக் கூறினார்.



கடந்த வாரம் புரட்சி நடிகரின் காரியதரிசியும், எம். ஜி. ஆர். பிக்சர்ஸ் நிர்வாகிகளுள் முக்கியமானவருமான திரு. எஸ் கே. டி. சாமி கொழும்புக்குவந்திருந்தார். அவருடன் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் திருமதி. வி. என். ஜானகியும் வந்திருந்தார் மற்றும் சித்திரா கிருஷ்ணசாமி, ஏ. எல். சீனிவாசன் முதலானோரும் கடந்தவாரம் கொழும்பில் தங்கியிருந்தனர்.

எம். ஜி. ஆர். புரோடக்ஷன்ஸ் தயாரித்துவரும் 'அடிமைப்பெண்' பலவர்ணப்படமான இதுவரை 6000 அடிகள் வளர்ந்துவிட்டதாகவும் இப்படம் ஹிந்தியிலும் தயாரிக்கப் படுவதாகவும் திரு. சாமி கூறினார். இதே படத்தை ஆங்கிலத்திலும் தயாரிக்க சகலதிட்டங்களும் பூர்த்தியாகி விட்டதாகவும் அவர் கூறினார்.

ஆங்கில 'அடிமைப் பெண்' படத்தில் புரட்சி நடிகரே கதாநாயகனாகத் தோன்றப் போகிறார். இப்படத்துக்காக ரூ. 1,37,000 செலவில் ஒரு தளம் அமைக்கப்பட்டது. சத்தியா ஸ்டூடியோவுக்குள் அமைக்கப்பட்ட இத்தளத்தில் பல்லாயிரக்கணக்கான அடிகள் சுடப்பட்டன.

தமிழகத்தில் இவ்வளவு ரூபாய் செலவில் தளம் அமைக்கப் படுவது இதுவே முதற்தடவையாகும். ஏற்கனவே இதே ஸ்டூடியோ (முன்பு நெப்டியூன் ஸ்டூடியோவாக விருக்கும்போது) வெளிப்புறத்தில் ஜூப்பிட்டரின் 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' படத்துக்கு ரூபாய் ஒருலெட்சம் செலவில் ஒரு கோட்டை கட்டப்பட்டது.

அடிமைப்பெண்ணில் புரட்சி நடிகருடன் சரோஜா தேவி, கே.ஆர். விஜயா, நம்பியார், ரத்னா, நாகேஷ், மனோரமா முதலானோரும் நடிக்கின்றனர்.

## மூன்று நாடகங்கள்

நோர்வூட் இராசா தோட்டம் (ப. ச.) பாரதி மன்றத்தார் தீபாவளிக்காக மூன்று நாடகங்களை மீண்டும் மேடை ஏற்றுகின்றனர். 'அன்புக்கோர் ஆலயம்', 'அழுவதா சிரிப்பதா', 'மலைநாட்டில் எமன்' என்பவையே இந்நாடகங்களாகும்.

இவற்றில் என். கருப்பையா, எஸ். சூரியநாதன், எஸ். பொன்னையா, இலட்சுமணன், சமதபால, சோமபால, பாக்கியம், கந்தையா, முத்து, ராமு, ராமையா, விசுவலிங்கம், அம்பமுத்து, வேலு, செபஸ்தியான், அச்சுதன், கே. இலச்சுமணன், ஆகியோர் நடிக்கின்றனர்



பார்க்கும் பார்வையிலேயே யாரோ பக்கத்தில் பயமூட்டுவது தெரிகிறது. இந்த அப்பாவிப் பிள்ளையை இத்தனை தூரம் விரட்டுவது யாரோ? சினிமாஸ் தீபாவளி விருந்தாகத் தரும் 'எங்க விட்டுப் பிள்ளை' படத்தில் புரட்சி நடிகரும் புதுமுகம் ரத்னாவும்.

# ஹொங்கொங்கில் நான்சி குவான்



ஒன்பது வருடங்களுக்கு முன்னர் — 1956 ம் ஆண்டு சனவரி மாத ஆரம்பம், ஹொங்கொங் தீவுக்குள் செல்ல கௌலூன் கடற்கரையிலுள்ள துறைமுகத்துக்குச் சென்றோம். கௌலூன் ரயில்வே நிலையத்துக்கு அருகாமையில் ஒரு சிறு கும்பல் கூடியிருந்தது. பெரும் பாலும் சீனர்கள் கூடியிருந்த அக்கூட்டத்துள் சில வெள்ளைக்காரரும் தென்பட்டனர்.

அருகே சென்று பார்த்த போதுதான் விடயம் விளங்கியது ஒரு ஹோலிவூட் கம்பனி திரைப்படம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தது.

துறையிலிருந்து அக்கரை செல்லும் சிறு கப்பலில் ஏறுவதற்கு வரிசையாக நின்று கொண்டிருந்தோம். எங்களுக்கு முன்புறமாக ஒரு வெள்ளையர் நின்று கொண்டிருந்தார். எங்கள் வரிசையைக் கவனியாமல் இளவயதுடைய சீனநங்கை ஒருத்தி முன்னோடிச் சென்று கப்பலில் ஏறிக்கொள்ளுகிறாள்.

வரிசையில் நின்றவர்கள் தங்களைப் பின் தங்கவிட்டு முன்னோடி கப்பலில் தாவிஏறிய அந்நங்கையை வெறுப்போடு பார்த்தனர். எமக்கு முன்னே நின்ற வெள்ளைக்காரரும் வரிசையை விட்டகன்று அந்நங்கையைப் பின் தொடர்ந்தார்.

இடப்புறத்திலிருந்து 'ஓகே' என்ற ஒலி, ஒலிபெருக்கியிலிருந்து எழுந்தது. திரும்பிப் பார்த்தோம். திரைப்படக் காமிரா ஒன்று எங்களையும் சேர்த்துப் படமாக்கிய சம்பவமும் அப்போது தான் தெரிந்தது.

வரிசையில் எங்களுக்கு முன்னே நின்றவர்தான் பில் ஹோல்டன் என்ற நடிகர் என்பதையும், ஓடிச்சென்ற இளநங்கை நான்சிகுவான் என்ற ஹோலிவூட் நடிகை என்பதனையும் அடுத்த நாள் வெளியான ஆங்கிலத் தினசரி எடுத்துக்கூறியது.


'சூசி வொங்கின் உலகம்' (WORLD OF SUZIE WONG) என்ற ஆங்கில வர்ணப்படத்துக்காக வே இக்கட்டம் ஹொங்கொங்—கௌலூன் துறையடியில் சுடப்பட்டது.

நான்சிகுவான் இன்று பிரசித்திபெற்ற ஹோலிவூட் நடிகையாகத் திகழ்கிறார். ஆங்கிலத் தாயாருக்கும் சீனத்தகப்பனுக்கும் பிறந்த இவ்விளநங்கைக்கு இன்று 26 வயதாகிறது. இவர் ஹொங் கொங்கில் 1939ம் ஆண்டு மேமாதம் 19ம் திகதி பிறந்தவர். தாய் தந்தையர் அவருக்கு இட்ட பெயர் கா ஷென் (மென்மையான பூ) என்பதாகும்.

சூசி வொங் என்ற பாத்திரத்தைத் தாங்க தகுதி வாய்ந்த ஒரு சீனநடிகை தேவை என்று ஹொங்கொங் ஆங்கிலத் தினசரியான 'டைகர்ஸ்டாண்டர்ட்' ஒரு விளம்பரத்தை வெளியிட்டிருந்தது. அதைக்கண்ணுற்ற நான்சி குவான் விண்ணப்பித்து தெரிவு செய்யப்பட்டார். இன்று பல முதல்தர ஹோலிவூட் படங்களில் நடித்து பிரசித்தியடைந்து விட்டார்.

அண்மையில் 'சூசி வொங்' திரைப்படம் கொழும்பு லிபேர்ட்டியில் திரையிடப்பட்டபோது மேற்கூறப்பட்ட கட்டம் ஒரு விநாடியே திரையில் தென்படுகிறது. எங்கள் உருவநிழலையாவது அடையாளம் [illegible] முடிந்து பரவசப்பட்டோம்.

ஈழத்தரசன்



கன்னியின் சடை கறுப்பு. ஆனால் அவளை கையிலே விளையாடும் நாய்க்குட்டியின் சடையோ வெள்ளை. இந்தப் [illegible] தியேட்டருக்கு, பிரெஞ்சுக் கன்னியான 'இர்மா லா டௌசே' திரைச் சித்திரமாக வருகிறது. இப்படத்தில் ஷேர்லி மக்லேன் இப்படித் தோன்றுகிறார்.

# அண்ணாவின்....

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

'நாடோடி மன்னன்' என்ற வார்த்தையையே அப்பொழுது உச்சரித்துக் கொண்டிருந்தனர்.

## மக்கள் தந்த பெருமதிப்பு

சில தியேட்டர்களில் மதில்களை இடிந்து சில்லரை அங்கனர்களாக்கியது. பொலீசாரின் 'லத்தி' தாக்குதல்களையும் தாங்கிக்கொண்டு இரசிகப் பெருமக்கள் படத்தைப் பார்த்துவிடப் பறந்தனர்.

'நாடோடி மன்னன்' இத்தகையதொரு புகழைப் பெறுவான் என்று எவருமே கனவிலும் கருதவில்லை. புரட்சி நடிகர் மேல் பொறாமை கொண்டிருந்தவர்களின் கற்பனையிலே கருங்கல்லைத் தூக்கி வாரிப் போட்டது, படத்துக்கு மக்கள் கொடுத்த பெருமதிப்பு.

தமிழகத்திலே திரையிடப்பட்ட படங்களுள் சம்பாத்தியத்தில் ஒரு மாபெரும் சாதனையை நாடோடி மன்னன் ஏற்படுத்தியது. ஆனால் புரட்சி நடிகருக்கு இப்படம் நட்டத்தையே கொடுத்தது.

'நாடோடி மன்னனுக்குத் தயாரிப்புக்கான செலவு மொத்தம் ரூ. 30 இலட்சம். திராவிடத்தில் மட்டும் இப்படத்துக்குக் கிடைத்த வருமானம் சுமார் ரூ. 64 இலட்சம். ஆனால் புரட்சி நடிகருக்கு மொத்தமாகக் கிடைத்த வருமானம் ஆக ரூ. 26,50000. இதனால் சுமார் மூன்றரை இலட்ச ரூபாய் புரட்சி நடிகருக்குக் கைநட்டமானது.

அதிசயமான இந்த வருமானம் எல்லோருக்குமே வியப்பையளித்தது. பாடுபட்டும் போதிய பலனை அடைய முடியாமல் போனமைக்கு புரட்சிநடிகர் செய்த பெரும் தவறே காரணமாகும். இந்தகைய தப்புச்செய்தவரை எவர்தான் திட்டாமலிருக்க முடியும்?

(வளரும்)

## மலைநாட்டில் வில்லுப்பாட்டு

அட்டன்—டிக்கோயா இந்து மகா சபையினர் 2-10-65 ல் நடாத்திய நவராத்திரி விழாவில் விசேட நிகழ்ச்சியாக மட்டுநகர் மாஸ்டர் சிவலிங்கம் குழுவினரின் வில்லுப்பாட்டுக் கச்சேரி இடம்பெற்றது.

பக்திச் சுவையும், நகைச்சுவையும் நிறைந்த வில்லுப் பாட்டுக் கச்சேரியில் 'வில்லிசைச் செல்வன்' மாஸ்டர் சிவலிங்கம், ஆர். டி. கிருபைரெத்தினம் ஆசிரியர், 'அன்புமணி', பி. சிவலிங்கம் ஆசிரியர், கவிஞர் குணரெத்தினம், வி. சு. கதிர்காமத்தம்பி ஆகியோர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் குரல்

## பாடசாலை நாடக விழாப் போட்டி முடிவுகள் நீதியானவையா?

இலங்கைக் கலைக் கழகத் தமிழ் நாடகக் குழு வருடந்தோறும் நடாத்தி வரும் பாடசாலைகளுக்கான நாடக விழா இவ்வாண்டு தெல்லிப்பழை மகாசனக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இவ்வேளையில் கலைக்கழகத் தமிழ் நாடகக் குழுவினரின் பாரபட்சமான போக்கினை இவ்விழாவில் பங்குபற்றிய நாடகங்களை நடுநின்று பரிசில்கள் வழங்கினர்களா என்ற ஐயத்தினை ஆராய வேண்டும்.

ஆண்டுதோறும் பாடசாலை நாடக விழாவுக்கெனக் கலந்து கொள்ளும் நாடகங்களின் எண்ணிக்கை தேய்பிறையாகிக் கொண்டே வருகின்றது. காரணம் என்ன? கலைக்கழகத் தமிழ் நாடகக் குழுவினரின் பாரபட்சமான நடவடிக்கைகளே என்பதனை மறுக்க முடியாது! போட்டிக்கு வந்த நாடகங்களைப் பொறுத்தவரை வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற முறையில் பாகுபாடு காட்டப்பட்டு தரமான நாடகங்கள் பரிசில் பெறுது தடுக்கப்பட்டன என்பது பகிரங்க ரகசியம்!

கலைக் கழகத் தமிழ் நாடகக் குழுத் தலைவரிடம் பின்வரும் வினுக்களை மிக்க பணிவன்புடன் கேட்டு வைக்க ஆசைப்படுகிறேன். தமிழ் நாடகக் கலையின் நலன் கருதி அவர் தக்க பதிலளிப்பாரென காத்திருக்கின்றேன்.

(1) கலைக் கழகம் தயாரித்தளித்த நாடகப்போட்டி விதிகளுக்கமைய இறுதிப் போட்டியில் நாடகங்கள் தெரிவு செய்யப்பட்டன வென்று நிரூபிக்க முடியுமா?

(2) நாடகவிழாப் போட்டியில் பங்கு பெறும் ஒரு கல்லூரியினரின் ஆதரவுடன் அக் கல்லூரி மண்டபத்திலேயே நாடக விழாவை நடாத்துவது பாரபட்சமாகாதா? பந்தயத்தில் ஓடுபவனையே நடுவராகப் பணி புரிய வைத்த திறமை தான் என்னே!

(3) இறுதிப் போட்டி முடிவுகளுக்கு நடுவர்களாக அமைந்தவர்கள் யாவர்? நாடகத்துறையில் அவர்கள் தகுதி என்ன?

(4) தமிழ் இலக்கிய உலகில் நிலவும் முற்போக்குப் பிற்போக்கு இலக்கியப் போராட்டப் பின்னணியில் பிரபல எழுத்தாளர் ஒருவரின் நாடகத்தினைத் தாங்கள் 'பழிதீர்த்துக் கொண்டதாக' நடுவர்களில் மூவர் பலரறியப் பேசிக் கொண்டார்களே, இது பொய்யா? பொய்யென நிரூபிப்பீர்களா?

(5) பரிசுக்கல்ல, உண்மையான தேர்வுக்காக 'வரவாற்று' நாடகங்கள் அனைத்தையும் மீட்டும் ஒரு முறை பொதுவான நடுவர்களின் தீர்ப்புக்காக மேடையேற்ற ஒழுங்கு செய்வீர்களா?

(6) யாழ்ப்பாணத்து நாடக வரலாற்றிலேயே குறிப்பிடத்தக்க வகையில் 'கல்லூரி மாணவிகள்' மாத்திரமே நடித்துத் தரமானதெனப் பேர்பெற்ற நாடகமொன்றினைப் பரிசு பெறுமற்செய்து 'கலைவளர்த்த' பெருமைக்குரிய நடுவர்களை வேண்டுமென்றே நீங்கள் புகுத்தவில்லையா?

(7) கலந்துகொண்ட நாடகங்கள் அனைத்தினதும் எழுத்துப் பிரதிகளைத் தனியான ஒரு போட்டிக்கு வைப்பதற்குத் தாங்கள் இயைவீர்களா? 'ஈயடிச்சான் கொப்பி' நாடகங்களுக்கு எப்படி பரிசு கிடைத்தது?

கலைக் கழகத் தமிழ் நாடகக் குழுத் தலைவர் இவ்வினுக்களுக்குத் தக்க பதிலளித்தேயாகவேண்டும். வருடா வருடம் தமிழ் நாடகக் கலையின் பேரால் தாம் விரும்பியவர்களுக்கு 'முடிசூட்ட' நாம் அனுமதிக்க முடியாது! இவ்வாண்டு பெற்ற அனுபவத்திலிருந்து எதிர்காலத்தில் மூன்று கல்லூரிகள் தாமும் நாடகப் போட்டியில் பங்கு கொள்ளுமா என்பது ஐயத்திற்கிடமாகி விட்டது.

—கா. ஆறுமுகம்

களிபுரம்.

## ஈழநாடும்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்தினிக் கென்றெழுந்த கோயில்கள் இலங்கையின் வட, கிழ்ப் பாகங்களில்அதிகமாகக் காணப்படுகின்றன. இப்பகுதிகளில் மிகப்பேர் போன கோயில் வற்றாப்பழை எனுமூரிலுள்ள கோயிலாகக் கொள்ளப்படுகின்றது. இக்கோயிலின் சிறப்பு வாய்ந்த திருவிழா ஆண்டுதோறும் வைகாசித் திங்களில் நடைபெறும். இவ்வைபவத்திற்கு இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் திரள் திரளாக வந்துகூடுவர்.

பொதுவாகக் கண்ணகி கோயில்களில் ஆண்டுதோறும் விழாக்கள் நடைபெறும். விழாவைக் கொண்டாடுவதற்காக ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே கோயில்கள் திறக்கப்படும். இவ்விழாக்கள் பெரும்பாலும் வைகாசிக்கும் ஆனிக்கும் இடைப்பட்ட காலத்திலேயே நடைபெறும். ஏனைய நாட்களில் இவ்வாலயங்கள் எவ்வித பூசையுமின்றி மூடப்பட்டிருக்கும். திருவிழா பலநாட்களுக்குத் தொடர்ந்து நடைபெறும். அந்நாட்களில் கண்ணகி கதை தெய்வ முன்னிலையில் ஏட்டிலிருந்து படிக்கப்படும். அடியார் பலர் சூழ இருந்து பயபக்தியோடு அக்கதை கேட்டின்புறுவர். கடைசி நாளன்று மக்கள் தம் குடும்பங்களுடன் கோயிலுக்குச் சென்று பொங்கல் பொங்கி பத்தினிக் கடவுளுக்கு முன் படைத்து வழிபாடாற்றுவர் இப்பொங்கற் பண்டிகை இராக்காலம் முழுவதும் நடைபெறும். காவடிகள், பாட்டுக்களுடனும் மேளவாத்தியங்களுடனும் வலம் வந்து கோயிலையடையும் கரகம், பாற்செம்பு முதலியனவும் வந்துசேரும்.

### கண்மலர்கள்

இவ்வழிபாட்டின் இடைக்காலத்தில் கண்ணகி கண்ணகை எனப்பட்டு கண்ணேய் பீடிக்கப்பட்டவர்களால் பெரிதும் பூசிக்கப்பட்டனள். அதனுற் பத்தினிக் கோயில்களில் பக்தர்கள் வெள்ளியால் செய்தளித்த கண்மலர்களைக் காணலாம்.

ஆரம்ப காலமுதல் வழிபாடாற்றப்பட்டு வந்த கண்ணகி கோயில்கள் சில இன்று அவ்வழிபாட்டை விட்டு நீங்கிய போதும்இடையிடையே விரவிக்கிடக்கும் ஏனைய கண்ணகி கோயில்கள் கண்ணகிக் கோயிலெடுத்த காலமுதலாக பத்தினி பக்தர்களால் இன்றுவரை அழிவு நிலைபெறவிடாது பாதுகாக்கப்பட்டு [illegible] இன்[illegible].

# தாதிமார் பயிற்சி பெற தமிழ்ப் பெண்கள் விரும்பவில்லையாம்

தாதிமார் பயிற்சி பெற போதிய தமிழ்ப் பெண்கள் முன்வராமையினுலேயே தமிழ்ப் பகுதிகளில் உள்ள மருத்தவமனைகளுக்கு சிங்களத் தாதிகளை நியமிக்க வேண்டியிருக்கிறது என்று சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளதாக தமிழரசுக் கட்சி வட்டாரங்களில் இருந்து செய்தி கிடைத்துள்ளது.

தாதிமார் பயிற்சிக்காக யாழ்ப்பாணத்தில் ஒரு பயிற்சி நிலையத்தைமறைந்த திரு. வி. ஏ. கந்தையா பல கஷ்டங்களுக்கு மத்தியில் அன்று நிறுவி அங்கு தமிழ் மொழி மூலம் பயிற்சி நடைபெறுவதற்கு ஒழுங்குகள் செய்திருந்தார்.

இத்தனை வசதிகளைச் செய்திருந்த போதிலும் தமிழ் பெண்கள் தாதிப் பயிற்சி பெற முன் வருகிறார்கள் இல்லையாம். சிங்களத் தாதிமார்களைத் தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்புவதால் அவர்கள் நோயாளர்களுடன் நெருங்கி அவர்கள் குறையைச் சரியாகப் புரிந்து கொள்ளமுடியவில்லையென்றும் கூறப்படுகிறது.

'படித்த தமிழ்ப் பெண்கள் பலர் வேலை எதுவும் கிடைக்காமையால் இன்று வீட்டில் வேலையற்று இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் சுகாதாரத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு தாதிப் பயிற்சி பெற முன்வந்தால், தமிழ் பகுதியில் உள்ள நோயாளர் குறை மட்டுமல்லாது அவர்களுக்குள்ள வேலையில்லாப் பிரச்சினையும் நீங்கும்' என்று தமிழரசுக் கட்சிப் பிரமுகர் ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

## சோவியத்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்தோ, உருவாக்கியோ பூர்த்தி செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம் வலுப்பெற்று வரும்பொழுது சோவியத் உருசியாவில் ஏற்பட்டுள்ள புதிய நோக்குத் திட்டம் எதிர்பார்க்கும் வெற்றியைக் கொடுக்குமா என்ற கேள்வி எழுகிறது.

எது எப்படியமைந்த போதிலும் சோவியத் உருசியாவில் தோன்றியுள்ள புதிய மாற்றமும், புதிய திட்டமும் ஒரு உண்மையைத் தெளிவுபடுத்துகின்றது. இரும்புத் திரைக்குப் பின்னல் தனிமனித உரிமைகள் நசுக்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டுக்கு இனி இடமில்லை.

அல்லது உருசியாவில் தனி மனித சுதந்திரம் புதிய திட்டத்தின் மூலம் அமுலுக்கு வரப்போகின்றது என்பது, என்னவே மறுக்க முடியாத உண்மை. அந்தப் புதிய சகாப்தம் உருவாவதை சோவியத் ஆட்சியாளர் தானும் தடுத்து நிறுத்தி விட முடியாது. திரு. குருஷ்சேவ் வகுத்த உடனிருந்து வாழும் திட்டம் பூரண வெற்றியை நோக்கி வீர நடை போடுகிறது.

## சிரிப்பும்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மல் போய் விட்டதே என வருந்தவில்லை. அதைப் போல ஒருகால் உள்ள நீங்களும் இன்னெரு கால் இல்லையே என வருந்தக் கூடாது' என்று அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

### 4-ம் வகுப்பு இல்லை

இந்த ஆறுதல் கடிதப்பதைப் படித்தவுடன் ஊனமான லோரைன் தன்னையறியாமல் சிரித்துவிட்டாராம். இருப்பதைக் கொண்டு மகிழ்ச்சி கொள்ள வேண்டும் என்பதை சிறந்த நகைச்சுவை மூலம் பெர்னுட்சா விளக்கியிருப்பது பாராட்டத் தக்கது. இப்படிப்பட்ட சிரிப்புக்கள் நம் சிந்தனையை தூண்டும் வகையில் அமைந்திருக்கின்றன.

பெர்னுட்சாவை போல அண்ணல் காந்தியடிகளும் சிந்தனையை தூண்டும் வகையில் பேசுவதில் ஆற்றலுடையவர். ஒரு முறை புகை வண்டியில் மூன்றும் வகுப்பில் அவர் பயணம் செய்துகொண்டிருந்தார். அப்போது அவரை ஒரு நண்பர் பார்த்தார். மூன்றும் வகுப்பில் பயணம் செய்வதைப் பார்த்து வியப்புற்றுர். 'மூன்றும் வகுப்பில் தாங்கள் பயணம் செய்யலாமா?' என்று காந்தியடிகளை அந்த நண்பர் கேட்டார். 'என்ன செய்வது? நான்காம் வகுப்பு என்று ஒரு வகுப்பு இல்லையே! அதனுல் மூன்றும் வகுப்பில் பயணம் செய்கிறேன்' என்று காந்தியடிகள் சுடச்சுட பதில் கூறிஞராம். இதைக் கேட்ட நண்பர் சிரித்தாராம்.

உலகப் புகழ் பெற்றவர்களின் வாழ்க்கை வரலாற்றை நாம் கவனிக்கும் போது அவர்கள் சிறந்த நகைச்சுவையுடன் பேசி, எழுதி வைத்திருக்கிறார்கள் என்று நன்கு விளங்கும். வாழ்க்கையில் கவலையை மறக்க சிரிக்கப் பேச வேண்டும். சிந்தனையைத்தூண்டும் சிரிப்புக்களை இரசிக்கவும், இரசித்துச் சிரிக்கவும் பழக வேண்டும்.

## நீங்களும் ....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

டுரை ஒன்று பிரசுரிப்போம். இக் கட்டுரையும் இப் பிரச்சினைக்கு நல்ல விளக்கம் தரும் என்று எதிர்பார்க்கின்ருேம்.

17-ம் திகதி இதழில் வைத்திய கலாநிதி நா. கந்தையா அவர்களின் வைத்திய கேள்வி பதில் பகுதியை சுதந்திரன் தொடங்குகிறது. சகோதரிகள் இப்பகுதியினை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

—செல்வி அக்கா.

## மூன்றுண்டு...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தனை எதிர்ப்புக்களையும் முறியடித்து கழகம் காலூன்றியதும் முன்னர் ஆதிக்கம் செலுத்தியவர்கள் கவனிக்கத்தவறிய மக்கள் பிரச்சினைகள் மலைபோற் குவிந்து கிடக்கும். அவற்றை ஆராய்ந்து சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தியோ, அல்லது நேரடி நடவடிக்கைகள் போன்ற வேலை நிறுத்தப் போராட்டங்களில் ஈடுபட்டோ தீர்க்க வேண்டியிருக்கிறது.

கழகம் கால் ஊன்றிய இடங்களில் சாதித்த சம்பவங்கள் பல. மக்கள் பிரச்சினைகலை மகத்தான முறையில் தீர்த்துவைத்துள்ளன. தொழிற் சங்கம் என்றதும் தொழில் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத்தான் கவனிக்க வேண்டுமென்ற கட்டுக் கோப்புக்குள் கழகம் அடைப்பட்டுக்கிடக்கவில்லை. தொழிலாளர்களின் தொழிற் பிரச்சினை, வாழ்க்கைப பிரச்சினைகளுக்கும் அப்பாற்சென்று, அவர்களின் அரசியற் பிரச்சினைகள் போன்ற வற்றையும் கழகம் கவனிக்கிறது. அவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றவும் செய்கிறது. இது ஏனைய தொழிற் சங்கங்களுக்கும் இலங்கைத் தொழிலாளர் கழகத்திற்கும் இடையில் உள்ள வேறுபாடாகும்.

இ. தொ. கழகம் தொழிற் சங்கம் என்று கூறுவதைவிட, மலையக மக்களின் மக்கள் இயக்கம் அது. அவர்களின் வாழ்விலும் தாழ்விலும் இரண்டறக் கலந்து விட்ட இயக்கம் கழகம். எனவே தான் கழகத்தின் தோற்றம் மலையக மக்கள் மத்தியில்ஒரு புது விழிப்புணர்ச்சியைத் தோற்றுவித்துள்ளது.

அந்த விழிப்புணர்ச்சி கண்டு ஆயுட்காலத் தலைவர்கள் அஞ்சுகிறுர்கள். முதலாளியாக வாழ்ந்து தொழிலாளர் தலைவனுக நடிக்கும் காலம் மலை முகட்டிலேயே மலையேறுகிறதே என்று ஏங்குகிறுர்கள்,

கழகம் மலையகத் தமிழ்ப் பட்டாளிகளைச் சிந்திக்கத் தூண்டிவிட்டுள்ளது. மலையகத்தமிழ்த் தொழிலாளர்கள் தமிழ் கூறும் நல்லுலகின் பிரிக்க முடியாதபகுதி தாங்கள் என்பதை உணரவைத்துள்ளது. இதனுல் மலையக மக்களை ஈழத் தமிழ் மக்களிடமிருந்து பிரிந்து ஒதுக்கி வைத்திருந்தவர்கள் எல்லாம் வட—கிழக்கு நோக்கியும் செல்ல முற்பட்டிருக்கிறுர்களாம்.

### இரட்டை வேடத்திற்கு இடமில்லை

கழகத்தின் தோற்றம் இப்புரட்சிகளை மட்டுமல்ல இன்னும் பல புரட்சிகளைச் செய்துள்ளது. எனவேதான் கழகம் ஆறு மாவட்டங்களில் மட்டும் இதுவரை கால் ஊன்றி மூன்றுண்டுக் குழந்தையாக தவழ்ந்தாலும் அதன் சக்தி பலமானது. கழகம் சிறிதென்றுலும் காரம் பெரிதுதான். இதை நாம் கூறவில்லை. இதுவரை தங்களைப் பெரிய மனிதர்கள் என்று கூறிக்கொண்டு தூங்கியவர்கள் இப்பொழுது விழுந்தடித்து விழித்துக் கொண்டு கூறுகிறுர்கள். எனவே கழகத்தின் மூர்த்தி பெரிது என்பது புலனுகிறது. இதைப் 'பெரியவாள்களே' உணரும் பொழுது மேல் விளக்கம் ஏன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பாரோர் போற்றும் பெரியார்கள் (4)

# லால் பகதூர் சாத்திரி

—அன்ரனி பெர்னண்டோ—

நேருவின் மறைவுக்குப்பின் பாரத நாட்டின் பிரதமராக லால் பகதூர் சாத்திரி பணியாற்றி வருகிறார். இவர் பாரதத்தின் இரண்டாவது பிரதமர். பாரத மக்கள் இவர் பேரில் அளவற்ற அன்பும் மதிப்பும் கொண்டுள்ளனர். நல்ல திறமையும் அனுபவமும் மிக்க இவர்பேரில் அளவற்ற அன்பும் மதிப்பும கொண்டுள்ளனர். நல்ல திறமையும் அனுபவமும் மிக்க இவர் பிரதமர் பதவிக்குப் போட்டியின்றி ஒருமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

பாரத நாட்டில் உத்தரப் பிரதேசத்தில் வாரணுசி மாவட்டம் இருக்கிறது. அங்கு மொகல்சராய் என்னும் இடத்தில் 1904-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் நாள் இவர் பிறந்தார். இவரது பிறந்த தினமும் காந்தி மகானின் பிறந்த தினமும் ஒரே நாளில் வருகின்றன. இவரது முழுப் பெயர் லால் பகதூர் சிறீவத்சவ் என்பது. இவரது தந்தை சாரதா பிரசாத் ஓர் எளிய பள்ளி ஆசிரியராக இருந்தார்.

ஒன்றரை வயதிலேயே தந்தையை இழந்த லால் பகதூர் தனது தாய் வழிப் பாட்டனரிடம் வளர்ந்தார். வாரணுசியில் அரிச்சந்திரா பள்ளியில் சேர்ந்து கல்வி பயின்றார். இவருக்குப் பதினேழு வயதாகும் போது காந்தி மகான் விடுதலைப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தார். இதைக் கண்ட லால் பகதூர் படிப்பைத் துறந்து தானும் போராட்டத்தில் குதித்து ஒத்துழையாமை இயக்கத்தில் பங்குகொண்டார். இதனுல் இவர் சிறை செல்லவும் நேர்ந்தது.

இவர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின், இவரைப்போல் இடையில் கல்வியைக் கைவிட நேர்ந்தவர்களுக்கென அமைக்கப்பட்ட காசி பல்கலைக் கழகத்தில் சேர்ந்து தன் படிப்பைத் தொடர்ந்தார். அங்கே இவர் 'சாத்திரி' என்ற பட்டத்தைப் பெற்றார். இவர் படித்துப் பெற்ற பட்டமான 'சாத்திரி' இப்போது இவரது பெயரோடு ஒட்டிக் கொண்டுவிட்டது. இவரை எல்லோரும் சாத்திரி என்றே அழைக்கின்றனர்.

பொதுத் தொண்டு செய்வதில் மிகுந்த விருப்பத்துடன் ஈடுபட்ட இவர் காங்கிரசுக் கட்சியைப் பற்றிப் பிரசாரம் செய்யும் பொறுப்பையும் ஏற்றுத் திறம்படச் செய்தார். அதனுல் பிரதமர் நேருவுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது. விடுதலைப் போரில் ஈடுபட்டதன் பயனுய் இவர் ஏழு முறைகள் சிறைசென்று சுமார் ஒன்பது ஆண்டுகளைச் சிறையிலே கழித்தார்.

தனது இருபத்தி மூன்றுவது வயதில் லலிதா தேவி என்ற பெண்மணியை மணம்செய்துகொண்ட இவருக்கு நான்கு ஆண்களும் இரண்டு பெண்களும் பல பேரக் குழந்தைகளும் இருக்கின்றனர்.

காங்கிரசுக் கட்சியின் பொதுச்செயலாளராக 1951-ம் ஆண்டில் நியமனம் பெற்ற சாத்திரி அடுத்த ஆண்டு பாராளுமன்றத்தில் மேல்சபை உறுப்பினராகி புகையிரதத்துறை அமைச்சராகவும் பதவி ஏற்றார். அரியலூரில் 1956-ம் ஆண்டு ஒரு கோரமான புகையிரத விபத்து ஏற்பட்டது. புகையிரதத்துறை அமைச்சராக இருந்த சாத்திரி உடனே தன் பதவியைத் துறந்துவிட்டார். யாரோ செய்த தவறு காரணமாக ஏற்பட்ட விபத்துக்குப் பிராய்ச்சித்தமாக இவர் தன் பதவியைத் துறந்ததுகண்டு எல்லோரும் வியந்தனர்.

1957-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் மீண்டும் மக்கள் சபைக்கு வந்த சாத்திரி போக்குவரத்து, செய்தித்துறை அமைச்சராகப் பணியாற்றினர். பின்னர் வர்த்தக, தொழில் அமைச்சராகி 1961-ம் ஆண்டு முதல் உள்நாட்டு அமைச்சராகவும் இருந்தார். இவரிடம் அமைந்திருந்த உயரிய பண்பையும் சிறந்த செயற்திறனையும் அறிந்திருந்த பிரதமர் நேரு இவரை அனுப்பிப் பல சிக்கலான பிரச்சினைகளை மிக எளிதில் தீர்த்துக்கொண்டார். அப்போது இவரது அரிய சாதனைகளைக் கண்டு அனைவரும் மெச்சிப் போற்றினர்.

பிரதமர் நேரு 1964-ம் ஆண்டின் முற்பகுதியில் நோய்வாய்ப் பட்டபோது, அவரது வேலைகளில் ஒரு பகுதியை இவர் ஏற்றுச் சிறப்பாகச் செய்துவந்தார். அதே ஆண்டு மே மாத இறுதியில் பிரதமர் நேரு காலமானதை அடுத்து இவர் பாரதநாட்டின் பிரதமரானர். நேருவின் கொள்கைகளைப் பின்பற்றும் இவர் நேருவைப் போலவே குழந்தைகளின்மேல் மிகுந்த விருப்பமுள்ளவர். எவரோடும் சுவையாக, அன்பொழுகப் பேசுவார். மென்பந்து, பூப்பந்து, மேசைப்பந்து, நீச்சல் போன்ற விளையாட்டுக்களையும் இவர் பெரிதும் விரும்புகிறார்.

வியாபாரத்திற்கழகு
விளம்பரம் செய்தல்

## பாரதி விழா பேச்சுப் போட்டி

கொசுலந்தை மாவித்தியாலயம் தமிழ் பிரிவில் பாரதி நினைவு தினத்தையொட்டி பிரதம ஆசிரியர் திரு. எஸ். பாலசுப்பிரமணியம் தலைமையில் பேச்சுப் போட்டி ஒன்று நடைபெற்றது. திரு. எம். வெற்றிவேலு ஆசிரியர், திரு. பி. முத்துலிங்கம் ஆசிரியர், திரு. எல். அருளம்பலம் ஆசிரியர் ஆகியோர் நடுவர்களாயிருந்தனர்.

போட்டியின் முடிவுகள் வருமாறு:-

(1) க. பொ. த. (இ) வகுப்பு

1. செல்வன் டி. எப். டபிள்யூ. யோன்
2. செல்வன் எஸ். சுப்பிரமணியம்
3. செல்வன் இ. பழனியாண்டி

(2) க. பொ. த. (ஆ) வகுப்பு

1. செல்வன் எஸ். என். இராசரத்தினம்
2. செல்வி எம். வி. யோன்
3. செல்வி கே. சரசுவதி

(3) 8ம் வகுப்பு

1. செல்வன் ஆர். முகுந்தகுமார்
2. செல்வன் எஸ். என். கனகரத்தினம்
3. செல்வன் எஸ். வேலு

(4) 7ம் வகுப்பு

1. செல்வி கே. இந்திராணி
2. செல்வன் எஸ். புவனேசுவரன்
3. செல்வி எஸ். அகிலாண்டேசுவரி

(5) 6ம் வகுப்பு

1. செல்வன் வி. அழகன்
2. செல்வன் பி. வீரப்பன்
3. செல்வன் கே. மூக்கையா

(6) 5ம் வகுப்பு

1. செல்வன் ஆர். அருணசலம்
2. செல்வன் எஸ். என். விசயரத்தினம்
   செல்வி பரமேசுவரி
3. செல்வன் ஆர். கிருட்ணசாமி
   செல்வி என். சுசீலா

(7) 4ம் வகுப்பு

1. செல்வன் வி. கலானந்தன்
2. செல்வன் எம். பத்மன்
3. செல்வன் ஏ. செல்வரத்தினம்

(8) 3ம் வகுப்பு

1. செல்வன் எம். சிவராசா
2. செல்வி பி. மீனும்பிகை
3. செல்வன் டி. நடராசா
   செல்வி எஸ். பச்சையம்மா.

"ஆறுகால் மடம்" போட்டியில் பரிசு பெற்றவர்களின் விபரம் அடுத்த இதழில் இடம் பெறும்.

## விநோத சொல் வேட்டைப் போட்டி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 சி | வ | ளா | தி | மா | ஆ | ல் | ம |
| ன் | ன | ர் | ம | மா | று | கா | ட |
| சு | வீ | டு | ன் | மா | ர் | ம | ம் |
| த | ந் | தி | ர | ண | வ | ன் | ற |
| து | மா | மா | மி | க | ஸ் | ணி | ம் |
| ம | க | ள் | ரி | ணி | வி | த | ன |
| ந | மை | யா | பா | லே | யே | ந் | ம் |
| பு | து | ரீ | ர் | லே | க | ரு | ம் |

1. சின்னவீடு
2. ..............................
3. ..............................
4. ..............................
5. ..............................
6. ..............................
7. ..............................
8. ..............................

பெயர் ..............................

முகவரி ..............................

..............................

வளர்மதி உறுப்பினர் எண் .................... (உறுப்பினராயின்)

இங்கே கத்தரிக்கவும்

இது மிகவும் சுலபமான போட்டி. இங்குள்ள சதுரத்தில் காணப்படும் எழுத்துக்களில் பல சொற்கள் மறைந்திருக்கின்றன. தொடங்கும் எழுத்தில் இருந்து மேல் நோக்கியோ, கீழ் நோக்கியோ அல்லது வலது பக்கமாகவோ மாறி மாறிச் செல்லும் அடுத்தடுத்துள்ள எழுத்துக்களால் ஆன இந்தச் சொற்கள் வளர்மதி வாசகர்களுக்கு மிகவும் பழக்கமானவையாகும்.

நீங்கள் இந்தச் சொற்களைக் கண்டு பிடித்து ஒவ்வொரு சொல்லுக்கும் உரிய எழுத்துக்களை பேனுவினல் கோடிட்டு இணைத்துவிட வேண்டும். இவ்வாறு இணைக்கப்பட்ட ஒரு சொல்லை அடுத்து, அதோடு தொடர்புடைய மற்றொரு சொல்லும் வந்தால் அதே கோட்டினல் அந்தச் சொல்லையும் இணைத்து விடுங்கள்.

[உதாரணமாக 'சின்ன வீடு' (சின்ன + வீடு) என்ற சொற்களுக்குரிய எழுத்துக்கள் கோடிட்டு இணைக்கப்பட்டு 1 என இலக்கமிடப் பட்டிருப்பதைப் பாருங்கள்.]

நீங்கள் கண்டு பிடித்து இணைத்த சொற்றொடர்களையும் இவ்வாறு 2, 3, 4...என இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் படிவத்தில் வரிசைப்படி இலக்கமிட்டு அவற்றை எழுதி அனுப்பவும். ஒரு முறை பேனுவினல் கோடிட்ட எழுத்துக்களை மறுமுறை உபயோகிக்கக் கூடாது.

எல்லா எழுத்துக்களையும் உபயோகிக்க வேண்டுமென்ற அவசியமுமில்லை.

ஆகக் கூடுதலான எழுத்துக்களைக் கொண்ட சொற்றொடரை எழுதி அனுப்புபவரே பரிசுக்கு உரியவர்.

★ இப்போட்டி அமரர் வன்னியசிங்கம் நினைவாக நடாத்தப்படுகிறது.

போட்டி விதிகள்:

★ இங்கு பிரசுரிக்கப்பட்டிருக்கும் படிவத்திலேயே விடைகளை எழுதி அனுப்பப்படவேண்டும்.
★ விடைகள் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.
★ ஆகக் கூடுதலான தொகை எழுத்துக்களாலான நீண்ட சொற்றொடரை எழுதி அனுப்புபவரே பரிசைப் பெற உரித்துடையவர்.
★ ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஆகக் கூடுதலான ஒரே தொகை அளவு எழுத்துக்களைக் கொண்ட சொற்றொடர்களை எழுதியனுப்பி யிருந்தால் பரிசு அதிர்ட்டச் சீட்டு முறையில் தேர்ந்தெடுக்கப்படும்.
★ இந்தப் போட்டியில் வளர்மதி உறுப்பினர்கள் மட்டுமன்றி உறுப்பினரல்லாத வாசகர்களும் பங்குபற்றலாம். பரிசு பெறுபவர் வளர்மதி உறுப்பினராக இருந்தால் அவருக்கு வளர்மதி சிறப்புப் பரிசாக மேலும் 5-00 ரூபா கொடுக்கப்படும். வளர்மதி உறுப்பினர் அல்லாதவராக இருந்தால் அவருக்கு 5-00 ரூபா பரிசாக வழங்கப்படும்.
★ இப் போட்டியின் முடிவுத் திகதி 13-10-65.
★ கீழேயுள்ள முகவரியைக் கத்தரித்து கடித உறையில் ஒட்டி அனுப்பப்படும் விடைகள் மட்டுமே பரிசீலனைக்கு எடுக்கப்படும்.
★ இது வெறும் விநோதப் போட்டியே. பிரவேசக் கட்டணம் கிடையாது.

அமரர் வன்னியசிங்கம்
நினைவுப் போட்டி,
மே/பா வளர்மதி,
த. பெ. எண் 1183,
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ஆயிரக்கணக்கான மக்களின் உள்ளங்களில் மங்கா ஒளி விளக்கை இவள் ஏற்றி வைக்கிறுள்! ★

● ● ● இப்பொழுது வெற்றிகரமான 3வது வாரம்! ● ● ●

சென்ட்ரல் (மருதானை) — ஈரோஸ் (பாமன்கடை) — ராணி (யாழ்ப்பாணம்) — ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) — ஜோதி (திருகோணமலை) — லிபேர்டி (ஹட்டன்) — லிபேர்டி (பதுளை) — ஆனந்தா (கம்பளை)

டைரக்ஷன் : ஜோசப் தளியத் ★ இசை : டி. ஆர். பாப்பா



பாலா மூவீஸ்



அளிக்கும்



பாலு புரொடக்ஷன்சாரின்

# ★ விளக்கேற்றியவள் ★

ஆதித்தன்—வசந்தா—எம். ஆர். ராதா—அசோகன்—நாகேஷ்—ஷீலாதேவி—கே. ஆர். விஜயா

கருத்துள்ள பாடல்கள்! ★ விறுவிறுப்பான கதை! ★ புதுமையான சண்டைகள்!


**உங்கள் குடும்பத்துடன் இன்றே சென்று பாருங்கள்!**

---

இப்பொழுது

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) **திரையில்**

தீர வீர பராக்கிரமச் செயல்கள் நிறைந்த-



தேவரின்

## தெய்வத் திருமகள்

அசோகன்—முத்துராமன்—சந்திரகாந்தா—நாகேஷ்—மனோரமா நடித்தது

வெகு விரைவில்!

கெப்பிட்டல் முதலான சினிமாஸ் திரைகளில் ஆரம்பமாகிறது!

---

ஒவ்வொரு குடும்பத்தாரும் தங்கள் வீட்டுப் பிள்ளை என்று கொண்டாடும் தகைமை பெற்றவன்—

தீபாவளி காலத்தில் உங்களை மகிழ்விக்க

**சினிமாஸ் திரைகளுக்கு**

வருகிறன்!

புரட்சி நடிகர்

**எம். ஜி. ஆர்**

இரட்டை வேடங்களில் தோன்றும்





## எங்க வீட்டுப் பிள்ளை

---

ஆனந்த மூட்டும்

5வது வாரமாக

**கிங்ஸ்லி**

**பிளாஸா**

மற்றும் சினிமாஸ் திரைகளில்

## கை கொடுத்த தெய்வம்

---

யாழ்ப்பாணம் **வின்சர்** திரையில்

**இரசிகர்களை மகிழ்வூட்டுகிறது!**

## 9ம் திகதி சனி முதல்

**எல்பின்ஸ்டன் — ரெக்ஸி**

**இம்பீரியல்** (மட்டக்களப்பு) — **ஓடியன்** (கண்டி)

ஆகிய திரைகளுக்கு வருகிறது!

* புதுமையான கதை அமைப்பு
* பூரிக்க வைக்கும் காட்சிகள்
* குளிர்ச்சியூட்டும் பலவர்ணத்தில் தயாரான

**சிவாஜி கணேசன் அளிக்கும்**

## புதிய பறவை

சிவாஜி கணேசன், சரோஜாதேவி, எம். ஆர். ராதா
சௌகார் ஜானகி, நாகேஷ், வி. கே. ராமசாமி
நடித்தது.



---

4வது வாரம்!

**செல்லமகால்**

**மற்றும் திரைகளில்!**

தந்தையைக் கொன்ற கொலைஞனைத் தேடி பழிதீர்க்கப் புறப்படும் தனயன் படும் பாட்டைச் சித்தரிக்கும் பாங்கான படம்.

முத்துராமன், சௌகார் ஜானகி, சந்திரகாந்தா, டி. கே. ராமச்சந்திரன், வி. கே. ராமசாமி மனோரமா, எஸ். ராமராவ் தோன்றும்

## நினைப்பதற்கு நேரமில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1965-ம் வருடம் ஒக்டோபர் மாதம் 10-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.